

எது முதலில் - 6



முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? - 11



ஜாதி ஒழிந்தது - இந்தியில் -14


டாக்டர் அம்பேத்கர் அவர்களை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதிலிருந்து வழி மறித்தது யார்? வெளிச்சத்திற்கு வந்த உண்மை! -22



அன்வர் பாலசிங்கம் எழுதிய கருப்பாயி என்கிற நூர்ஜஹான் நூலுக்கு மறுப்பு - 39




அப்சல் குரு தூக்கிலடப்படத்தான் வேண்டுமா? - 47




பெய்ரூட்டிலிருந்து ஜெருசலேம் வரை - 52



நாலணா என்ன செய்ய முடியும்? -59



கஷ்மீரின் பாதி விதைவைகள் - 67




அரபுலக எழுச்சி - 73

## கவர் ஸ்டோரி




புரோகித்தின் லேப்டாப்பில் இருந்ததென்ன?

பக்கம் -**26**



ஹஜ்ஜின் மானியம் - 76




கர்கரேயை கொலை செய்தது யார்? -78


# வைகறை வெளிச்சம்


**ஜுன் - ஜுலை 2012 - ஹிஜ்ரி 1433 ஷாபான் - ரமளான்**

ஆசிரியர்:
**மு.குலாம் முஹம்மது.** M.A
(Journalism & Mass Communication)

துணை ஆசிரியர்:
**கே.எம். இல்யாஸ் ரியாஜி**

**தனி இதழ் ரூ.15/-, ஆண்டு சந்தா உள்நாடு ரூ.180/-, வெளிநாடு ரூ.1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் **வைகறை வெளிச்சம்** என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

எண்.52/1 மண்ணடி தெரு, 4வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை-1.
தொலைபேசி: 044-45566909, கைபேசி : 9444239594


அவர்களுடைய உடன்படிக்கைக்குப்பின், தம் சத்தியங்களுடைய மார்க்கத்தைப் பற்றியும் இழித்துக் குறை சொல்லி கொண்டு இருப்பார்களானால், அவர்கள் (மேற்கூறிய செயல்களிலிருந்து) விலகிக் கொள்வதற்காக நிராகரிப்பவர்களின் தலைவர்களுடன் போர் புரியுங்கள்; ஏனெனில் அவர்களுக்கு நிச்சயமாக ஒப்பந்தங்கள் (என்று எதுவும்) இல்லை. (அல்குர்ஆன் 9:11)


All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai Courts. Private Circulation to promote Original Issue.

**தலையங்கம்**

## மரணத்திலும் மறுக்கப்படும் கண்ணியம்

*"அந்த விதவைகள் இறந்து பட்டால் அவர்களின் உடல்களை துப்புரவு தொழிலாளர்கள் இரவில் எடுத்துச்சென்று துண்டு துண்டாக வெட்டுகின்றார்கள். பின்னர் ஒரு கோணிப்பையில் அடைத்துக் காணாமல் ஆக்குகின்றார்கள். இதுவும் அவர்களுக்கு உயிருடன் இருக்கும் விதவைகள் சில சில்லறைகளைத் தந்த பின்னர் தான் நடக்கின்றது. காரணம் அவர்களின் இறுதி சடங்குகளுக்கென நிதியேதும் இல்லையாம் " : ஆர்த்தி தார்* (The Hindu : Dt. 8.1.2012 - Dignity denied even in death for Vrindavan widows.)

*"மரணத்திலும் விருந்தாவன் (உத்திரப்பிரதேசம்) விதவைகளுக்கு கண்ணியம் மறுக்கப்படுகின்றது." என்ற தலைப்பில் ஜனவரி திங்கள் எட்டாம் நாள் இந்து பத்திரிக்கை வெளிச்சத்திற்கு கொண்டு வந்த ஆய்வறிக்கையின் வரிகளே மேலே நாம் எடுத்துக் காட்டியவை. தி ஹிந்துவுக்கு நன்றிகள் பல.*

*இந்த நிலையில் தான் இன்னும் **3151** விதவைகள் விருந்தாவனிலுள்ள அரசு விதவைகள் மையத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.*

*விதவைகளின் இந்த அவலங்களை ஓர் அறிக்கையாகத் தயாரித்து தந்தவர் நீதிபதி அல்தமாஷ் கபீர். இவர் தேசிய சட்ட சேவை ஆணையத்தின் தலைவர்.*

*ஆகஸ்ட்,**11,2011**-இல் இதே விருந்தாவன் விதவைகள் பற்றி இந்து பத்திரிக்கை வெளியிட்ட செய்தியைப் படித்த நீதிபதி அவர்கள் தானாக முன் வந்து ஒரு கள ஆய்வை நடத்தி இந்த விதவைகளின் இறுதி சடங்காவது கண்ணியமாக நடக்கவேண்டும் என அரசுக்கு அறிக்கை தந்தார். அதனை ஊடகங்களுக்கும் தந்து ஊரறிய செய்தார்.*

*இத்தனையும் எங்கே நடக்கின்றது என்றால் நமது மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தை வளர்ச்சி அமைச்சகத்தின் சார்பில் நடத்தப்படும் விடுதிகளில் தாம். இந்த அமைச்சகமும் இவற்றின் பராமரிப்பை தன்னார்வு குழுக்களுக்கு தாரை வார்த்துத் தந்திருக்கின்றது.*

*"இந்த தன்னார்வ குழுக்களுக்கு ஒவ்வொரு விதவைக்கும் தலா மாதம் ரூ,**300** மட்டுமே வழங்கப்படுகின்றது. இஃது அல்லாமல், அந்த விதவைகள் பிச்சையெடுக்கவும் பஜனைகள் பாடி கிடைக்கும் கூலியில் வாழ்ந்திடவும் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்"*

*"இந்த ரூபாய் **300** அந்த விதவைகளுக்குச் சென்று சேருவதில்லை. இந்தத் தன்னார்வ குழுக்கள் விழுங்கிவிடுகின்றன."*

Report by District Legal Services Authority - The Hindu. 8.01.2012

*இஃது விருந்தாவனில் மட்டுமல்ல வாரநாசியில் வாழும் விதவைகளுக்கும் பொருந்தும் என்பது ஏற்கனவே ஊடகங்களில் வலம் வந்த உண்மை,*

*இது போன்ற செய்திகள் அனைவரின் உள்ளங்களையும் உருக்கும் என்பதில் ஐயமில்லை.*

*ஒருநாள் செய்தி. மறுநாள் அதனை கண்டித்தும் மனவேதனைகளைக் கொட்டியும் கருத்துக்களைச் சுமந்து வரும் கடிதங்கள் அதே பத்திரிக்கைகளில் இடம் பெறும். அதன் பின் இன்னொரு முறை இது போன்ற உள்ளத்தை உருக்கும் நிகழ்வுகள் நடக்கும் வரை எல்லாம் மறக்கப்பட்டு விடும்.*

*விருந்தாவனில் அல்லது வாரநாசியில் வதைபடும் விதவைகளாகட்டும்; இவர்கள் அனைவரும் நல்வாழ்வு மட்டுமல்ல, மறுவாழ்வும் பெற்றிட வேண்டும் என்பதற்காக ஓர் இமாலய முய்ற்சி எடுக்கப்பட்டது சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்,*

*அந்த முயற்சி தான் 1990களில் நடத்தப் பெற்ற ஆய்வும் நாடெங்கிலும் நடத்தப்பெற்ற விவாதங்களும், இவற்றை இந்நாட்டு பாசிஸ்டுகள் வன்முறையைக் கொண்டு மடக்கிப் போட்டு விட்டார்கள்.*

*இந்த விவாதங்களை இந்தியாவின் கீர்த்தி மிக்க நிறுவனம் என உலகெங்கும் சிறந்த மேலாளர்களை உருவாக்கித்தரும் நிறுவனம் என போற்றப்படும்* Indian Institute of Management- Bangalore *என்ற நிறுவனம் தான் ஏற்பாடு செய்தது,*

*விதவைகள் பற்றிய ஆழமான அகலமான கள ஆய்வு ஒன்றை நடத்துவதற்கு இந்திய ஆய்வாளர்களுக்கு உதவி செய்திட, நெதர்லேண்ட் என்ற நாட்டைச் சார்ந்த* Netherlands International Development Co-operation Programme *என்ற ஆராய்ச்சி நிறுவனத்தை நடத்திவரும்* Mac Arthur Foundation *சுவிடன் நாட்டைச் சார்ந்த* Sedish International Development Co-operation Agency SIDA *என்ற அமைப்பும் உலக நிறுவனமான* World Institute for Development Economics *என்ற அமைப்பும் முன் வந்தன, உதவி செய்தன,*

*இவர்கள் ஐந்தாண்டுகள் நடத்திய கள ஆய்வின் முடிவில் 456 பக்கங்களைக் கொண்ட* Widows in India *என்ற தொகுப்பொன்று வெளியிடப்பட்டது. (இந்த ஆய்வுத் தொகுப்பு வைகறை அலுவலகத்தில் கிடைக்கும்)*

*அந்த ஆய்வில் பின்வரும் உண்மைகள் வெளிவந்தன.*

*1, உலகிலே இந்தியாவில் தான் அதிகமான விதவைகள் வாழ்கின்றார்கள். சுமார் 8 கோடி. காரணம் கணவனை இழக்கும் பெண்களுக்கு மறுமணம் செய்து கொள்ளும் உரிமை இங்குள்ள பெரும்பான்மை சமுதாய அமைப்பில் இல்லை.*

*2, திருமணமாகாமலேயே பெண்கள் விதவையாகும் பழக்கம் ஒன்று இந்தியாவில் தான் பின்பற்றப்படுகின்றது. சிலபல இந்து சமுதாய அமைப்பில் பெண் குழந்தைகள் பருவமடைவதற்கு முன்பே திருமண ஒப்பந்தத்திற்குப் பெற்றோர்களால் உள்ளாக்கப்படுகின்றார்கள். இஃது பரவலாக வட இந்தியாவில் இருக்கின்றது. ஒப்பந்தம் செய்து கொள்ளும் ஆண்குழந்தை திருமணத்திற்கு முன்பே இறந்து விட்டால் அந்தப் பெண்குழந்தை விதவையாகி விடுகிறது. உலகை அறியாத நாளில் அவள் விதவையாகி விடுகின்றாள். அதன் பின் அவள் அமங்கல வாழ்க்கையையே வாழ்ந்திட வேண்டும்.*

*3. கணவன் இறந்து விட்டால் மனைவியும் இந்து சமுதாயத்தில் இறந்து விடுகின்றாள் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். இதனை* Social Death *சமுதாயச் சாவு என எடுத்துக் கொள்கின்றார்கள்.*

*4.* இந்து வழக்கங்கள் கணவன் இறந்து விட்டால் மனைவி அதன் பிறகு வாழ்ந்திடக் கூடாது. அதனால் அவள் உடன்கட்டை ஏறிட வேண்டும் எனக்கூறுகின்றது. இதன் மூலம் கணவனின் குலப்பெருமை பாதுகாக்கப்படும் என நம்பப்படுகின்றது.

*5.* இந்து சட்டங்களின் அடிப்படை எனக் கருதப்படும் மனுஸ்மிருதி கணவனை இழந்த பெண்கள் உடன் கட்டை ஏறிட வேண்டும் எனக் கூறிடவில்லை. ஆனால், அது அவள் அமங்கலப்படவேண்டும். தலை மழிக்கப்படவேண்டும் என்பனவற்றை சட்டமாகத் தருகின்றது. விதவையான பெண்கள் தங்கள் கணவனின் குடும்ப கண்ணியத்தை காப்பாற்றுவதற்காக கால முழுவதும் கடுமையான நிபந்தனையின் கீழ் வாழ்ந்திட வேண்டும். காரணம் இளம் விதவைகள் ஆபத்தானவர்கள்.

*6.* உமா சக்ரவர்த்தி என்ற பெண்மணி தனது ஆய்வில் ஜாதிய அமைப்பு முறைக்கு இதில் ஒரு பங்குண்டு என்கின்றார்.

சில இடங்களில் உயர் ஜாதியினர் தாழ்ந்த ஜாதியிலுள்ள இளம் பெண்கள் மறுமணம் செய்து கொள்ளலாம் என அனுமதித்திருக்கின்றார்கள். அந்தப் பெண்கள் பெறும் குழந்தைகளின் வழி அவர்களுக்கு அடிமையாக கிடைப்பவர்களின் எண்ணிகை பெருகும் என்பதே நோக்கம். (இதற்கு எடுத்துக்காட்டு Chukras in UP ) உத்திரப்பிரதேசத்திலுள்ள சுக்ராஸ் என்ற தாழ்த்தப்பட்ட மக்களைக் குறிப்பிடலாம் (Widows in India Social Neglect and Public Action Marhta Alterchen - Sage Publications)

*7.* சொத்துக்களில் பங்கில்லை என்ற நிலை அவர்களை வாரணாசிகளை நோக்கியும் விருந்தாவனை நோக்கியும் விரட்டுகின்றது.

அங்கே இறப்பில் கூட அவர்களுக்கு ஒரு கண்ணியமான முடிவு கிடைப்பதில்லை.

இதில் மிகவும் வேதனை என்னவெனில் இந்தப் பெண்களின் அவலங்களை வெளியே கொண்டு வந்திட முனைவோரின் வாய்களுக்கு போடப்படும் பூட்டுத்தான்.

நாம் இதிலே குறிப்பிட்டுள்ள ஆய்வாளர்களும் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளும் உலகளாவிய பின்புலத்தைக் கொண்டது என்பதை எளிதில் புரிந்திட இயலும். ஆனால் அஃது பரவலாக்கப்படவில்லை. அந்தப் பெண்களுக்கும் நிவாரணங்கள் எதையும் பெற்றுத்தந்திடவில்லை.

இந்த மொத்த கள ஆய்வும் அதன்பின் தயாரிக்கப்பட்ட 456 பக்க ஆய்வுத் தொகுப்பும் முஸ்லிம் சமுதாயத்தையோ இஸ்லாத்தின் வாழ்க்கை வழிகாட்டுதலையோ ஏறெடுத்தும் பார்த்திடவில்லை. பார்த்திருந்தால் அங்கே இது போன்ற அவலங்கள் கிஞ்சிற்றுமில்லை என்பதைக் கண்டுபிடித்திருப்பார்கள்.

கணவன் இறந்துவிடுவது என்பது அவனை வாழ்க்கைத் துணையாக வாழ்க்கை ஒப்பந்தத்தின் மூலம் ஏற்றுக்கொண்ட பாவையின் பாவமோ கொண்டவரின் குற்றமோ அல்ல. அவள் தொடர்ந்து வாழ்ந்திடும் உரிமையை பெறுகின்றாள். மறுமணம் என்பது அவளது விருப்பப்படி நிறைவேற்றப்படும் உரிமை.

திருமணத்தைப் பற்றி இப்படிக்கூறுகின்றான் எல்லோரையும் படைத்த இறைவன்:

“இன்னும், நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுதற்குரிய (உங்கள்) மனைவியரை உங்களிலிலிருந்தே அவன் படைத்திருப்பதும் உங்களுக்கிடையே உவப்பையும் கிருபையும் உண்டாக்கி இருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. அல்குர்ஆன் : 30-21

இப்படி ஆறுதலை தரும் மனைவியின் கணவன் இறந்து விட்டால் அவளுடைய நிலை அங்கேயே பாதுகாப்பைப் பெறுகின்றது பின்வரும் இறைவனின் வழிகாட்டுதலால்.

உங்களில் எவரேனும் மனைவியரை விட்டு இறக்கும் நிலையில் இருப்பார்களானால் தங்கள் மனைவியருக்கு ஓராண்டு வரை (உணவு உடை போன்ற தேவைகளைக் கொடுத்து ஆதரித்து) வீட்டை விட்டு அவர்கள் வெளியேற்றப்படாதபடி வாரிசுகளுக்கு அவர்கள் மரண சாசனம் கூறுதல் வேண்டும். ஆனால் அப்பெண்கள் வெளியே சென்று முறைப்படி தங்கள் காரியங்களைச் செய்து கொண்டார்களானால் அதில் உங்கள் மீது குற்றமில்லை. மேலும் அல்லாஹ் வல்லமையுடையவனும் அறிவாற்றல் உடையோனும் ஆவான். (அல் குர்ஆன் 2:240 மேலும் பார்க்க 2:234)

அவர்கள் கையறு நிலைக்கு வந்துவிடாமல் சொத்துக்களில் அவர்களின் உரிமையை இப்படி உறுதி செய்கின்றான். நாம் இந்த உலகில் எப்படி வாழ்ந்திட வேண்டும் என வழிகாட்டித் தந்த இறைவன் பெற்றோரோ நெருங்கிய உறவினர்களோ விட்டுச்சென்ற சொத்தில் ஆண்களுக்கு பாகமுண்டு, அவ்வாறே பெற்றோரோ நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற சொத்தில் பெண்களுக்கும் பாகமுண்டு. அதிலிருந்துள்ள சொத்து குறைவாக இருந்தாலும் சரி அதிகமாக இருந்தாலும் சரியே! இது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டதாகும். அல்குர்ஆன் 4:7

அதேபோல் கணவனால் மணவிலக்குப்பெற்ற பெண்களுக்கும் கணவன் இறந்த பெண்களுக்கும் மறுமணம் செய்து கொள்ளும் உரிமை இறைவனின் நிரந்தர ஏற்பாடாகும்.

அவர்கள் தங்கள் (இத்தா) காத்திருக்கும் தவணை புரிந்திட செய்துவிட்டால் அவர்கள் தாங்கள் விரும்பி ஏற்கும் கணவர்களை முறைப்படி திருமணம் செய்து கொள்வதைத் தடுக்காதீர்கள். உங்களில் யார் அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் நம்பிக்கைக் கொண்டுள்ளார்களோ அவர்களுக்கு இதைக்கொண்டு உபதேசிக்கப்படுகின்றது. இதன்படி நடப்பது உங்களுக்கு நற்பண்பும் தூய்மையாகும். இதனை அல்லாஹ் அறிவான் நீங்கள் அறிய மாட்டீர்கள். அல்பகரா 2:232

ஆதலால் தான் விதவைகள் என்றொரு பிரச்சனை இஸ்லாமிய சமுதாய அமைப்பில் எழுவதே இல்லை.

இந்த இறை ஏற்பாடுகளை முஸ்லிம்கள் முழுஅளவில் பிரச்சாரம் செய்ய முன் வரவேண்டும். இதர சமுதாய அமைப்பினரும் இதனை ஏற்று இதன்படி வாழ்ந்திட முன்வந்திட வேண்டும். அதன் மூலம் அவர்கள் இந்த உலகிலும் மரணத்தை தொடர்ந்து வரும் வாழ்விலும் கண்ணியத்தை பெறலாம்.

# எது முதலில்?

பேரறிஞர் யூசுப் அல் கர்ளாவி



## நம் வீழ்ச்சிக்கான காரணங்கள்

ஒப்பாரும் மிக்காருமில்லாத சமுதாயமாகத் திகழ்ந்த முஸ்லிம்கள் ஒரு கட்டத்தில் வீழ்ச்சியடைந்து பின்னர் தொடர்ந்து வீழ்ந்து கொண்டே போவதற்குச் சில காரணங்கள் உண்டு அவை,

1. முஸ்லிம் சமுதாயத்துக்கு நலன் பயக்கும் காரியங்களை முஸ்லிம்கள் கைவிட்டு விட்டனர் கல்வியில் நாம் இதர சமுதாயங்களை விஞ்சியிருக்க வேண்டும் போர்த்துறையிலும் தொழில் துறையிலும் நாம் யாருக்கும் சளைத்தவர்களல்லர் என்று திகழ்ந்திருக்க வேண்டும். இவற்றின் மூலம் மற்றவர்கள் நமக்குத் தலைமை யேற்பதற்குப் பதிலாக நாமே நமக்குத் தலைமையேற்று நமது முடிவுகளை நாமே எடுத்திட முடியும்.

முஸ்லிம் சமுதாயம் எப்படிப்பட்ட சமுதாயம் தெரியுமா? என்று வீண் ஜம்பமடித்துக் கொண்டும் பீற்றிக் கொண்டுமிருக்காமல் நிஜமாகவே நாம் தன்னிறைவு பெற்று விட முடியும்.

இது போல இஸ்லாமிய சட்டத்துறையில் புதிய ஆராய்ச்சிகள் வர வேண்டும் நவீனப் பிரச்சனைகளுக்கான முடிவுகள் அகழ்ந்தெடுக்கப்பட வேண்டும், இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் தாவா பணி பரவலாக்கப்பட வேண்டும். பைஅத் எனும் சத்தியப்பிரமாணத்தின் அடிப்படையில் அமையும் (ஷூறா) ஆலோசனை மையம் வேண்டும். ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் மக்களுக்கு வேண்டும் இஸ்லாத்தை ஓரங்கட்டிவிட்டு வாழும் அநியாயக்கார ஆட்சியாளர்களை எதிர்த்து அகற்றிட வேண்டும் இவ்வாறாக எவ்வளவோ உள்ளன.

இவற்றையெல்லாம் முஸ்லிம் சமுதாயத்தில் சிலராவது செய்ய ண்டும். சிலர் செய்தால் மற்றவர்கள் மீது இந்தக் கடமை நீங்விடும் இது ஒரு ஃபர்ளு கிஃபாயா ஆனால் இவற்றைச் செய்திட எவருமில்லாமல் போனதால் நாம் வீழ்ந்தோம். வீழ்ந்து கொண்டிருக்கிறோம்.

2. ஒவ்வொரு முஸ்லிமும் கண்டிப்பாக செய்து தீர வேண்டிய கடமை (ஃபர்ளுஅய்ன்)களில் சிலவற்றைக் கூட தாம் செய்யாமலிருக்கின்றோம். அல்லது அதற்குரிய முக்கியத்துவத்தைத் தராமலிருக்கின்றோம் இதற்கு உதாரணமாக நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் பணியைக் குறிப்பிடலாம்.

இறை நம்பிக்கையுள்ள சமுதாயத்தை வருணிக்கும் போது தொழுகை, ஸகாத் ஆகியவற்றை விடவும் இதை அல்லாஹ் முதலில் கூறியுள்ளான்.

இறைநம்பிக்கையுள்ள ஆண்களும் இறைநம்பிக்கையுள்ள பெண்களும் ஒருவர் மற்றவரின் நலன் விரும்பிகள். இவர்கள் நன்மையை ஏவுவார்கள், தீமையைத் தடுப்பார்கள். தொழுகையை நிலை நாட்டுவார்கள். ஸகாத் கொடுப்பார்கள். (9 : 71)

இந்த சமுதாயம் சிறந்த சமுதாயமாகத் திகழ்வதற்கு முதல் காரணமாக இருப்பதே இந்தப் பணிதான் என்பதை அடுத்த வசனத்தில் அல்லாஹ் தெளிவுபடுத்துகிறான்.

மக்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்ட சமுதாயத்தில் நீங்களே சிறந்த சமுதாயமாக இருக்கிறீர்கள். நீங்கள் நன்மையை

ஏவுகின்றீர்கள் தீமையைத் தடுக்கின்றீர்கள். (3 : 110)

இந்தக் கடமையைக் கைவிட்டதால் இஸ்ரவேல் சமுதாயம் தன் நபிமார்களுடைய சாபத்துக்கு ஆளாகிவிட்டது என்றும் கூறி எச்சரிக்கிறான் இன்னொரு வசனத்தில்..

"இஸ்ரவேல் சமுதாயத்திலுள்ள இறை மறுப்பாளர்கள் தாவூத் (நபி), மர்யமின் மைந்தர் ஈஸா (நபி) ஆகியோரின் நாவினால் சபிக்கப்பட்டார்கள் அவர்கள் மாறு செய்ததும் வரம்பு மீறியதும் இதற்குக் காரணம் அவர்கள் செய்து கொண்டிருந்த தீமை□ருந்து ஒருவர் மற்றவரைத் தடுக்காமலிருந்தனர். அவர்கள் செய்து கொண்டிருந்தது தீய செயல்" (5 : 78,79)

3. சில கடமைகளை விட வேறு சில கடமைகளுக்கு முக்கியத்துவம் தருவதும் முஸ்லிம்களின் வீழ்ச்சிக்குக் காரணம்.

உதாரணமாக தொழுகையை விட நோன்புக்கு அதீத முக்கியத்துவம் தரப்படுகிறது பட்டிணங்கள் முதல் பட்டி தொட்டிகள் வரை முஸ்லிம்கள் வாழும் பூமியில் ரமழான் நோன்பை அனைவரும் தவறாமல் நோற்கின்றனர். எவரும் நோன்பை விடுவதில்லை இது நல்லதே சரியானதே ஆனால் நம்மில் பலர் குறிப்பாக பெண்கள் பலர் தொழுகையை நிறைவேற்றுவதில் மெத்தனமாக இருக்கின்றனர். தம் வாழ்நாளில் அல்லாஹ்வுக்காக ஒரு ஸஜ்தாவோ ருகூவோ செய்தறியாதவர்களைக் கூட காணமுடிகிறது.

திருக்குர்ஆனில் அல்லாஹ் தொழுகையையும் ஸகாத்தையும் எட்டு வசனங்களில் ஒன்றாக இணைத்துக் கூறியிருக்கிறான். ஆனால் நம்மில் பலர் தொழுகைக்குத் தரும் முக்கியத்துவத்தை ஸகாத்துக்குத் தருவதில்லை.

நபித்தோழர் இப்னு மஸ்ஊத் (ரழி) கூறினார்கள், "தொழுகையை நிலை நாட்டும்படியும் ஸகாத் கொடுக்கும்படியும் எங்களுக்குக் கட்டளையிடப்பட்டது எனவே யார் ஸகாத் கொடுக்கவில்லையோ அவருக்குத் தொழுகையே இல்லை" (நூல் : தப்ரானீ)

ஸகாத்தையும் தொழுகையையும் பிரித்துப்பார்ப்பவனை எதிர்த்து நான் நிச்சயமாகப் போர்தொடுப்போன் என்று அபூபக்கர் சித்தீக் (ரழி) கூறினார்கள் (நூல் : புஹாரி, முஸ்லிம்)

நான் ஒரு நபி என்று கூறித்திரிபவர்களையும் அவர்களைப்பின் பற்றுவதாகக் கூறும் மதம் மாறியவர்களையும் எதிர்த்துப் போரிட வேண்டும் என்பதைப் போலவே ஸகாத்தைத் தர மறுப்பவர்களையும் எதிர்த்துப் போரிட வேண்டும் என்பதில் நபித் தோழர்கள் ஒத்த கருத்துடனிருந்தனர் இக்கருத்தில் எவரும் மாறுபடவில்லை. இப்படியிருக்க சில கடமைகளை நாம் முக்கியத்துவப்படுத்தி சில கடமைகளை ஒரேடியாகக் கைவிடுவதும் நம் வீழ்ச்சிக்குக் காரணம்.

வரலாற்றில் முதன் முதலாக ஏழைகளின் உரிமைகளை மீட்பதற்காக (தம்குடி மக்களுக்கு எதிராகவே) ஒரு போரை நடத்திய அரசு உண்டென்றால் அது இஸ்லாமிய அரசுதான்.

கட்டாயக்கடமை (ஃபர்ளு) களையும் கடமை (வாஜிப்)களையும் விட நஃபில் (உபரி வணக்கங்)களுக்கு நாம் முக்கியத்துவம் தருகின்றோம் சிலர் இறைத்துதிகளுக்கு (திக்ர், தஸ்பீஹ்களுக்கு) தரும் முக்கியத்துவத்தை கடமைகளுக்கு குறிப்பாக சமூகக் கடமைகளுக்குத் தருவதில்லை.

பெற்றோரைப் பரமாரிக்க வேண்டும். உறவுகளைப் பேண வேண்டும். அண்டை வீட்டாரிடம் அழகிய முறையில் பழக வேண்டும். பலஹீனமானவர்கள் மீது அன்பு செலுத்த வேண்டும். அனாதைகளையும் ஏழைகளையும் அரவணைத்திட வேண்டும். சமூக அநீதிகள் அரசியல் அநீதிகளுக்கு எதிராகப் போராட வேண்டும் இவை சமூகக் கடமைகள்.

இவற்றையெல்லாம் பின்னுக்குத்தள்ளி விட்டு திக்ரு, தஸ்பீஹ்களுக்கு மட்டுமே முதலிடம் தருகின்றோம் இதனாலும் நாம் வீழ்ந்தோம் வீழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

5. சமூக நலன் சார்ந்த வணக்கங்களான ஜிஹாத், மார்க்கச்சட்டங்களை அறிதல் சமூகப்பிணக்குகளை அகற்றுதல், நன்மைக்கும் இறையச்சத்துக்கும் பரஸ்பரம் உதவிக் கொள்ளுதல், பொறுமை இரக்கம் ஆகிய

நற்பண்புகளைக் கடை பிடிக்கும்படி பரஸ்பரம் நினைவூட்டிக் கொள்தல், நீதியை நிலை நாட்டும்படியும் ஷுறா எனும் கலந்தாலோசனை பற்றியும் ஒருவர் மற்றவருக்கு அறிவுறுத்திக் கொள்ளுதல், சமூக நீதியையும் குறிப்பாக ஒடுங்கிக்கிடப்போரின் நீதியையும் மீட்டெடுப்பது ஆகிய சமூக நலன் சார்ந்த செயல்களும் (இபாதத்)வணக்கங்களே.

இவற்றைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு தொழுகை திக்ரு என்று தனி நபர் நலன் சார்ந்த வணக்கங்களை மட்டுமே நிறைவேற்றுகிறோம். இதுவும் நம்வீழ்ச்சிக்குக் காரணம்.

6. ஒரு கட்டிடத்தின் அஸ்திவாரம் போன்றது அகீதா எனும் கொள்கை. ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கை, தவ்ஹீத் எனும் ஏகத்துவக் கோட்பாடு, இஹ்லாஸ் எனும் உளத்தூய்மை இந்த அடிப்படைகளைப் பாழாக்கி விட்டு பிரிவுச் செயல்களில் நாம் முழு வேகம் காட்டுகிறோம். அடிப்படைகளைப் பாழ்படுத்தியவன் இறைவனை அடையமுடியாது என்ற பழமொழியை மறந்து விட்டோம். இவ்வாறு அஸ்திவாரத்தை ஆட்டம் காண விட்டதாலும் நாம் வீழ்ந்தோம் வீழ்ந்து கொண்டிருக்கிறோம்.

7. சமுதாயத்தில் ஹராமான பாவமான செயல்கள் பரவிக் கிடக்கின்றன. செய்ய ண்டிய அவசியப்பணிகள் நிறைவேற்றப் படாமலிருக்கின்றன. இவற்றுக்கு எதிராக போராடுவதை விட (ஹராமா ஹலாலா என்று முடிவுக்குவர இயலாத) சந்தேகத்துக்கு இடமான பிரச்சனைகளுக்கும் மக்ரூஹான விஷயங்களுக்கும் எதிராக முழுவீச்சில் போராடுகிறோம்.

ஹராம் என்று தீர்க்கமாகத் தெரிந்து விட்டபாவங்களை எதிர்த்துப் போராடமலி ருப்பதே பெரும் தீங்கு.

போட்டோ (Photo) எடுப்பது கூடுமா? இசை கேட்கலாமா? பெண்கள் நிகாப் எனும் முகத்திரை அணிவது கடமையா? என்பனவற்றைப் பற்றிப் பேசி பெரும் விவாதத்தீயை மூட்டி இதில் எனது முடிவே சரியானது என்று பொதுமக்களை தம்பக்கம் இழுப்பதிலேயே குறியாக இருக்கின்றனர் நம்மில் சிலர்.

அதே நேரத்தில் இவர்கள் முஸ்லிம் சமுதாயத்தின் நிகழ்கால இருப்பையும் எதிர்காலப்போக்கையும் பூமிப்பந்தின் மேல் பரப்பில் அது நிலைத்திருப்பதையும் தீர்மானிக்கும் பென்னம் பெரும் பிரச்சனைகளை ஏறெடுத்துக் கூடப் பார்ப்பதில்லை.

இதுவும் நம் வீழ்ச்சிக்குக் காரணம்.

சிலர் பெரும் பாவங்களைக் கண்டும் காணாமல் விட்டு விட்டு சிறுபாவங்களோடு மட்டுமே மல்லுக்கு நிற்கின்றார்கள்.

ஜோதிடம், சூனியம், குறிபார்த்தல், கப்ரு வணக்கம் தீய நேர்ச்சைகள், இறந்து போனவர்களுக்காகப் பலியிடுதல், மண்ணறைவாசிகளிடம் தம் தேவைகளுக்காக மன்றாடுதல், அவர்களிடம் தம் கவலைகளைப் போக்கிட வேண்டுதல் இவ்வாறான தூய ஓரிறைக் கோட்பாட்டுக்கு எதிரான மாபாவங்களையும் விட்டுவிடுகின்றோம். சமூக நீதி, ஷுறா எனும் கலந்தாலோசனை, மனித உரிமைகள், மனித மாண்பு ஆகியவை பாழ்பட்டுக்கிடக்கின்றன. தனி மனித சுதந்திரம் மறைந்து போய் விட்டது தலைமைப்பதவி தகுதியற்றவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் நியாயம் இல்லை. இந்த சமுதாயத்தின் செல்வங்கள் அபகரிக்கப் படுகின்றன. சில குடும்பங்களும் சில குழுக்களும் மற்ற முஸ்லிம்களை விட மேம்பட்டவர்களாக உயர்வர்க்கத்தினராக கருதப்படுகின்றனர். ஆடம்பரமும் அனாச்சார மும் எங்கும் பரவிக் கிடக்கின்றன இந்த மாபாவங்களையும் எதிர்ப்பதில் மெத்தனமாக இருந்து கொண்டே சிறு சிறு பாவங்களை எதிர்ப்பதில் பேரார்வம் காட்டுகின்றனர் நம்மில் பலர்.

இதுவும் நம்முடைய வீழ்ச்சிக்குக் காரணம். இப்படி நம்முடைய மார்க்கத்தையும் சமூகத்தையும் பதம்பார்க்கின்ற பாவங்களைக் கண்டு கொள்ளாமலிருப்பது நம்வீழ்ச்சிக்குக் காரணம்.

எது முதலில் செய்யப்பட வேண்டும் என்பதை தீர்மானிக்கத் தெரியவில்லை நமக்கு இது ஒரு பெரும் சோதனை.

சிறியதை பெரிதாக்குகிறோம். பெரியதைச் சிறியதாக்குகிறோம். முக்கியமானதைப் பின்னுக்கித் தள்ளிவிட்டோம் முக்கியமற்றதை முன்னே வைத்திருக்கிறோம். முதலில் செய்ய வேண்டியதை கடைசியாகச் செய்கிறோம். கடைசியாகச் செய்ய வேண்டியதை முதலில் செய்கிறோம். கடமை (பர்ளு)களைப் பாழ்படுத்தி விட்டு (நஃபில்) உபரிகளை விழுந்து விழுந்து செய்கிறோம். பெரும்பாவங்களை அலட்சியமாக அரங்கேற அனுமதித்து விட்டு சிறுபாவங்களைப்பற்றி பெருங்கவலைப்படுகின்றோம்.

எல்லோரும் ஒத்துக் கொண்டவைகளை கவனிக்காமல் கருத்து வேறுபாட்டுக் குரியவற்றில் பெரும் போர் நடத்துகிறோம்.

எனவே எது முதலில் என்பதை அறிந்து கொள்ள வேண்டிய அவசியத் தேவை இப்போது அவசரத்தேவையாகியிருக்கிறது.

இது பற்றிய ஆராய்ச்சிகள் விவாதங்கள் தொடங்க வேண்டும், தொடர வேண்டும், நல்ல முடிவும் தெளிவும் துலங்க வேண்டும். இதனால் நாம் அறிவாராய்ச்சியில் தன்னிறைவு பெறுவோம் நம் அகப்பார்வை வெளிச்சம் பெறும் மனக்குழப்பமின்றி செயல்படுவோம்.

இதன்பின்னர் சிறந்த பணிகளைச் செய்யவும் பணிகளை சிறப்பாகச் செய்யவும் நம் எண்ணங்கள் ஒரு முகப்பட்டு நிற்கும். எனவே எது முதலில் என்பதைக் கண்டறிவதே நம்முடைய முதல் பணி. ..........தொடரும்

தமிழில் : இல்யாஸ் ரியாஜி

## மகாகவி பாரதியார் நகரில் அம்பேத்கர் புரட்சி முன்னணியின் வேலூர் மாவட்ட பொறுப்பாளர் சிவா கைதைக் கண்டித்து பொதுக் கூட்டம்



19.5.2012 இல் மகாகவி பாரதியார் நகரில் அம்பேத்கர் புரட்சி முன்னணியின் சார்பில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்த கூட்டம் அம்பேத்கர் புரட்சி முன்னணியின் வேலூர் மாவட்ட பொறுப்பாளர் சி.ஜி. சிவா அவர்கள் கைது செய்யப்பட்ட பின்னணியில் ஏற்பாடு செய்யப்பட்டது.

கூட்டத்தில் திராவிட இயக்கங்கள் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைத்து வரும் கொடுமைகள், பெருமளவில் கண்டிக்கப்பட்டன.

திராவிட கட்சிகள் ஆட்சிக்கு வருவதெல்லாம் தலீத் மக்களின் ஒட்டுகளைப் பெற்றுத்தான். ஆனால் ஆட்சிக்கு வந்ததும் முதுகில் குத்துவதும் தலீத் மக்களைத் தான் என்ற ஆதங்கங்களும் கண்டனங்களும் கூட்டத்தின் மையப் பொருளாக மிகைத்து நின்றன.

கூட்டத்தில் வழக்கறிஞர், மனித உரிமை ஆர்வலர் புகழேந்தி, இந்திய தேசியலீக்-இன் தமிழ் நாடு பொதுச்செயலாளர் தா. அப்துல் ரஹீம், வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மத், சமூக நீதி பத்திரிகையின் ஆசிரியர் தமோதரன், திருவண்ணாமலை மாவட்ட அம்பேத்கர் புரட்சி முன்னணியின் செயலாளர் எம். வர்கீஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். சென்னை மாவட்ட தலைவர் எம் நந்தகுமார் தலைமை ஏற்றார். அம்பேத்கர் புரட்சி முன்னணியின் தலைவர் எம். துரை ராஜ் நிறைவுரையாற்றினார்கள், ஆலந்தூர் எம். எழிலரசு நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார், சென்னை மாவட்ட அமைப்பாளர் ஆர். அம்பேத்குமார் நன்றி கூறினார்.-நமது நிரூபர்



# BABY CARE Shopping

**M.M.THAHA**
+91 99437 60320

**M.M.ILEYAS, B.Sc.,**
+91 94435 26942

**Jinnah Complex, (Ground Floor - #10)**
**Opp. Municipal Hr. Sec. School**
**144, Pattamangala Street**
**Mayiladuthurai - 609 001.**
**E-mail : babycareshopping@hotmail.com**

# அரபுக்கள் இஸ்லாத்துக்கு முன்


பேரறிஞர் : அபுல் ஹசன் அலீ நத்வி,
மொழிபெயர்ப்பு : அஹ்மது ஜலாலுத்தீன் நத்வி.

*அரபுலகில் இஸ்லாம் அறிமுகமாவதற்கு முன் உலகில் வாழ்ந்த இதர சமுதாயங்களை விட சில நற்பண்புகளில் தனித்துவம் பெற்றுத் திகழ்ந்தனர் அரபுக்கள்.*

*மொழி ஆளுமை, நாவன்மை, சுதந்திர வேட்கை, வைராக்கியம், குதிரையேற்றம், வீரம், கொள்கையில் உறுதி, மனன ஆற்றல், எதையும் நேரடியாகச் சொல்லுதல் அனுபவ அறிவிலிருந்து பாடம் பெற்றிடும் துணிவு, சமத்துவத்தின் மீது நாட்டம், கொடுத்த வாக்கை நிறைவேற்றுதல், அமானிதம், எடுத்த முடிவை செயல்படுத்தும் வலிமை ஆகிய நற்பண்புகளில் அவர்களின் பாத்திரம்* (CHARACTER) *மிக நிறைவானது. அலாதியானது.*

*இப்படி நிறைவான நற்குணங்களின் நிலைக்களனாக நன்றிலங்கிய அரபுக்கள் பிற்றை நாட்களில் மதரீதியில் பெரும் வீழ்ச்சிக்கு இலக்காகி நின்றனர். இதற்குக் காரணம் இறைத்தூதர்களின் வருகைக்கும் அவர்களுக்கும் பெரும் கால இடைவெளி இருந்தது. இஃதன்றி அவர்களின் வாழ்விடம் ஒரு தீபகற்பம். இதர நிலங்களிலிருந்து தீபகற்பம் தனித்து நிற்பது போல் அதில் வாழ்ந்த அரபுக்களும் இதர சமுதாயங்களிடம் ஒட்டாமல் தனித்து நின்றனர். வழி வழியாக வந்த தம் முன்னோர்களின் கொள்கைகளையே பின்பற்றி வந்து கொண்டிருந்தனர்.*

*மூடத்தனமான இணைவைப்பு, குணக்கேடுகள், சமூகச் சீரழிவுகள் இவற்றில் அக்காலத்தில் வாழ்ந்த எந்த சமுதாயத்துடனும் ஒப்பிடமுடியாத அளவுக்கு அரபுக்கள் தனியாய் நின்றார்கள்.*



பேரறிஞர் அபுல் ஹசன் அலீ நத்வி

**மெல்ல வளர்ந்தது சிலை வணக்கம் :**

*அரபுக்களின் கொள்கை வழியும் தலையாய நம்பிக்கையும் ஷிர்க் எனும் இணை வைப்புத் தான். அல்லாஹ் தான் மாபெரும் இறைவன். இப்பேரண்டத்தைப் படைத்தவனும் வானங்களையும் பூமியையும் நிர்வகிப்பவனும் அவனே எல்லா அதிகாரங்களின் அதிபதியும் அவனே என்றே நம்பிக் கொண்டிருந்தனர் அரபுக்கள்.*

*இது பற்றி அல்லாஹ்வே தன் திருமறையில் கூறுகிறான் : அவர்களிடம் அவர்களைப் படைத்தது யார் என்று நபியே நீர் கேட்டால் அல்லாஹ் என்றே அவர்கள் நிச்சயமாகக் கூறுவார்கள் (43 : 87)*

*இப்படி இருந்த போதிலும் அவர்களின் மூடத்தனமான குறுகிய சிந்தனை*

இறைத்தூதர்கள் போதித்த தெளிவான தூய உயர்ந்த ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு தாராளமாக இருந்திடவில்லை.

ஒரு சராசரி மனிதன் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தால் அது உயர்ந்த வானங்களைத் துளைத்துச் சென்று அல்லாஹ்விடம் அங்கீகாரம் பெற்றிட ஓர் இடைத்தரகர் அவசியம் தேவை. மனிதனுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையே ஒரு தரகர் இன்றி துஆ ஏற்கப்படுவதில்லை என்று அவர்கள் கருதியதற்குக் காரணம் இறைத்தூதின் காலம் இவர்கள் வாழும் காலத்திலிருந்து வெகு தூரத்திலிருந்ததே.

அற்ப உலகின் ஆட்சியாளர்களைச் சந்தித்திட இடைத்தரகர் தேவை என்பதை வைத்து அல்லாஹ்வைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டு விட்டனர் எனவே அல்லாஹ்வுடன் தங்களை இணைத்திடும் தரகர்களைத் தேடினர். தம் பிரார்த்தனைகளில் தரகர்களையும் சேர்த்துக் கொண்டனர்.

சில வணக்க வழிபாடுகளை நிறைவேற்றும் போது தரகர்களை முன்னோக்கி நின்றனர். தரகர்கள் நமக்காக அல்லாஹ்விடம் பரிந்துரைப்பார்கள் என்று அவர்கள் திடமாக நம்பினர். பின்னர் பரிந்துரைக்கும் தரகருக்கே நல்லவற்றை நல்கவும் அல்லவற்றை அகற்றவும் ஆற்றல் உண்டு என்று நம்பத் தொடங்கினர். பின்னர் இணைவைப்பில் மூழ்கினர். அல்லாஹ்வை தவிர வேறு தெய்வங்களும் உண்டு என்று எண்ண ஆரம்பித்தனர். நம்ப ஆரம்பித்தனர்.

இந்த (போலி) தெய்வங்கள் உலகை நிர்வகிப்பதிலும் நன்மை தீமைகளைத் தருவதிலும் இறைவனுக்கு இணையான ஆற்றல்களைப் பெற்றவை என்று நம்பினார்கள்.

பேராற்றல் மிக்க பெருங்கடவுள் அல்லாஹ் தான் அவனிடம் பரிந்துரைக்க மட்டுமே தரகர்கள் தேவை என்று நம்பினர் முன்னோர்கள். பின் வந்த தலைமுறையோ தரகர்களையே அழிக்கும் ஆக்கும் வலிமைமிக்க தெய்வமாக்கிவிட்டனர். மொத்தத்தில் கடவுள் பற்றிய தெளிவான கருத்து அரபுக்களிடம் இல்லை (நூல் : பய்அத்துன்னபி மினல் குர்ஆன், பேராசிரியர் முஹம்மத் இஸ்ஸத் தருசா)

### அறியாமைக் கால அரபுக்களின் சிலைகள்:

இவ்வாறு தரகர்களையே தெய்வங்களாக்கும் போக்கு வலுப்பெற்றது. இதற்குக் காரணம் அம்மக்களின் அறியாமையும் சிந்தனை ரீதியிலான பலஹீனமும் தான். அது மட்டுமன்றி ஐம்புலன்களையும் அவற்றால் அறிந்து கொள்ள முடியக் கூடியதையும் மட்டுமே சார்ந்திருப்பது தான் இணைவைப்புக் கோட்பாடு (ஏகத்துவ நம்பிக்கை என்பது ஆழமான சிந்தனைக்குப் பின் வருவது)

எனவே அரபுக்கள் கடவுள் நம்பிக்கை விஷயத்தில் புலன்களை மட்டுமே நம்பினர். அறிவுக்கு வேலை கொடுக்கவில்லை என்பதால் அவர்கள் இணை வைப்பிலேயே இருக்க வேண்டியதாயிற்று.

கடவுள் வேறு, தரகர்கள் வேறு என்று வித்தியாசப்படுத்திப் பார்ப்பவர்கள் முற்போக்குச் சிந்தனையாளர்கள் என்றாயினர். இவர்கள் எண்ணிக்கையில் குறைந்து காணப்பட்டனர்.

இப்படித்தான் இணைவைப்பிலும் உருவழிபாட்டிலும் மிக மோசமாக மூழ்கிக் கிடந்தனர் அரபுக்கள். குலத்துக்கு ஒரு கடவுள் ஊருக்கு ஒரு கடவுள் ஒரு பகுதிவாழ் மக்களுக்கு ஒரு கடவுள் ஏன்! வீட்டுக்கொரு கடவுள் கூட இருந்தது.

வரலாற்றாசியர் கல்பி கூறுகிறார் : மக்காவிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் வணங்கிட ஒரு கடவுள் வைத்திருந்தனர். வெளியூர் செல்ல முற்பட்டால் அந்த சிலைக்கு பூஜை செய்து விட்டுத் தான் கிளம்புவார் பயணத்திலிருந்து ஊர் திரும்பியதும் முதல் வேலையாக அவர்கள் அந்த சிலைக்குத் தான் பூஜை செய்வார்கள். பிறகு தான் மற்ற வேலை. இவ்வாறு சிலை வணக்கத்தில் அரபுக்கள் முழு ஈடுபாடு காட்டினர்.

வணங்கும் சிலைகளுக்காக தனிக் கோயில் கட்டுவார்கள். சிலர் வெறும் சிலைகளை மட்டும் வைத்திருப்பார்கள். தனிக்கோயில் கட்டவோ சிலைகளை வைத்துக் கொள்ளவோ வசதியற்றவர்கள் ஹரம் ஷரீஃபுக்கு முன்னாலோ அல்லது தாம் சுத்தமெனக் கருதும் எதேனுமொரு இடத்திலோ ஒரு கல்லை நட்டு வைத்து அதை கஅபாவைச் சுற்றி

வருவது போல் தவாஃப் சுற்றுவார்கள் இதை அவர்கள் நட்டமாய் நிற்கும் தெய்வங்கள் என்றும் சொல்லிக் கொள்வார்கள். (நூல் : கிதாபுல் அஸ்னாம்)

ஏக இறைவனாம் அல்லாஹ்வை வணங்குவதற்காக இந்த மண்ணில் எழுப்பப்பட்ட முதல் இல்லமாம் புனித கஅபாவின் நடுவிலும் அதன முற்றத்திலும் முன்னூற்று அறுபது சிலைகளை நட்டுவைத்திருந்தனர். முதலில் உருவத்தையும் சிலைகளையும் வணங்கிக் கொண்டிருந்த அரபுக்கள் பின்னர் ஏதேனுமொரு கல்லை வணங்கும் நிலைக்குத் தாழ்ந்து விட்டனர்.

ஹழ்ரத் அபூரஜாவுல் அதாரிதி (ரழி) கூறினார்கள் : நாங்கள் கற்களை வணங்கி வந்தோம் நாங்கள் வணங்கும் கல்லை விட அழகிய கல்லைக் கண்டால் அதை தூக்கி எறிந்து விட்டு இந்தக் கல்லை வணங்குவோம். வணங்கிட கற்கள் கிடைக்காத போது மணலைக் குவித்து அதன் மேல் ஆட்டுப்பாலை ஊற்றி (சிலை போல்) வடித்து அதனைச் சுற்றி வலம் வருவோம். (புஹாரீ : போர்கள் மக்கா வெற்றி)

கல்பி (ரஹ்) கூறுகிறார் : அரபுக்களில் ஒருவர் வெளியூர் பயணத்தில் வழியில் தங்கிட நேர்ந்தால் நான்கு கற்களை எடுப்பார். அதில் அழகானதை தெய்வமாக வழிபடுவார் மீதியுள்ள மூன்று கற்களை உணவு தயாரித்திட அடுப்பாக ஆக்கிக் கொள்வார்கள். கிளம்பும் போது அங்கேயே எல்லா கற்களையும் விட்டு விட்டுப் போய் விடுவார் (நூல் : இதாபுல் அஸ்னாம்)

உலகமெங்கணும் எல்லா கால கட்டங்களிலும் இருந்த இணைவைப்பாளர் களுக்கு பல தெய்வங்கள் இருந்ததுண்டு. அது போல அரபுக்களுக்கும் பல தெய்வங்கள் இருந்தன. நட்சத்திரங்கள் ஜின்(பூதங்)கள் வானவர்கள் என பல தெய்வங்கள் இருப்பதாக நம்பினர்.

மலக்கு(வானவர்)கள் அல்லாஹ்வின் பெண்பிள்ளைகள் என்று நம்பியஅவர்கள் அல்லாஹ்விடம் நமக்காகப் பரிந்துப்பார்கள் என்று கருதி மலக்குகளை வணங்கினார்கள் இவர்களின் பொருட்டால் உதவியும் வேண்டினார்கள். இது போல ஜின் (பூதங்)கள் அல்லாஹ்வுக்கு இணையான ஆற்றல்களைப் பெற்றவை நம்மை தீமைகளை தந்திடும் வலிமை பெற்றவை என்று நம்பி அவற்றையும் வணங்கினர். (நூல் : அதே நூல் பக்கம் 44)

ஹுஸா ஆ குலத்தின் வழித் தோன்றலான பனூாமல்ஹ் குடும்பத்தினர் பூதங்களை ஜின்களை வணங்கி வந்தனர் (அதே நூல் : பக்கம் 34)

ஹுமைர் குலத்தார் சூரியனையும் கினானா குலத்தார் சந்திரனையும் தமீம் குலத்தார் தபான் என்ற கோளையும் லஹ்ம், ஜுதாம், தைய், கைஸ், அஸது ஆகிய குலத்தினர் முறையே வியாழன் சுக்கிரன், புதன், சனி, ஆகிய கிரகங்களையும் வணங்கி வந்தனர் என்று வரலாற்றாசிரியர் ஸாஇத் கூறுகிறார் (நூல் : தபகாத்துல் உமம். பக்கம் 43)

தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி

இன்ஷா அல்லாஹ்....
விரைவில் வெளிவருகிறது!

ஷஹீத் செய்யித் குத்புப்
அவர்களின்

இஸ்லாமிய எழுச்சியின்
மைல் கற்கள்

எகிப்தில் இஸ்லாமிய எழுச்சிக்கு
வித்திட்ட நூல்!
தலைமுறை தாண்டியும்
புரட்சிகளை விளைவிக்கும் நூல்!
பல லட்சம் போராளிகளை
உருவாக்கிய நூல்!!

மு. குலாம் முஹம்மது அவர்களின்
விறுவிறுப்பான மொழிநடையில்

வேர்கள் வெளியீட்டகம்
2/1 மண்ணடி தெரு, 4வது தளம்
மண்ணடி சென்னை -1
அலை: 9444239594, : 044-45566909

# ஜாதி ஒழிந்தது நூல் இப்போது இந்தி மொழியில்

## 6.5.2012 அன்று உத்திரப்பிரதேச மாநிலத்தின் தலைநகர் லக்னோவில் வெளியிடப்பட்டது.

*டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் 52 ஆண்டுகால, ஜாதிய வன்கொடுமைகளுக்கு எதிரான போராட்ட வரலாறு தான் சாதி ஒழிந்தது என்ற நூல்.*

*2007 ஆம் ஆண்டு தமிழில் அது வெளிவந்த நாள் முதலே பல நூறு தலீத்களை இஸ்லாத்தை நோக்கி ஈர்த்தது இந்த நூல். (அல்ஹம்ந்துலில்லாஹ்.)*

*2010ஆம் ஆண்டு இந்த நூல் ஆங்கிலத்தில் தலை நகர் டெல்லியில் வெளியிடப்பட்டது.*

*ஆங்கில மொழி பெயர்ப்பு மக்கள் மன்றத்தில் பரவிடவே அதைப் படித்த பலரும் அதனை அடித்தட்டு மக்களுக்கு கொண்டு சேர்த்திட வேண்டும் ஆகவே அதனை இந்தி மொழியில் வெளியிட வேண்டும் எனக் கோரினார்கள்.*

*அந்த மக்களின் கோரிக்கையை ஏற்று தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்ட் இந்தி மொழி பெயர்ப்பை கொண்டு வந்தது. இந்த இந்தி மொழிபெயர்ப்பு 6.5.2012 அன்று உத்திரப்பிரதேசத்தின் தலைநகர் லக்னோவில் வெளியிடப்பட்டது.*

### வெளியீட்டு நிகழ்ச்சி :

*லக்னோவின் மைய இடத்தில் அமைந்திருக்கும் ராய் உமா நாத் பாலி ஆடிட்டோரியத்தில் காலை 10 மணி முதல் 2 மணிவரை இந்நிகழ்ச்சி நடைபெற்றது.*

*நிகழ்ச்சியை வைகறை வாசகர் வட்டத்தைச் சார்ந்த ஆலிம் இபுறாஹிம் அன்சாரி அவர்கள் திருக்குர்ஆன் வசனங்களை ஓதி தொடங்கி வைத்தார்கள்.*

*இஹு ஹார்மோனி என்ற அமைப்பைச் சார்ந்த சகோதரர் முஹம்மத் ஹாலித் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.*

*ஹிந்தி மொழி பெயர்ப்பை டெல்லி உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஆர்.எஸ். ஆதில் (முன்னாள் பிரஜாபதி) அவர்கள் வெளியிட்டார்கள். முதல் பிரதியை டாக்டர் ஆகாஷ் கவ்தம் அவர்கள் (லக்னோவைப் பல்கலைக் கழகம்) பெற்றுக் கொண்டார்கள்.*

*மூத்த வழக்கறிஞர் டாக்டர் எஸ்.எம்.ஏ. காஷ்மி, உத்திரப்பிரதேச மாநில முன்னாள் அட்வகேட் ஜெனரல் அவர்கள் தலைமை ஏற்றார்கள். நிகழ்ச்சியை நடத்தினார்கள்.*

*அடுத்தப் பிரதியை மூத்த வழக்கறிஞர், பாபரி மஸ்ஜத் வழக்கறிஞர் இப்போதைய உத்திரப்பிரதேச அரசின் அடிஷனல் அட்வகேட் ஜெனரல் ஜாபர்யாப் ஜீலானி அவர்கள் பெற்றுக்கொண்டார்கள் அடுத்த பிரதியை IPS / IAS தலீத் அதிகாரிகளின் சார்பில் பித்தேந்திரங் IPS அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். புத்த பிச்சுகளின் சார்பில் டாக்டர் முன்ஷி இந்துப் பிரகாஷ் புத் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.*

### நூல் அறிமுகம் :

*அலிஹர் முஸ்லிம் பல்கலைக் கழகத்துச் சட்டத்துறை பேராசிரியர் ஷக்கீல் சமாதனி அவர்கள் நூலை அறிமுகப்படுத்தி அழகிய உரையை நிகழ்த்தினார்கள்.*

*சென்டர் ஃபார் அப்ஜெக்டிவ் ரிசர்ச் மற்றும் டெவலப்மென்ட் என்ற ஆராய்ச்சி மையத்தின் தலைவர் டாக்டர் அப்துல் ஹுஸைன் அவர்கள் இந்நூலைப் பற்றிய ஆராய்ச்சித் தொகுப்பொன்றை சமர்ப்பித்தார்கள்.*

*அடுத்து பேசிய மூத்த வழக்கறிஞர் ஜாபர்யாப் ஜீலானி அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விடுதலை அடைந்திடும் போது நாம் தாழ்த்தப்பட்ட மக்களின் அந்தஸ்தை* (SC Sta-

tus) நமக்கு வேண்டும் எனக் கேட்டது சரியல்ல. என்று கூறினார்கள். அத்தோடு நான் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களை நன்றாக அறிவேன் பாபரி மஸ்ஜித் வழக்கிற்கான முதல் நிதி நமக்கு தமிழகத்தில் சகோதரர் குலாம் முஹம்மத் அவர்கள் நடத்திக் கொண்டிருந்த டிரஸ்டில் இருந்து தான் கிடைத்தது என்பதை நாம் மறத்திட முடியாது. அந்த நிகழ்ச்சிக்காக நான் சென்னை சென்றிருந்தேன். அப்போது டி.எம். உமர் ஃபாரூக் அவர்களையும் சந்தித்தேன். அப்போது அவர் டி. எம். மணி இந்த வகையில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன் என பழைய நினைவுகளை மொத்த நினைவு கூர்ந்தார்கள்.

## கூட்டத்தில் கூச்சல் குழப்பம்

பல்வேறு அறிஞர்களும் ஜாதி ஒழிந்தது நூல் பற்றி தங்கள் கருத்துக்களைச் மக்களிடையே பகிர்ந்து வந்தார்கள் மக்கள் அமைதியாகவே செவி மடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அரங்கத்தில் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் ஆராய்ச்சி படிப்புகளை (M.Phil. Phd) படித்துக் கொண்டிருந்த மாணவர்களே அதிகமாகக் குழுமி இருந்தார்கள்.

வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மத் அவர்கள் இந்த இந்தி நூலை வெளியிடுவதற்காக அடிப்படை வேலைகளைச் செய்வதற்காக மார்ச்சு மாதம் லக்னோ சென்றிருந்த போது இந்த ஆராய்ச்சி நிலை தலீத் மாணவர்களைச் சந்தித்து ஜாதி ஒழிந்தது நூலின் இந்தி மற்றும் ஆங்கில நூல்களைத் தந்திருந்தார் ஆய்வுக்கு! அதே போல் லக்னோவிலுள்ள டாக்டர் பீமாரவ் அம்பேத்கர் மத்திய பல்கலைக் கழகத்திலுள்ள விரிவுரையாளர்களிடமும் மாணவர்களிடமும் ஜாதி ஒழிந்தது இந்தி நூலையும் (ஜாதியவாத் கா அந்த்) அழைப்புகளையும் கொடுத்திருந்தார்.

அதே போல் பின்னர் உமர் பாரூக், அன்வர் சாதிக் அவர்கள் மே திங்களில் லக்னோவிலிருந்தபோதும் தலீத் மாணவர்களையும் ஆசிரியர்களையும் அவர்களின் விடுதிகளில் சந்தித்து அழைப்பிதழைக் கொடுத்திருந்தோம்.

ஆகவே நிகழ்ச்சியன்று (6.5.2012) அரங்கத்தில் இருந்தவர்களில் ஆய்வு நிலைமாணவர்களே அதிகம். இந்த மாணவர்கள் டாக்டர் அம்பேத்கர் அவர்களிடம் மிகவும் பாசமும் பரிவும் மிக்கவர்களாக இருந்தார்கள். அவர்கள் அம்பேத்கர் வழியில் பௌத்தத்தை ஏற்றுக் கொண்டவர்களாகவுமிருந்தார்கள்.

இதனால் டெல்லி உயர்நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் ஆர்.எஸ். ஆதில் அவர்களது உரையின் ஒவ்வொரு வரியையும் மாணவர்கள் கூர்ந்து கவனித்தார்கள்.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதாகத்தான் இருந்தார்கள். ஆனால் இந்துத்துவ வாதிகள் தாம் அவரை வழி மறித்து இஸ்லாத்திற்கோ கிருஸ்தவத்திற்கோ போகாமல் தடுத்து விட்டார்கள். டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்குத் தரப்பட்ட நெருக்கடிகளால் தாம் அவர் இஸ்லாத்தை ஏற்கவில்லை. காலப் போக்கில் அவர் புத்தமதத்தை ஏற்றார்.

ஒரு முறை அம்பேத்கர் அவர்கள் தீண்டத்தகாத மக்கள் என ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களிடையே உரையாற்றிக் கொண்டிருக்கும் போது திரளாகக் குழுமி இருந்த மக்கள் அம்பேத்கர் இன்னும் சில நொடிகளில் அல்லது உரையின் இறுதியில் இஸ்லாத்தை ஏற்று விடுவார் என்றே எதிர்பார்த்தார்கள் அந்த அளவிற்கு அவர்கள் இஸ்லாத்தைப் பற்றி விளக்கமாகவும் விபரமாகவும் பேசினார்கள்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களை இஸ்லாத்திற்குப் போகவிடாமல் தடுத்தது குறித்து பல இந்துத்துவ அமைப்புகளின். நிறுவுறுனராகிய டாக்டர் மூஞ்சே அவர்கள் எழுதிய கடிதத்தை மக்கள் மன்றத்திலிருந்து முற்றாக மறைத்து விட்டார்கள். இது ஒரு வரலாற்று இருட்டடிப்பு. அதே போல் இஸ்லாத்தைக் குறித்து அவர் பேசியதையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் அளவில் நெருங்கி வந்த அந்தப் பேருரையையும் மக்கள் மன்றத்திலிருந்து மறைத்து விட்டார்கள். ஆனால் அதை பகவான் தாஸ் என்பவர் வெளியிட்டார். அதுவும் இப்போது மக்கள் மன்றத்தில் இல்லை. அந்தப் பிரதி என்னிடம் உண்டு. அதனை வெளியிடும் உரிமையையும்

பகவான் தாஸ் அவர்களிடம் நான் வாங்கி வைத்திருக்கின்றேன் என்றார்கள்.

இந்தச் சொற்களைச் செவிமடுத்த ஆய்வு நிலை மாணவர்கள் இதை நாங்கள் எதிர்க்கின்றோம். டாக்டர் அம்பேத்கர் இஸ்லாத்தையோ கிருஸ்தவத்தையோ சொல்ல வில்லை. அவர் தேர்ந்தெடுத்தது புத்த மதத்தைத் தான் என்றார்கள். அத்தோடு அரவிந்த் என்ற ஆராய்ச்சி மாணவன் தனக்கும் இடையில் பேசிட அனுமதி வேண்டும் என்றார். அத்தோடு நில்லாமல் மேடையை நோக்கி வரவும் செய்தார்.

அந்த மாணவரிடம் ஆதில் சாஹிப் அவர்கள் உரையை முடித்த பின் அதைப் பற்றி சிந்திப்போம் இப்போது ஆதில் அவர்களின் உரையை செவிமடுங்கள் என்றோம். அவையில் அமர்ந்திருந்தவர்கள் அனைவரும் இதனை ஆமோதித்ததால் ஆதில் அவர்கள் தங்கள் உரையைத் தொடர்ந்தார்கள்.

அம்பேத்கர் அவர்களை இஸ்லாத்திற்கு வரவிடாமல் தடுத்த டாக்டர் முஞ்சே அவர்கள் எழுதிய கடிதத்தின் நகலை, இங்கே இப்போதே தருகின்றேன் என்றார்கள். தங்களிடம் தயாராக வைத்திருந்த நகல்களைத் தந்திடவும் செய்தார்கள்.

அதனைப் படித்த மாணவர்கள் அமைதி அடைந்தார்கள். பின்னர் ஆராய்ச்சி மாணவர்களின் பிரதிநிதியாக ஒருவர் மேடைக்கு வந்து தன் கருத்துக்களைச் சொல்லலாம் என அனுமதி வழங்கப்பட்டது. ஆராய்ச்சி மாணவர் அரவிந்த்தான் மேடைக்கு வந்தார். ஆனால் இப்போது ஒரு கேள்வியோடு அல்ல. சில ஆலோசனைகளோடு வந்தார்.

அந்த ஆலோசனை இதே போல் மறைக்கப்பட்ட உண்மைகளையும் இஸ்லாத்தை இங்குள்ள தலீத்களிடம் எப்படி எடுத்துச் சென்றிட வேண்டும் என்பதையும் ஆலோசிக்க வேண்டும். அதற்கு ஆர்.எஸ். ஆதில் சாஹிப் அவர்கள் அடிக்கடி லக்னோவ் வந்திட வேண்டும் என்றும் ஆலோசனை களைச் சொன்னார். இதனை அனைவரும் வர வேற்றார்கள். வழக்கறிஞர் ஆதில் அவர்கள் தங்கள் உரையை நிறைவு செய்தார்கள். ( ஆதில் அவர்கள் பற்றிய குறிப்புகளைத் தனியாகத் தந்திருக்கின்றோம்) அடுத்து டி.எம். ஃபாரூக் அவர்களை தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் தலைவர் மு. குலாம் முஹம்மத் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். ஆங்கிலத்தில் அவர் ஆற்றிய உரையை இந்திய தேசிய லீக் இன் அகில இந்திய தலைவர் பொறியாளர் முஹம்மத் சுலைமான் அவர்கள் ஹிந்தியில் மொழி பெயர்த்தார்கள்.

அடுத்து தலைமையுரையைத் தொடர்ந்து டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். உரையை டாக்டர் அம்பேத்கர் பல்கலைக் கழகப் பேராசிரியர் மஹ்பூப் பாஷா அவர்கள் தமிழில் கூறினார்கள்.

## ஜனாப் டி.எம். உமர் ஃபாரூக் லக்னோவில் ஆற்றிய உரை :

அஸ்ஸலாமு அலைக்கும்! அல்லாஹ்வின் நல்லடியார்களே! நான் தமிழகத்திலிருந்து வந்துள்ளேன். ஆந்திர மாநிலத்தை கடந்து மராட்டிய மாநிலத்தை, மத்திய பிரதேசத்தைக் கடந்து உத்திர பிரதேசத்தின் தலைநகரான லக்னோவை நான் வந்து சேர மூன்று தினங்கள் ஆகிவிட்டது. இந்த மூன்று தின பயண களைப்பெல்லாம் நீங்கும் வகையில் உத்தரபிரதேச தலைநகர மக்களாகிய நீங்கள் என்னை அதிகமாகவே உபசரித்து பாராட்டி உள்ளீர்கள். குறிப்பாக நான் எழுதிய இந்த நூலைப் பற்றி நீங்கள் பக்கம் பக்கமாக பேசியதை கேட்கும் போது நீங்கள் ஒரு சிறந்த சமூக சிந்தனையாளர்களாய் இருப்பது தெரிய வருகிறது.

இந்த நூலில் சொல்லப்பட்டிருக்கும் சம்பவங்கள் அனைத்தும் உண்மையானவை சிறிதளவு கூட கற்பனையோ கூடுதல் செய்தியோ கிடையாது.

இந்நூல் தமிழில் வெளிவந்து அது பல பதிப்புகள் கண்ட பிறகு ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. தற்பொழுது இந்நூல் இந்தியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இதில் சொல்லப் பட்டுள்ள சம்பவங்கள் அனைத்திற்கும் தற்போதும் சாட்சியங்கள் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களின் போராட்டம் தான் இது என்றாலும் தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமப்புற மக்களின் நிலையும்

இது தான். ஏறத்தாழ 25 சதவிகித மக்கள் இப்படி தீண்டாமைக் கொடுமையால் அவதிப் படுகிறார்கள்.

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து தலித் மக்களுக்காக தொண்டு செய்து வந்துள்ளேன். சுமார் நாற்பது ஆண்டு காலம் அவர்களின் போராட்டங்களுக்குத் தலைமை ஏற்று நடத்தியவன் என்ற முறையில் சம்பவங்களை விரிவாகவும் விளக்கமாகவும் எழுதியுள்ளேன். என்னைப் பாராட்டிப் பேசிய சகோதரர்கள் என்னைப் பெரியாரின் சீடர் என்றும் எனது போராட்டம் பெரியார் வழி போராட்டம் என்று இங்கு பேசும் போதும் நேரிலும் குறிப்பிட்டார்கள். உண்மைதான், நான் பெரியார் வழிவந்தவன். அண்ணல் அம்பேத்கரும், தந்தை பெரியாரும் இல்லை என்றால் நான் இந்த மேடையில் நின்று பேசக்கூட தகுதியில்லாதவனாய் இருந்திருப்பேன்.

அந்த மாபெரும் தலைவர்களின் போராட்ட வழியில் தான் இதில் சொல்லப்படுகிற மக்களும் போராடி வருகிறார்கள். ஆனால் இன்று வரை அவர்களின் வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இந்த நாற்பதான்டுகாலமாக தந்தை பெரியாரின் வழிவந்தவர்கள் என்று சொல்லிக் கொள்கின்ற திராவிடக் கட்சிகள் தான் தமிழகத்தை ஆண்டு வருகின்றன. சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பார்ப்பன ஒழிப்பு என்று களம் இறங்கிய திராவிட கட்சிகள் தங்களை சூத்திர ஆட்சி என்று வருணித்து கொண்டன. திராவிடர்களின் ஆட்சியில் தான் இவ்வளவு கொடுமைகளும் நடந்த வண்ணம் உள்ளது. தமிழகத்தை ஆளுகின்ற சூத்திர ஆட்சியில் தான் இப்படி என்றால் உத்திரபிரதேசத்தில் ஆளுகின்ற தாழ்த்தப்பட்ட சகோதரி மாயாவதி ஆட்சியில் தீண்டப் படாதவர்கள் மனிதர்களாக நடத்தப் படுகிறார்களா? என்பதை அறிந்து கொள்ளத்தான் நான் ஆந்திரா, மகாராஷ்டிரா, மத்திய பிரதேசத்தை தாண்டி லக்னோ வந்து இங்குள்ள தலித்களின் நிலையை கடந்த இரண்டு தினங்களாக விசாரித்தும் நேரில் பார்த்தும் தெரிந்து கொண்டேன். லக்னோவ் நகரில் அமைந்துள்ள அம்பத்கர் மீயூசியம் மன்னர் காலத்து காட்சியகம் போல் இருந்தாலும் தலித் உயர் கல்வி மாணவர்களின் விடுதியைப் பார்த்த போது எங்களை கண்கலங்க செய்துவிட்டது. இரண்டு மாணவர்கள் தங்கும் அறையில் இரண்டு புறங்களில் இரண்டு பெஞ்சு பலகை போட்டு குறுக்கில் ஒரு டேபிள் போடும் அளவே அறை இருந்தது. அந்த இரண்டு பெஞ்சு பலகையிலும் போர்வைகள் விரிக்கப்பட்டிருந்தது. அந்த டேபிள் முனைகளில் தான் புத்தகங்களை அடுக்கி வைத்திருந்தார்கள். கால் நீட்ட கூட வசதி கிடையாது. ஃபேன் கிடையாது. அங்கே தங்கியுள்ள நாற்பது மாணவர்களின் நிலையும் இது தான்.

ஒரு சமயத்தில் இரண்டு பேர் பயன்படுத்தும் அளவில் கழிப்பறைகள். அதைப் போலவே இரண்டு பேர் குளிக்கும் அளவுக்கு குளியல் அறை. நாங்கள் சென்ற நேரம் இரவு ஆகையால் உணவு முறையை பார்க்க முடியவில்லை. தலைநகரில் அமைந்திருக்கும் இந்த விடுதி நிலையே இப்படி என்றால் சேரி நிலை எப்படி இருக்கும், என்பது நன்றாக புரியும் படி இருந்தது. அவர்களை விசாரித்த வகையில் தீண்டாமை கொடுமையில் வடக்கிற்கும், தெற்கிற்கும் எந்தவித மாற்றமும் இல்லை என்பதாக குறிப்பிட்டார்கள்.

இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? சூத்திரர் ஆட்சியாக இருந்தாலும் பஞ்சமர் என்று இந்துக்கள் சொல்லக் கூடிய தாழ்த்தப்பட்டவர் ஆட்சியாக இருந்தாலும் சட்டத்திற்கு இங்கு வேலையில்லை. மனுஸ் மிருதி சட்டத்தின் படிதான் சமுதாயம் நடத்தப்படுகிறது என்பது விளங்குகிறது. இந்திய தேசம் முடியாட்சி மாறி மக்களாட்சி ஏற்படும் போது தான் அண்ணல் அம்பேட்கர் அவர்கள் களமிறங்கினார்கள். தீண்டாமை கொடுமைக்கு சொந்தக்காரர்களான இந்துக்களின் கைகளுக்கு ஆட்சி மாறினால் தனது மக்களின் நிலை கொடுமையிலும் கொடுமை என்பதை ஆங்கில அரசுக்கு எடுத்துரைத்தார். நீங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் இந்த தேசத்தில் தீண்டப்படாதவர்கள் எத்தகைய கொடுமைகளை அனுபவித்தார்களோ அதே நிலை தான் இன்று வரை நீடிக்கிறது. உங்கள் 150 ஆண்டுகால ஆட்சியில் தீண்டப்படாத மக்கள் எந்த வித பயனையும் அடையவில்லை என்று சாடி பேசினார்.

சகோதரர்களே எந்த மக்களுக்காக அன்று அண்ணல் அம்பேட்கர் போராடினாரோ அந்த மக்களின் நிலை இன்றும் அப்படியே இருக்கிறது என்பதன் ஆதாரமாகத்தான் இந்த சாதி ஒழிந்தது என்ற நூலை இந்தியில் மொழி பெயர்த்து எடுத்து வந்துள்ளேன். அண்ணல் அம்பேட்கர் போராடி பெற்று தந்த பூனா ஒப்பந்தம் பயனற்றுது என்பதை அண்ணல் அம்பேட்கர் 1935லே ஒப்புக்கொண்டார், பூனா ஒப்பந்தத்தால் தீண்டாமை ஒழியவில்லை. அதே சமயத்தில் அண்ணல அம்பேட்கர் தன் மக்களுக்கு ஒரு கட்டளையிட்டார் இனியும் நாம் தாமதிக்காமல் இந்து மதத்தில் இருந்து வெளியேற வேண்டும் என்பதே அந்தக் கட்டளை. தாமும் இலட்சோப இலட்சம் மக்களோடு பௌத்த மதத்தை தழுவினார். பார்ப்பணர்களால் வீழ்த்தப்பட்ட பௌத்தம் மீண்டும் அண்ணல் அம்பேட்கர் அவர்களால் புத்துயிர் பெற்றது. குறுகிய காலத்தில் அவர் காலமாகிவிட்டதால் மீண்டும் பௌத்தம் பார்ப்பணியமாகி விட்டது.

பௌத்தத்தை ஏற்ற தாழ்த்தப்பட்ட மக்கள் தீண்டத்தகாதவர்களாகவே நடத்தபடுகிறார்கள். வட மாநிலத்தில் கொடுமைகுள்ளாக்கபடுகின்ற தலித்துக்கள் எல்லாம் பௌத்தர்கள் தான். பௌத்தத்தை ஏற்றுக் கொண்ட தலித் தலைவர்களெல்லாம் தலித் தலைவர்களாகவே காட்டப் படுகிறார்கள். நம் தேசபிதா அம்பேத்கர் போராடி பெற்றுத் தந்த அரசியல் உரிமைகள் (பூனா ஒப்பந்தம்) தீண்டாமையை ஒழிக்கப்பயன்படவில்லை. பௌத்த மத மாற்றமும் பயன் தரவில்லை. தீண்டத்தகாதவர் கள் தீண்டப்படாதவர்களாகவே வாழ்கிறார் கள். இதற்கு என்னதான் தீர்வு? பூனா ஒப்பந்தத்தால் பயனடைந்த நீங்கள் தான் விடை காண வேண்டும்.

தமிழகத்தை பொருத்தவரை தலித் தலைவர்கள் தமிழ் தேசீயவாதியாகி விட்டார்கள். தமிழ் தேசியம் என்பது அம்பேத்கர் கொள்கை அல்ல. தந்தை பெரியாரின் கொள்கையும் அல்ல. தமிழ் தேசீயம் என்பது இந்து மதத்தின் உள்வட்டம் தான். உத்திரபிரதேச மாநில தலித் அரசியல் பார்ப்பனரை உள்வாங்கித் கொண்டதாக உள்ளது. இதுவும் அண்ணல் அம்பேத்கருக்கும், தந்தை பெரியாருக்கும் எதிரான அரசியல் தான். ஆகவே இன்றைய தலித் அரசியல் என்பது பிழைப்பு வாத அரசியல் என்பதுடன் தீண்டாமையை ஒழிக்க, சாதியை ஒழிக்க, சிறிதளவும் பயன்படாது.

ஆகவே சகோதரர்களே! தமிழக தலித் அரசியலாக இருந்தாலும், உத்திரப் பிரதேச தலித் அரசியலாக இருந்தாலும் இந்திய தேசம் முழுவதும் உள்ள தலித் அரசியலாக இருந்தாலும் சாதியை ஒழிக்க அவர்களிடம் எந்த திட்டமும் கொள்கையும் இல்லை. இந்துக்களை சார்ந்து ஏதாவது பதவியை அடைந்து சுகம் காண்பதே அவர்களின் நோக்கமாகும். ஆகவே துன்பப்படுகின்ற மக்கள் அண்ணல் அம்பேத்கர் வழியில் தந்தை பெரியார் வழியில் இந்து மதத்தை விட்டு வெளியேறி இஸ்லாம் மார்க்கத்தில் இணைவது ஒன்றே வழியாகும்.

தோழர்களே! இன்று அண்ணல் அம்பேத்கரும் பெரியாரும் நம்மிடையே இல்லை, ஆகவே தலித் மக்களின் விடுதலையை தலித் அரசியல்வாதிகள் வென்றெடுப்பார்கள் என்று நாம் கனவு கூட காண முடியாது. அண்ணல் அம்பேத்கரால் பயடைந்து உயர் பதவிகளை அனுபவித்த சான்றோர்களும் தீண்டாமைக்கு எதிரான அறிவுஜீவிகளும் உண்மையான சீர்திருத்தவாதிகளும் இன்றும் அம்பேத்கரின் மக்கள் அடையும் கொடுமைகளுக்குத் தீர்வு சொல்லுங்கள். அம்பேத்கர், பெரியார் இல்லாத குறையை பூர்த்தி செய்ய முன்வாருங்கள். அதே போல இங்கு ஏராளமாக குவிந்திருக்கின்ற இஸ்லாமிய சகோதரர்கள் நமது அரசியல் வரலாற்றை எண்ணிப்பாருங்கள் முதல் வட்ட மேஜை மாநாட்டில் தேசபிதா அம்பேட்கர் ஆற்றிய உரையில் குறிப்பிட்ட தீண்டப்படாதவர்களின் நிலை அப்படியே தான் இருக்கிறது.

இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் காந்தியின் சூழ்ச்சியை முறியடித்து தீண்டப்படாத மக்களுக்கு முஸ்லிம் லீக் உதவி புரியவில்லை என்றால் அதுவும் எந்தவித பிரதிபலனும் எதிர்பாராமல் நாங்கள் கேட்டுக் கொள்ளாமலேயே நீங்கள் உதவி புரியவில்லை என்றால் இன்றைக்கு இந்திய தேசத்தில் தீண்டப்படாத மக்களுக்கு ஒரு அரசியல் அந்தஸ்து இல்லாமலேயே போய் இருக்கும்.

அந்த நன்றிகடனாக அண்ணல் அம்பேட்கர் அவர்கள் எவ்வளவு விசுவாசத்துடன் நன்றி தெரிவித்தார் என்பது உலகறிந்த உண்மை.

வரலாறு முழுவதும் தாழ்த்தப் பட்டோரோடு / பின்னிப்பிணைந்த / வரலாறு இருக்கிறது. இஸ்லாம் என்பது ஏழைகளுக்கும் அடிமைகளுக்கும் முதியவர்களுக்கும் குறிப்பாக துன்புறுகிறவர்களுக்கும் வழி காட்டவே தோன்றியது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அடிமைகளை விடுவிப்பதில் அக்கறை கொண்டவரர்களாக இருந்த வரலாறும் உங்களுக்கு இருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளாக தீண்டாமை கொடுமையால் அவதிப்படும் நம் மக்கள் விடுதலைக்காக. நீங்கள் ஏன் முன்வரக் கூடாது? அவர்களை மார்க்கத்தின் பக்கம் அழைக்கும் உரிமை, கடமை, உங்களுக்கு இருக்கிறது. இன்று பூனா ஒப்பந்தத்தால் பயனடைந்த கோடான கோடி தலித்துகளும் இஸ்லாம் மார்கத்தின் கடமையை உணர்ந்த இஸ்லாமிய சகோதரர்களும் ஒன்றினைந்து தீண்டாமை கொடுமையால் அவதிப்படும் மக்களுக்கு ஒரு தீர்வை ஏன் ஏற்படுத்த கூடாது என்று எண்ணிப்பாருங்கள்.

நன்றியுடன் உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன், வாகிரு தஃவா அனில் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

ஜனாப் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களைத் தொடர்ந்து பித்நேந்திரசிங் **IPS** அவர்கள் உரையாற்றினார்கள்.

பித்தேந்திர சிங் **IPS** அவர்களின் உரை: **(IPS** அதிகாரி பித்தேந்திர சிங் அவர்கள் புத்த மதத்தைத் தழுவியவர். நூல் வெளியீட்டுக்கு முந்தைய தினத்தில் 5.5.2012இல் லக்னவ் ஐ சார்ந்த டாக்டர் ரெயிஸ்கான் அவர்கள் ஜனாப் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களுக்காக ஏற்பாடு செய்திருந்த விருந்தில் கலந்து கொண்டு பல கேள்விகளை எழுப்பினார். புத்தமதக் கொள்கைகளோடு கம்யூனிஸ்ட் களின் கொள்கைகளையும் கலந்து சிந்திக்கின்றார்.

டாக்டர் ரெயிஸ்கான் அவர்களின் விருந்தின் போது Classless Socielty Vs Islam & Muslim வர்க்கப் பேதமற்ற சமுதாயமும் இஸ்லாம் முஸ்லிம்கள் என பலகேள்விகளை அடுக்கினார்கள். அவற்றிற்கு நாம் பதில் சொன்னோம். திருப்தியடைந்தவராகச் சென்றார். எனினும் அவரிடம் கம்யூனிச சிந்தனைகள் தாம் மிகைத்து நின்றதாகத் தெரிந்தது. அதே போல் இஸ்லாத்தை ஏற்றிட வேண்டிய அவசியம் இல்லை என்பது போன்ற சிந்தனையும் அவருக்கிருப்பதாகவே தென்பட்டது.

அவருடைய 6.5.2012 உரை எப்படி இருக்குமோ என எதிர்பார்த்திருந்த நமக்கு மிகவும் அதிர்ச்சி தந்திடும் அளவில் அவருடைய உரை ஜனரஞ்சமாகவும் சிந்திக்கத்தக்க விதத்திலும் பிரவாகமெடுத்து ஓடியது.) “ஜனாப் டி.எம். உமர் ஃபாரூக் ஒரு சிங்கம் அவரை நினைத்து பெருமைப் படுகின்றேன். அவர் டி.எம். உமர் ஃபாரூக் மிகைத்த நெஞ்சுரத்தோடு இஸ்லத்தை ஏற்றுக் கொண்டதோடு அதனைப் பிரச்சாரம் செய்யும் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. தலீத் சமுதாயத்தின் சிங்கம் ஒன்று இஸ்லாத்தின் போர்வாளாக மாறி இருக்கின்றது என்பது மொத்த தலீத் சமுதாயத்திற்கும் பெருமை சேர்ப்பதாகும். அதில் நான் ஆனந்தமடைகின்றேன்.”

‘‘அவருடைய நூல் ஓர் நீண்ட போராட்டத்தின் சுருக்கம். அதன் ஒவ்வொரு வரியும் ஒரு வரலாற்றைப் பேசுகின்றது. நம்மையும் போராடத்தூண்டுகின்றது.”

‘‘பூனா ஒப்பந்தம் பற்றி அவருடைய கருத்துக்கள் ஒரு புதுப்பார்வையை பூனா ஒப்பந்தத்திற்கும் அன்றைய அரசியல் சமூக சூழலுக்கும் தருகின்றது. என் ஆத்மாவை அது உலுக்கிற்று ஜனாப் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் அடிக்கடி இங்கே வரவேண்டும். விவாதங்களை மேற்கொள்ள வேண்டும் எம்மையெல்லாம் உற்சாகப்படுத்திட வேண்டும்” என்றார். (திருவாளர், பித்தேந்திர சிங், ஜாதி ஒழிந்தது நூலை நாம் ஆங்கிலத்தில் வெளியிட்ட நேரத்திலேயே வாங்கிப் படித்திருக்கின்றனார் என்பது கவனிக்கத் தக்கது.)

### அல்குர்ஆன் இன்ஸ்டிடியூட்

லக்னோவில் நமது “ஜாதிய வாத்கா அந்த்” ’’ஜாதி ஒழிந்தது‘‘ ஹிந்தி நூலை

விநியோகித்தவர்கள், அல்குர்ஆன் நிறுவனத்தினரே! அந்த நிறுவனம் அங்கே இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியைச் செய்து கொண்டிருக்கின்றது, நிகழ்ச்சிக்காக பல்வேறு வகையிலும் உழைத்தவர்கள் இந்நிறுவனத்தின் தலைவர் ஜனாப் செய்னுல் ஹஸன் உஸ்மானி அவர்கள் நன்றியுரைக் கூறினார்கள்.

வந்திருந்தோர் அனைவருக்கும் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் சார்பில் சிற்றுண்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உணவு அரங்கமும் ஓர் விவாத களமாகவே மாறிற்று அம்பேத்கர், இஸ்லாம், புத்தகம் என்று விவகாரங்கள் அனைவரையும் ஆட்கொண்டன.

சில தொலைக்காட்சி நிறுவனங்கள் நூலாசிரியர் ஜனாப் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களையும் தாருல் இஸ்லாம் டிரஸ்ட்டின் நிறுவனர் மு. குலாம் முஹம்மத் அவர்களையும் பேட்டி எடுத்துச் சென்றன.

அடுத்த நாள் பத்திரிகைளிலும் நூலை வெளியிட்ட செய்திகள் பிரசுரமாகி இருந்தன.

## டாக்டர் அம்பேத்கர் பல்லைக் கழகம் :

'லக்னோவில்' வீற்றிருக்கும் டாக்டர் அம்பேத்கர் பல்கலைக் கழக மாணவர்களுடன் ஜனாப் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களுடன் ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சிக்குப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மஹ்பூப் பாஷா அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

மாணவர்களிடையே நாங்கள் புத்தகத்தை, "ஜாதி வாக்கா அந்த்' ஐ அறிமுகப்படுத்திட முனைந்தோம் ஹிந்தி மொழி தெரியாததால் ஜனாப் டி.எம். உமர் ஃபாரூக் தமிழில் சொல்ல, வைகறை வெளிச்சம் ஆசிரியர் ஆங்கிலத்தில் அதை மொழி பெயர்க்கத் தொடங்கினார்.

ஆனால் மாணவன் 'தினேஷ்' எழுந்து நான் நூலை நன்றாகப்படித்து விட்டேன், நான் பேசவா? எனக் கேட்டு நூலை அழகாக அழுத்தமாக அறிமுகப்படுத்தினார்.

பின்னர் மாணவர்கள் கேட்ட கேள்விக்கு ஜனாப் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் பதில் சொன்னார்கள். பேராசிரியர் டாக்டர் யஹ்யா கான், யூனுஸ் ஆகியோர் தங்கள் துறைகளுக்கு நூலாசிரியர் ஜனாப். டி.எம். உமர் ஃபாரூக் அவர்களை அழைத்துச் சென்று கண்ணியப்படுத்தினார்கள்.

## IAS / IPS அதிகாரிகள் தந்த கண்ணியம்.

அன்று மாலை சகோதரர் பித்தேந்திர சிங் **IPS** அவர்கள் விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்தார்கள். அந்த விருந்தில் தலீத் சமுதாயத்தைச் சார்ந்த பல டாக்டர்களும் முனைவர்களும் கலந்து கொண்டார்கள். விருந்தை தென்னிந்திய முறையில் பித்தேந்திர சிங் **IPS** அவர்களின் மனைவி தானே முன்னின்று சமைத்து பரிமாறி கண்ணியப்படுத்தினார்கள். இதில் ஏறத்தாழ 50 அறிஞர்கள் **IAS / IPS** அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

இங்கு டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் தமிழ் உரையை மு. குலாம் முஹம்மத் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

பின்னர் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷனின் செய்பாடுகளை அறிமுகப்படுத்திடும் படி குழுமி இருந்தோர் கேட்டுக் கொண்ட தற்கிணங்க, 32 ஆண்டுகால தாவா பணியை தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்டின் நிறுவனர் குலாம் முஹம்மத் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.

'தாருல் நத்வா மாணவர்களும் டி.எம். உமர் ஃபாரூக், அவர்களுக்கு விருந்து வைத்து கண்ணியப்படுத்தினார்கள். (அல்ஹம்ந்து லில்லாஹ்)

நிகழ்ச்சிக்குப்பின் பலர் இன்றுவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி வருகின்றார்கள். அவர்களில் சிலர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாகவும் கூறினார்கள். அவர்களுக்கு அல்குர்ஆன் நிறுவனத்தின் வழி வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

: வேர்கள் வெளியீட்டகம், சென்னை

நமது லக்னவ் நிருபர்

From Source Material on Dr. Babasaheb Ambedkar and the movement of Untouchables Vol. I



# 169

## *" WILL REMAIN WITHIN HINDU FOLD "

### Ambedkar On Advantage of Harijan's Preferring Sikhism to Islam

Rajah Rejects Proposal And is Backed by Gandhiji And " C. R."

Simla, August 5.

Dr. Ambedkar's views on the relative advantages to the Depressed Classes by embracing one religion or the other, the formula agreed upon between Dr. Ambedkar and Dr. B. S. Moonje, Rao Bahadur M. C. Rajah's disagreement with the formula and endorsement of Mr. Rajah's views by Mahatma Gandhi, Pandit Malaviya and Mr. C. Rajagopalachariar are disclosed in the correspondence released to the press for publication.

**Ambedkar's Formula**

Dr. Moonje wrote the following letter dated New Delhi 30th June 1936 to Rao Bahadur M. C. Rajah:—

" Dear Sir, On urgent calls from some Bombay friends and also from Sriman Seth Jugal Kishore Birla with the concurrence of Dr. Ambedkar, I had occasion to go to Bombay on 18th instant. There Dr. Ambedkar had long conversations with me for three days. Eventually a formula for amicable settlement of his revolt against Hinduism was drafted. Dr. Ambedkar entirely agrees with it.

The formula is as follows:—

" If Dr. Ambedkar were to announce his decision that he and his followers are prepared to embrace Sikhism in preference to Islam and Christianity and that he shall honestly and sincerely co-operate with the Hindus and the Sikhs in propagating their culture and in counteracting the Muslim movement for drawing the Depressed classes into the Muslim fold, the Hindu Mahasabha will be prepared, in view of their having agreed to remain within the Hindu culture, to make an announcement that it will not object:—

(1) To the conversion of the Depressed Classes to Sikhism;

(2) To the inclusion of the Neo-Sikhs in the list of the Scheduled Castes; and

(3) To the enjoyment by the Depressed Classes of the political rights of the Poona Pact by free competition between the non-Sikh and the Neo-Sikh Depressed Classes as provided for under the Poona Pact."

From Bombay I have come here just this morning for consultation on it with friends before formally putting it before the Hindu Mahasabha for its consideration. I am trying to see Pandit Malaviyaji and if possible also H. H. the Maharaja of Patiala. It is a very delicate matter. I have therefore to request you to kindly think over and let me have your opinion in the matter. Until we decide one way or the other, the matter will be kept strictly private and confidential.

Awaiting your reply.

Yours sincerely,

(Sd.) B. S. Moonje.

# டாக்டர் அம்பேத்கர் அவர்களை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதிலிருந்து வழிமறித்தது யார்? வெளிச்சத்திற்கு வந்த உண்மை !

**வழக்கறிஞர் ஆர்.எஸ். ஆதில் அவர்கள் அரங்கத்தில் காட்டிய சாட்சியம் – அதன் தமிழாக்கம் :**

*டாக்டர் மூஞ்சே அவர்கள் பின் வரும் கடிதத்தை டெல்லியிலிருந்து 1936 ஆண்டு ஜுன் திங்கள் 30ஆம் நாள் ராவ் பகதூர் எம்.பி. இராஜா அவர்களுக்கு எழுதினார்.*

*அன்புள்ள ஐயா எனது நண்பர்கள் சிலரிடமிருந்தும் அம்பேத்கரின் சம்மதத்துடன் சிரீமான் செத் ஜீகால் கிஷோர் பிர்லா அவர்களிடமிருந்தும் எனக்கு வந்த அவசர அழைப்புகளின் பின்னணியில் நான் 18 ஆம் தேதி பம்பாய் போக நேர்ந்தது. அங்கே டாக்டர் அம்பேத்கர் என்னுடன் மூன்று நாள்கள் தொடர்ந்து நீண்ட நேரம் உரையாடினார். முடிவில் அவரது இந்து மதத்திற்கெதிரான கிளர்ச்சிக்கு ஓர் அமைதியான முடிவு எடுக்கப்பட்டு எழுதப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் அதனை முழுமையாக ஒத்துக் கொண்டார்.*

*அந்த முடிவு பின்வருமாறு :*

*டாக்டர் அம்பேத்கரும் அவரை பின் பற்றுபவர்களும் இஸ்லாத்திற்கோ கிருஸ்தவத்திற்கோ போவதை விடுத்து சீக்கிய மதத்தைத் தழுவுவார்களேயானால் அத்தோடு அவர்கள் இந்துக்களோடும் சீச்கியர்களோடும் நேர்மையோடும் அக்கறையுடனும் (ஒத்துழைத்து) அவர்களது கலாச்சாரத்தைப் பிரச்சாரம் செய்திடவும் முஸ்லிம்கள் ஒடுக்கப்பட்ட மக்களைத் தங்கள் பக்கம் ஈர்ப்பதற்காக நடத்தும் இயக்கத்திற்கு எதிராக செயல்படுவதற்கும் ஒத்துழைப்பார்கள் என்றால் இந்து மகாசபை அவர் இந்து கலாச்சாரத்திலேயே இருக்க ஒத்து கொண்டிருப்பதால் பின்வரும் விஷயங்களை எதிர்க்காது.*

*1. ஒடுக்கப்பட்ட மக்கள் சீக்கியமதத்தைத் தழுவுவது*

*2. புதிய சீக்கியர்களை* (N 20 SIKHS) *பட்டிலின மக்களோடு இணைப்பது.*

*3. பூனா ஒப்பந்தத்தின் அரசியல் உரிமைகளை சீக்கியர் அல்லாதவர்களும் (சீக்கியர் அல்லாத பழங்குடியினரும்) புதிய சீச்கியர்களுக்கு இடையே போட்டி இன்றி அனுபவிப்பது (இவற்றை இந்து மகாசபை எதிர்க்காது.)*

*இந்து மகாசபையின் முன் இதைப் முறையாக சமர்ப்பிக்குமுன் நண்பர்களோடு இது குறித்து விவாதிக்க நான் இன்று அதிகாலையில் தான் இங்கு (டெல்லி) வந்தேன். நான் பண்டித மாளாவியாயையும் முடிந்தால் ஹெச். ஹெச். பாட்டியாலா மகாராஜாவையும் சந்திக்க முயற்சி செய்கின்றேன்.*

*இது மிகவும் உணர்ச்சி பூர்வமாண விஷயம். ஆதலால் இது குறித்து நீங்கள் சிந்தித்து உங்கள் கருத்துக்களை எனக்கு அறியத் தாருங்கள். நாம் ஏதேனும் ஒரு முடிவு எடுக்கும் வரை இந்த விஷயங்கள் முழுக்க முழுக்க ரகசியமாகவும் நம்முடைய தனிப்பட்ட விவகாரமாகவும் தான் இருந்திட வேண்டும்.*

*இதிலிருந்து பெறப்படும் உண்மை :*

*1. டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இஸ்லாத்திற்கு அல்லது கிறிஸ்தவத்திற்கு செல்ல தயாராக இருந்திக்கின்றார்கள்.*

*2. அவர் அவ்வாறு செல்வதை தடுக்க நரிமன் செத் ஜீலால், கிஷோர், பிர்லா ஆகியோர் டாக்டர் மூஜ்சே,வை அனுப்பி இருக்கின்றார்கள்.*

*3. இதற்குமூன்று நாள்கள் தொடர்ந்து இடைவிடாமல் அம்பேத்கருக்கு நெருக்கடிகளைக் கொடுத்திருக்கின்றார்கள். அதாவது டாக்டர் அம்பேத்கருடன் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கின்றார்கள்.*

*4. முடிவில் அம்பேத்கருக்கு சில*

சலுகைகள் போல சிலவற்றை வழங்கி இருக்கின்றார்கள்

### கடிதம் சொல்லும் சேதி:


முஸ்லிம்கள், ஒடுக்கப்பட்ட மக்களை இன்றயை சொல்லாட்சியில் தலீத் மக்களை இஸ்லாத்தில் இணைத்து அவர்களை முழுமையாக விடுவிக்க தங்களலாலான வற்றைச் செய்திருக்கின்றார்கள். அதை எதிர்க்க டாக்டர் மூஞ்சே அவர்கள் பெரும் முயற்சிகளைச் செய்திருக்கின்றார்கள்.

(இ) டாக்டர் அம்பேத்கர் அவர்களின் முயற்சியில் பயங்கர முட்டுக்கட்டைகள் போடப்பட்டிருக்கின்றன. அவர் பயங்கர நெருக்கடிகளுக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள்.

வழக்கறிஞர் ஆதில் அவர்களின் கூற்றுப்படி ஒரு சுதந்திரமான சூழ்நிலையில் விடப்பட்டிருந்தால் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றிருக்கலாம்.

இஸ்லாத்திற்கு மிகவும் அருகாமையில் வந்தார்கள் என்பதை நிரூபிக்கும் மற்றொரு அத்தாட்சி வைகறையில் விரைவில் வெளிவரும். (இன்ஷா அல்லாஹ்)

MGM



# டெல்- உயர் நீதி மன்ற வழக்கறிஞர் ஆர்.எஸ். ஆதில் ஓர் அறிமுகம்?

கேள்வி : நீங்கள் பிறந்த தேதி?

ஜனவரி 2ஆம் நாள் 1945

கேள்வி : இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன் நீங்கள்?

பதில் : நான் ஒரு புத்த மத போதகன் தலீத்தாக இருந்து புத்தமதத்தை ஏற்றவன்

கேள்வி : நீங்கள் எப்போது இஸ்லாத்தைத் தழுவினீர்கள்?

பதில் : நான் 1981 டிசம்பர் 6ஆம் நாள் இஸ்லாத்தைத் தழுவினேன்.

கேள்வி : இந்தத் தேதியை தேர்ந்தெடுத்ததற்கான காரணம் ?

பதில் : இஃது டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாள். அதாவது டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இறந்த நாள். இந்த நாளுக்கு இனனொரு முக்கியத்துவமும் உண்டு

இந்த நாள்களில் தான் தமிழகத்தில் நிகழ்ந்த மீனாட்சிபுரம் மதமாற்றங்கள் நாடெங்கிலும் ஒரு பெரும் விவாதத்தைக் கிளப்பி இருந்தது. (மீனாட்சிபுரம் மதமாற்றங்கள் 19.2.1981இல் நடைபெற்றன)

கேள்வி : உங்கள் வயது ?

பதில்: எனக்கு இப்போது வயது 67

கேள்வி : நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கு அடிப்படையாக அமைந்தது எது?

ப: டாக்டர் அம்பேத்கரின் எண்ணங்கள் சிந்தனைகள் எழுத்துக்கள் பேச்சுக்கள்.

கேள்வி : டாக்டர் அம்பேத்கரின் நூல்கள் பேச்சுக்கள், இவற்றில் உங்களைக் கவர்ந்தவை எவை? குறிப்பிட்டுச் சொல்லிட முடியுமா?

ப: டாக்டர் அம்பேத்கரின் எழுத்துக்கள் அனைத்தையும் நான் படித்திருக்கின்றேன் அவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லிட வேண்டும் என்றால் Thus Spoke Ambedkar என்ற நூலைக் குறிப்பிடலாம் இது பகவான் தாஸ் அவர்கள் எழுதியது. ஆனால் இந்த நூல் இப்போது புழக்கத்தில் இல்லை. இதிலும் குறிப்பாக 31 மே 1936 இல் அவர்கள் பம்பாயில் மஹார் (என்ற தீண்டப்படாத) மக்களின் பெருங் கூட்டத்தில் ஆற்றிய உரை என்னை இஸ்லாத்தை நோக்கிப் பிடித்துத் தள்ளியது.

கேள்வி : நீங்கள் இஸ்லாத்தைத் தழுவிய போது நீங்கள் மட்டுந்தான் இஸ்லாத்தைத் தழுவினீர்களா? இல்லை மொத்தக் குடும்பமும் இஸ்லாத்தைத் தழுவியதா...?

ப: நான் என் குடும்பத்தவர்கள் அனைவருடனும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன். எனது நான்கு மகள்கள், இரண்டு மகன்கள், அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோம். நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் போது எனது தாயாருக்கு வயது 70 எழுபது. அவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அப்போது அவரது பெயர் இராம் ரதி. இப்போது ரஷீதா.

நான் இஸ்லாத்தை ஏற்பதற்கு முன் என்னைச் சார்ந்தவர்களிடம் தலீத்களிடம் நான் இஸ்லாத்தை ஏற்க போகின்றேன் என்றேன். அவர்களில் பலர் இஸ்லாத்தை ஏற்க முன் வந்தார்கள். டிசம்பர் 6, 1981 அன்று என் குடும்பத்தின் இதர உறுப்பினர்கள் அல்லாமல் 19 பேர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோம்.

அன்று வரலாற்று சிறப்புமிக்க டெல்லி ஜும்மா பள்ளி இல் ஒரு சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அதில் பெருந்திரளாக முஸ்லிம்களும் தலித்களும் ஏனைய சகோதரர்களும் கலந்து கொண்டார்கள்.

அடுத்த நாள் எல்லாப் பத்திரிக்கைகளும் அந்தச் செய்தியை வெளியிட்டிருந்தன. இந்தியா டுடே தன்னுடைய அட்டையில் என்னுடைய படத்தையும் என்னோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் படத்தையும் பிரசுரித்திருந்தது.

நான் அத்தோடும் சும்மா இருக்கவில்லை. இஸ்லாம் மட்டுமே தலீத்களுக்கான அறுதித் தீர்வு என்பதையும் தொடர்ந்து பிரச்சாரம் செய்து கொண்டிருந்தேன்.

என் சக்திக்கு உட்பட்ட இடங்களிலெல்லாம் விவாத அரங்குகளுக்கு ஏற்பாடு செய்தேன்.

கேள்வி : இஸ்லாத்தை ஏற்பதற்கு முன்பு நீங்கள் புத்த மதத்தை ஏற்றிருந்தீர்களா? அதை விட்டு ஏன் பிரிந்தீர்கள்?

ப: ஆமாம் நான் புத்தமதத்தை ஏற்றுக் கொண்டிருந்தேன் என்பது மட்டுமல்ல நான் புத்தமதத்தைப் பிரச்சாரமும் செய்தேன்.

பின்னர் இன்னும் ஒருபடி மேலே போய் புத்தமதத்தைப் பிரச்சாரம் செய்பவர்களுக்கு பாடம் நடத்தும் பயிற்சி மையத்தின் தலைவராகவுமிருந்தேன். இதனால் புத்த விஹாரில் புத்தக் கோயிலிலேயே தங்கியுமிருந்தேன். 1969 முதல் 1981 வரை நான் புத்தமதத்தைப் பிரச்சாரம் செய்வர்களின் வழிகாட்டி.

இறைவன் இல்லை என்ற கொள்கையின் (Specialist) சிறப்பு ஆய்வாளர் நான். இதை புத்தமத்தை ஏற்றிட வருபவர்களுக்கும் புத்த மதத்தை பிரச்சாரம் செய்பவர்களுக்கும் பயிற்றுவிக்க வேண்டும். இந்தத் தத்துவத்தைப்

புரிய வைப்பதில் நான் தேர்ந்தவன் என எல்லோரும் என்னைப் பாராட்டுவார்கள்.

ஆனால், புத்தமதத்திலும் ஜாதி இருக்கின்றது. நீங்கள் புத்தமதத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன் எந்த ஜாதியிலிருந்து வருகின்றீர்களோ அந்த ஜாதியில் தான் அங்கேயும் நீங்கள் இணைக்கப்படுவீர்கள். அது ஜாதியை ஒழிக்கவில்லை வளர்க்கின்றது.

*கேள்வி: இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு 31 ஆண்டுகள் ஆகின்றனவே இந்த அனுபவம் பற்றி?*

ப: இங்கே எல்லாம் மகிழ்ச்சியாக இருக்கின்றது. ஜாதிகள் இல்லை. ஆனால் முஸ்லிம்கள் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வதில் மிகவும் பின் தங்கி இருக்கின்றார்கள். அதே நேரத்தில் நாம் செய்யும் போது ஒத்துழைக்கின்றார்கள் அல்ஹம்துலில்லாஹ்

மூத்த உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஆதில் அவர்கள் அம்பேத்கரும் இஸ்லாமும் என்றொரு ஆய்வு நூலை வெளியிட்டிருக்கின்றார்கள். இது ஹிந்தி மொழியில் இருக்கின்றது. ஏனெனில் அவர்கள் இந்தி மொழியில் தான் சிறந்த எழுத்தாளர். ஆங்கிலத்திலும் சிறந்த சொற்பொழிவாளர்.

அவருடைய இந்தி மொழி நூலை ஆங்கிலத்தில் லக்னோவைச் சார்ந்த சகோதரி அஷ்வின் மொழி பெயர்த்துக் கொண்டிருக்கின்றர். இன்ஷா அல்லாஹ் ஆங்கிலத்திலும் தமிழிலும் இதர மொழிகளிலும் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் இந்த மொழிபெயர்ப்பை வெளியிடும்.

பேட்டி : **MGM**


**GLOBAL**

**TOURS AND TRAVELS**

Jinnah Complex, 143, Pattamangala Street
Mayiladuthurai - 609 001.

Ph. : 04364 - 226544 Cell : 9846 336544

e-mail : travelbyglobal@gmail.com

# புரோகித் இன் லேப்டாப் - ல் இருந்தது என்ன?

எம்.ஜி.எம்

இந்தியாவின் அரசியல் நிர்ணயச்சட்டம் தூக்கி வீசப்பட வேண்டும் அந்த இடத்தில் ஒரு இந்து ராஷ்டிராவுக்கான சட்டம் அமர்த்தப்பட வேண்டும் என்ற கீழறுப்பு சதிகளைத் தீட்டி வைத்திருந்தது அபிநவ்பாரத் என்ற இந்துத்துவ தீவிரவாத அமைப்பு.

அதேபோல் நம் நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் நாடாளுமன்றம் முதலான அனைத்து நிறுவனங்களையும் கவிழ்த்திட வேண்டும். அவற்றிக்கு பதிலாக இந்துத்துவாவிற்கு தேவையான நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டும்.

இப்படியொரு பயங்கர சதி நம் நாட்டில் துவங்கி இருக்கின்றது தருணம் பார்த்துப் பாய்ந்திட. ஆனால் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி இவற்றையெல்லாம் ஒட்டு மொத்தமாக ஒதுக்கித்தள்ளிவிட்டு வேறு பக்கம் தனது கவனத்தைத் திருப்பிவருகின்றது.

இந்துத்துவாவின் இந்தச் சதிகளை யெல்லாம் கண்டெடுத்துத்தந்தவர் மாவீரன் கர்கரே என்ற மராட்டிய காவல்துறை அதிகாரி அதனாலேயே அரசு முகவாண்மைகள் அபிநவ்பாரத்-ஐ சார்ந்தவர்களின் வழி அவரை (கர்ரேயைக்) கொலை செய்துவிட்டார்கள். அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதே 26/11 என்ற மும்பை தாக்குதல்.



நாட்டை நிர்மூலமாக்கிட திட்டம் போட்டவர்களின் செயல் வீரராகப் பணியாற்றியவர் (கலோனல்) தளபதி பிரசாந்த் புரோகித், நமது இராணுவத்தில் பணியாற்றிக்கொண்டே, நாட்டுக்கெதிராக சதிகளை நிறைவேற்றிய சதிகாரர். அவருடைய திட்டங்களை வெளிச்சம் போட்டுக்காட்டியவை அவருடைய லேப்டாப் தான். அதிலுள்ள பதிவுகள் தாம் 2008 ம் ஆண்டு மாலேகான் குண்டு வெடிப்பில் கர்கரே அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கையில் பதியப்பட்டிருந்தன. அவற்றை இங்கே தருகின்றோம் .

## காங்கிரஸின் உதவி

இதனை படிப்போர் ஒரு பெரும் உண்மையைக் கவனிக்க வேண்டும். அது மாவீரன் கர்கரே இந்துத்துவ வாதிகளிடமிருந்து கண்டெடுத்தது மொத்தம் 20 லேப்டாப்கள் . அவற்றுள் இரண்டனவற்றிலுள்ள பதிவுகளே நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளன. மீதம் 18 லேப்டாப்கள் காங்கிரஸ் ஆட்சியின் கீழுள்ள மாராட்டிய மாநில உள்துறை,



காவல் துறை ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் தாமிருக்கின்றன. ஆனால் அவற்றில் என்னென்ன இருக்கின்றன என்பதை கண்டறியவோ, அவற்றின் அடிப்படையில் எதிர்வரும் காலங்களில் நடக்கவிருக்கும் சதிகளை முறியடிக்கவோ மராட்டிய மாநிலத்தை ஆளும் காங்கிரஸோ மத்தியில் ஆட்சி செய்யும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசோ தயாராக இல்லை.

இந்த 18 லேப்டாப்களிலும் உள்ள உண்மைகளை நாட்டுமக்களின் முன் கொண்டுவந்திட வேண்டும் என நாம் தொடர்ந்து கேட்டு வருகின்றோம்.

2011 ஆம் ஆண்டு நாம் வழங்கிய கர்கரே விருதின் போது மதுரையில் நாம் ஓர் தீர்மானத்தையே நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். நீதிமன்றங்களிலும் வழக்காடி வருகின்றோம்.

என்னவானாலும்; காங்கிரஸ் அரசு கண்டுகொள்வதாக இல்லை என்றே இருக்கின்றது. இந்நிலையில் நமது கைக்குக் எட்டிய இரண்டு லேப்டாப்களின் பதிவுகளை இங்கே தமிழில் தருகின்றோம் - இவை நீதிமன்றங்களில் சாட்சியங்களாகவும் சமர்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் முழு சதியும் வெளியே வரும்வரையும்

வேறு சொற்களால் சொன்னால் நம் நாடு எதிர் நோக்கும் பேராபத்திலிருந்து முழுமையாக விடுவிக்கப்படும் வரை நமது போராட்டம் தொடரும் இன்ஷா அல்லாஹ்.


## ஆவணம் எண்:78 பெயர் குறிப்பட வில்லை : ஒரு சாட்சி கூறுகிறார்.

நாம் கீழே தருகின்ற சாட்சியத்தைச் சொன்னவரின் பெயரை சொல்லவில்லை காரணம் அவர் பெயரை வெளியிட்டால் சாட்சியம் நீதிமன்றம் வந்திடாமல் செய்து விடுவார்கள் , சதிகாரர்கள், இவர்கள் காவல் துறை அதிகாரி ஹேமந்த் கர்கரேயையே கொலை செய்தவர்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

சாட்சி சொன்னவரின் பாதுகாப்பு கருதியே அவருடைய பெயர் குறிப்பிடப்படவில்லை.

ஆவணம் : சுவாமி சுதாகர் டிவேடி (எ) அமிர்தானந்த் தேவ் தீர்த் என்னிடம், போன்ஸாலா இராணுவப்பள்ளியில் ஒரு கூட்டத்தில் கலந்திட சொன்னார்கள். நான் பழிதீர்ப்பதற்காக முஸ்லிம்ககள் அடர்த்தியாக வாழும் பகுதிகளில் குண்டுகளை வைத்து வெடிக்கச் செய்யவேண்டும். இதற்காக பெரிய அளவில் நிதி திரட்டியாக வேண்டும்.

ஏப்ரல்-11,2008-ல் நான் போப்பால் சென்றிருந்தேன் அங்கே ஒரு கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதில் சுவாமிஜி அவர்களும், டாக்டர் ஆர்.பி.சிங் (இவர் மகாராஷ்டிரா மிலிட்டரி ஃபவுண்டேஷன் என்ற இந்துத்துவ இராணுவப்பள்ளியை நடத்தி வருபவர்)




அதே நேரத்தில் அபிநவ்பாரத் என்ற அமைப்பிலும் அங்கத்தினராக இருந்து வருபவர், பிரக்கியா சிங் தாகூர் தளபதி (கலோனல்) புரோகித் மேஜர் உபாதாயாயா பாரத், ஷமீர்குல்கர்னி, ஹிமானி சாவார்கர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்தக்கூட்டத்தில் மத்தியப்பிரதேசத்தில் அபிநவ் பாரத் அமைப்பின் கிளையொன்றை தொடங்குவதைப்பற்றி விவாதம் ஒன்று நடைபெற்றது. அதுவும் மத்தியப்பிரதேசத்திலுள்ள இராமர் கோயிலின் முதல் தளத்தில் அதை அமைத்திட வேண்டும் என்பதே அவர்களின் முடிவு. இந்தக்கூட்டம் ஒன்றரை மணி நேரம் தொடர்ந்தது. கூட்டத்தில் தளபதி புரோகித் அவர்கள் முஸ்லிம்களை உடனேயே பழிவாங்கிட வேண்டும், அதற்கு உடனடியாக செயலில் இறங்கிட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கொண்டே இருந்தார் அவர் முஸ்லிம்களைப் பழிவாங்குவதற்கு உரிய இடம், மாலேகான் தான் காரணம் அங்கே தான் அவர்கள் அதிகமாக அடர்த்தியாக வாழுகின்றார்கள். அதனால் ஒரு குண்டு வெடிப்பை அங்கே நடத்துவது தான் சரியானதாக இருக்கவியலும் இந்தத்திட்டத்தை, கலந்து கொண்ட அனைவரும் ஒத்துக் கொண்டார்கள்.

பிரக்கியாசிங் (இவர் பெண் சந்நியாசி) சொன்னார் குண்டு வெடிப்பை நடத்துவதற்கு நிறைய மனித ஆற்றல் தேவைபடுகின்றது, அதனை நான் ஏற்பாடு செய்கின்றேன். அதைப்பற்றிய கவலையாருக்கும் தேவை இல்லை. இதிலிருந்து நான் இவர்கள் அனைவரும் மாலிகோனில் ஒரு குண்டு வெடிப்பை நடத்துவதற்கு திட்டம் போடுகின்றார்கள் என்பதை தெளிவாகப்புரிந்து கொண்டேன்.

அதனால் நான் விலகி இருப்பது என முடிவு செய்து கொண்டேன்.

சுவாமி அவர்கள் மே, ஜுன் மாதங்களில் (2008 ல்) (சித்தார்த்த கவுல் அவர்கள்) எங்கள் அலுவலகத்தில் தங்கினார் சுவாமிஜி அவர்கள் என்னை மீண்டும் குண்டுவெடிப்புகளில் ஈடுபட தூண்டினார்,,,,,

### 118ஆவது சாட்சியம்: லேப்டாபி லிருந்து:-

மராத்தியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

மூன்று மாதங்கள் கழித்து நாங்கள் மீண்டும் போப்பாலில் சந்தித்தோம். இந்தக் கூட்டம் ஜுன் - ஜுலை 2008 ல் நடைபெற்றது இன்னொரு கூட்டம் ஜெய்பூரிலுள்ள ஒரு தர்ம சாலையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் ஏறத்தாழ 300 பேர் கலந்து கொண்டார்கள். இதிலும்

சாத்வி பிரக்கியா சிங் கலந்து கொண்டார். அந்த வட்டாரத்தைச் சார்ந்த இன்னொரு பெண் சந்நியாசியும் கலந்து கொண்டார். அவரை டிடி என அழைத்தார்கள். ஷமீர் குல்கர்னி பூனாவிலுள்ள மேஜர் ஒருவரும் இதில் கலந்து கொண்டார். (மேஜர் என்பது இந்திய இராணுவத்தில் உள்ள ஓர் உயர்ந்த பொறுப்பு)

**ஆவணம் : 23 உரையாடல்**

புரோகித் : நாம் இந்தியாவில் இப்போது இருக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தைத்தான் பின்பற்றுவோம் என்றால் நமது முடிவும் அப்படிதான் இருக்கும். அதேபோல் நாம் இப்போது இந்துத்துவா எனக் கூறப்படும் கோட்பாட்டை பின்பற்றினாலும் நாம் இந்த இந்திய அரசியல் நிர்ணயச்சட்டத்தை எதிர்த்து போராடுவோம். இல்லையேல் நாம் வெல்லமுடியாது. நாம் இந்த நாட்டுக்கு எதிராகவே யுத்தம் செய்வோம். இந்த நாடு நமது நாடல்ல. நாம் விடுதலைக்காகப் போராடுவோம். அது இந்து விடுதலையாக இருக்கும்.

**சுதாகர் டி வேதி:**

நம் நாட்டில் தேர்தல்கள் 1952 இல் தான் நடத்தப்பட்டன. ஆனால் அரசியல் நிர்ணயச்சட்டம் 1950லேயே பிரகனப்படுத்தப்பட்டு விட்டது. இந்த இந்திய அரசியல் நிர்ணயச்சட்டத்தின் முதல் பக்கத்தில் நாங்கள் இந்த அரசியல் அமைப்புச்சட்டத்தை , இந்தியர்களுக்கு அர்ப்பணிக்கின்றோம் எனக் கூறப்பட்டுள் ளது. தேர்தலுக்கு முன்னரே இவர்கள் யாரை இந்தியர்கள் எனக் கூறுகின்றார்கள்.? இந்தியர்கள் என்பது எந்த அடிப்படையில்? அப்போது நாடாளுமன்றம் இல்லை. அரசியல் நிர்ணயச்சட்டத்தின் மீது விவாதங்களுமில்லை அப்படியிருக்க , எப்படி இந்த இந்திய அரசியல் நிர்ணயச் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.? அது எப்படி மக்களால் என்ற சொல்லை பயன்படுத்திட இயலும்? எவன் அப்படி சொல்லுவது?

டாக்டர் ஆர்.பி.சிங் : என்னை தெஹல்கா என்ற பத்திரிக்கையிலிருந்து ஒரு பெண் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள். என்னிடம் நீங்கள் எம்,எப், ஹுசைன் மீது வழக்குகொன்றை தொடர்ந்தீர்களா? எனக் கேட்டார். நான் அவரிடம் பகவான் ராம், ஹனுமான், சீதா ஆகியோரையும் அக்கடவுள்களையும் அவமதிக்கின்றாயா? உனக்கு அவமானப்படுத்தும் உரிமை வேண்டுமா? கம்யூனிஸ்ட்... (இதில் அவர் பயன்படுத்திய சொற்கள் வைகறை பத்திரிக்கையில் எழுதும் தரத்தில் இல்லை என்பதால் விட்டுவிடுகின்றோம்.. அஃதோர் சிவப்பு விளக்கு பகுதி சொல்லாடல்.)

நான் உன்னை ஆடைகளின்றி நடக்க வைப்பேன்..

நான் அவளை எந்த அளவுக்கு கேவலமான வார்த்தைகளால் வைதேன் என்றால் அவள் தொலைபேசியைத் துண்டித்துவிட்டு ஓடிவிட்டாள் .

சுதாகர் டிவேதி : ஜாமிய்யா மில்லியா பல்கலைக்கழகத்தில் ஒரு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இந்திய நாட்டின் துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி கலந்து கொண்டார்.

டாக்டர் ஆர்.பிசிங்: நான் அங்கு சென்றிருந்தேன் என்னுடைய எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக. நான் என்னுடன் 15 லிட்டர் பெட்ரோலை எடுத்துச்

TIN : 33574062235
CST No. : 827826

Ph. : (S) 04364 - 222605
(R) 22532

JANATHA

# janatha

Shoppers Shop

72, Pattamangala Street
MAYILADUTHURAI - 609 001.
Nagai Dist, Tamil Nadu.
E-mail : janathashoppingcentre@gmail.com

சென்றிருந்தேன் ஆனால் எனக்கு அங்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை ஹமீத் அன்சாரி அப்போது ஜாமிய்யா மில்லியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர். ஆனால் அவர் வரவில்லை அவருடைய மகன் தான் வந்தான்.

புரோகித் : அன்சாரி இப்போது துணை குடியரசுத் தலைவர் பதவிக்கு போட்டியிடும் ஒரு வேட்பாளர். அவர் ஏற்கெனவே ஓர் அறிவிப்பைச் செய்திருக்கின்றார். அதில் நான் துணை குடியரசு தலைவரானால் வந்தே மாதரம் பாட மாட்டேன் எனக் கூறியுள்ளார்.

ஆகவே சுவாமிஜி நாம் இதிலெல்லாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில் நாம் இந்த அரசியல் நிர்ணயச் சட்டத்தை எதிர்த்துப் போராட வேண்டும். நாம் நமது இந்து விடுதலைக்காக யுத்தம் செய்ய வேண்டும். பாரதீய ஜனதா கட்சி நிச்சயமாக இந்த அரசியல் நிர்ணயச்சட்டத்தைப் பின்பற்றி வெற்றி பெற்றிட இயலாது. நாம் இவற்றிக்கு மேலாக எழுந்தாக வேண்டும்.

நமக்குத் தேவைப்படுவது பேரம் பேசும் சக்தி. இந்த பேரம் பேசிடும் சக்தி நமக்கு எப்போது கிடைக்கும் என்றால் நம்மை நாட்டில் பிரச்னைகளை உண்டு பண்ணுபவர்கள், தலைவலி என்ற நிலையை உருவாக்கிட வேண்டும். நாம் முஸ்லிம்களைப் போல் 50,000 பேர் ஒன்றாக தெருக்களில் குழுமிடமுடியாது. கோஷம் போட்டு பயனில்லை.

இந்த பாரதம் நாம் விரும்பும் "இந்து பாரதமல்ல". அதை நாம் வெற்றிபெறும் காலங்களில் தாம் அடைந்திட முடியும். இந்துபாரதம் இதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக இருந்திடும்.

நாம் நமது விடுதலைக்கான ஒரு யுத்தத்தை நடத்தியாக வேண்டும். மூன்றாவது மிகவும் முக்கியமானது என்னவெனில் நாம் இதை உலக அரங்கிற்கு எடுத்துச் சென்றிட வேண்டும். இது மிகவும் குறைந்தபட்ச தேவையாகும். வெற்றுப் பேச்சுகள் எந்தப் பயனையும் தந்திட மாட்டா வெறும் அறப்போராட்டங்களால் பயனேதுமில்லை. இராமர் சேதுவைப் பற்றிப்பலரும் பேசலாம். ஆனால் இன்னும் 50 ஆண்டுகள் அறப்போராட்டங் களை நடத்தினாலும் முடிவு முழு பூஜ்யமாகத்தான் இருக்கும். சுவாமிஜி கஷ்மீரில் ஒரு நிகழ்வு ஒரு மாதத்திற்கு முன் பல இந்து குடும்பங்கள் கஷ்மீரிலிருந்து மகாராஷ்டிர மாநிலத்திற்கு விரட்டப்பட்டுள்ளார்கள்..

உபாத்யாயா: வீடுகள் எரிக்கப் பட்டனவா?

புரோகித்: நாம் ஓர் அரசு (a government in exile). அதுதான் இந்து அரசு. நாம் இந்த இந்து அரசை இந்தியாவுக்கு வெளியிலிருந்து நடத்திக் கொண்டிருக்கின்றோம் இதை நாம் நிலைப்படுத்த வேண்டும் நாம் நமது பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

நான் இன்னும் சில விவரங்களை உங்களிடம் சொல்லுவேன். இவை இன்று வரை யாரிடமும் சொல்லப்பட்டதில்லை. நாம் இரண்டு தாக்குதல்களை நடத்திவிட்டோம். இரண்டுமே வெற்றிகரமாக நடந்தன. அது போன்ற தாக்குதல்களை நடத்திட எனக்குப் போதிய திறமை இருக்கின்றது என்பதை நிரூபித்துவிட்டேன். ஆனால் எந்தெந்த இலக்குகளைத் தாக்கிட வேண்டும் என்பது என்னுடைய பிடியில் இல்லை. அதை நாம் நமது ஆய்வுக்குழுவில் முடிவு செய்வோம்.

அதில் முடிவு செய்து விட்டால் எழுபது பேர் நம்முடன் செயலில் இறங்குவார்கள்.

## மூன்றாம் பாகம்

### சாட்சியம் எண் : 121 மீண்டும் ஆலோசனைக் குழு கூட்டம்

மீண்டுமொரு முறை ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெற்றது. அதில் புரோகித் இந்தியாவுக்கு வெளியிலிருந்து இயங்கும் இந்து அரசாங்கம் பற்றி மேலும் பல தகவல்களைச் சொன்னார். அதில் புரோகித் ஆயுதங்களை வாங்கிடும், அமைச்சகம் (MINSTRY OF PRECAREMENT ) பற்றிப் பேசினார். ஆயுதங்கள் வாங்கிடும் அமைச்சகத்தின் வழி இஸ்ரேலுடன் தாய்லாந்துடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறினார்.

அதேபோல் இன்னொரு அமைச்சகத்தையும் ஏற்படுத்தி இருப்பதாகக் கூறினார். அதன் பெயர் (MINISTRY OF OUTSOURCING ) அவுட் சோர்சிங் அமைச்சகம் (அதாவது இதர முகவாண்மைகளை கொண்டு இயங்கும் அமைச்சகம்). இந்த அமைச்சகம் நமது அமைப்பில் அங்கம் வகிக்காதவர்களை எப்படி நமது தாக்குதல்களில் பயன்படுத்திடலாம் என்பதை ஆலோசிக்கும் உத்திகளைக் கண்டுபிடித்துச் செயல்படுத்தும் கூட்டத்தில் சங்கராச்சாரியார் அவர்களும் வெளியிலிருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்து அரசு பற்றிப் பேசினார். அதில் புரோகித் ஆர்.எஸ்.எஸ் விஷ்வ ஹிந்த் பரீஷத் போன்ற அமைப்புகள் பலனற்றுப் போய்விட்டன என்பதை விளக்கமாக எடுத்துரைத்தார். இந்துத்துவா பற்றி சொல்லித்தர இந்து இளைஞர்களுக்கு ஒரு கல்வியகத்தை ஏற்படுத்திட வேண்டும் என்பதையும் விரித்துரைத்தார். இந்து அரசை எதிர்க்கும் இந்துக்களை அரசியல் பகிஷ்காரம் செய்திட வேண்டும் என்றும் கூறினார். நாம் அரசியல் பகிஷ்காரம் எனச்சொல்வது அவர்களை பூமியிலிருந்து அப்புறப்படுத்துவதாகும். இப்படி சொல்லிவிடுவதன் மூலம் அவர் மனதில் என்ன வைத்திருந்தார் என்பதை நான் அறிந்திடவில்லை. ஆனால் அவர் என்னால் இதற்கான இளைஞர்களைப் பயிற்றுவித்திட இயலும், அதனை செய்து சாதித்திடவும் என்னால் முடியும் என்று கூறினார்.

இப்படி பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கும் போது ஒருவர் அறைக்குள் நுழைந்தார். சங்கராச்சாரியார் அவரை கஷ்மீர் பண்டிட்களின் அமைப்பின் தலைவர் என அறிமுகம் செய்தார். அவருடைய பெயர் கட்சு அல்லது மட்சு எனச்சொன்னார். இது கஷ்மீரிலுள்ள சில குலப்பெயர். அவரைப் பார்த்தவுடன் டாக்டர் ஆர்.பி.சிங் எழுந்து அறையை விட்டு வெளியே சென்றுவிட்டார். நான் அறை கதவின் பக்கம் அமர்ந்திருந்தேன். டாக்டர் ஆர்.பி.சிங் அறை கதவின் பக்கம் வந்த போது புதிதாக வந்தவரை ஐ.பி என்ற மத்திய உளவுத்துறையைச் சார்ந்தவர் எனச் சொன்னார்.நான் கதிகலங்கிப்போனேன் நானும் அறையைவிட்டு வெளியேறினேன். அங்கே வெளியே நீண்டு உயர்ந்த மலையாளி ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவர் என்னிடம் ரா (Raw) என்ற வெளிநாடுகளில் நம் நாட்டிற்காக உளவுபார்க்கும் அமைப்பைச் சார்ந்தவர் எனக்குறிப்பிட்டார். அவருக்கு நான் இந்திய இராணுவத்தைச் சார்ந்தவன் என்பது தெரியும் போலும். அவர் என்னிடம் அதிர்ச்சியான செய்தி ஒன்றைச் சொன்னார்.

சி.ஐ.ஏ (CIA) என்ற அமெரிக்காவின் மத்திய உளவுத்துறை இந்தியாவை 2015 ஆம் ஆண்டுக்குள் கூறுபோடும் திட்டம் ஒன்றை கையில் வைத்திருக்கின்றது என்றார். இந்தியாவையும் ரஷ்யாவைப்போல் கூறுபோடும் திட்டம் அது என்றும் கூறினார். அமெரிக்காவின் மத்திய



உளவுத்துறை (சி.ஐ.ஏ) இந்தியாவிலுள்ள எல்லாத்துறைகளிலும் ஊடுருவி நிற்கின்றது என்றார். அத்தோடு அந்த அறையினுள் என்ன விவாதிக்கப்படுகின்றது என்பதை நமது இந்தியாவின் மத்திய உளவுத்துறை கண்காணித்து வருகின்றது என்றும் கூறினார்.

புரோகித்திற்கு நமது அரசியல் நிர்ணயச்சட்டத்தின் மேல் மாற்றுகருத்துக்கள் இருக்கின்றன என்பதை நான் அறிந்தேன்.

அதேபோல் தேசிய கீதம், தேசிய கொடி, இந்து ராஷ்டிரா இவற்றிலும் அவருக்கு மாற்றுக்கருத்துக்கள் இருக்கின்றன என்பதும் எனக்குப் பளிச்செனப்பட்டது.

**சாட்சியம் 128:** என்னை இன்னொரு கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார்கள். இந்தக் கூட்டத்திற்காக நாங்கள் தேவலாலியிலுள்ள ஒரு வீட்டிற்குச் சென்றோம். அந்த வீட்டிற்குள் கஷ்மீரைச் சார்ந்த சாரதபீடம் சங்கராச்சாரியார் சுவாமிஜி அமிர்தானந்த் தேவ்தீர்த் அவர்கள் ஒரு கட்டிலில் அமர்ந்திருந்தார்.

நான் அவருக்கு நேர் எதிரே சென்று அமாந்தேன். அங்கே தளபதி புரோகித், சதுர்வேதி, இவர்களுடன் இன்னும் சிலரும் அமர்ந்திருந்தார்கள். அங்கே 15 முதல் 20 பேர் இருந்தார்கள்.

சுவாமிஜி ஒரு லேப்டாப் -ஐ திறந்து சில காட்சிகளை எங்களுக்கு காட்டினார். அது இந்துகள் மீது முஸ்லிம்கள் பயங்கரமான கொடுமைகளைக் கட்டவிழ்த்து விடுவதாகக்காட்டிற்று. இந்துக்களின் கழுத்தை முஸ்லிம்கள் அறுப்பதாகவும்.....காட்டிற்று. இந்த காட்சி 5 நிமிடங்கள் ஓடின.

இதன் வழி சுவாமி சங்கராச்சரியார் அவர்கள் எங்களுக்கு, இந்துக்களெல்லாம் கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்றார்கள் என்பதை தெளிவுபடுத்தினார்கள்.

அதன் பிறகு நாங்கள் முப்பது முதல் நாற்பது நிமிடங்கள் இந்துத்துவாவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்..

**புரோகித்:** இந்துக்கள் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றி கவலைப்படாலிருக்கின்றார்கள். அரசியல் தலைவர்கள், முஸ்லிம்களுக்கு உதவி செய்துகொண்டிருக்கின்றார்கள். இந்துக்கள் பணம் சம்பாதிப்பதில் குறியாக இருக்கின்றார்கள்.

இது இந்துக்களின் மிகப்பெரிய பலவீனம். இதனை சீர் செய்திட எல்லோரும் ஒன்றிணைந்திட வேண்டும்.

சுவாமிஜி இந்து மதம் ஆபத்திலிருக்கின்றது. அதனை பாதுகாத்திட வேண்டும். இது நமது கடமை.

**அடுத்த நாள் கூட்டம் :**

**கலோனல் புரோகித் :** நான் வெளிநாட்டு உறவுகளை வலுப்படுத்தியுள்ளேன். அவற்றை நான் வெளிப்படையாகப் பேசலாமா?

**எஸ்.டிவேடி :** சரி சொல்லுங்கள்.

**புரோகித் :** நான் இஸ்ரேலை தொடர்பு கொண்டேன். நமது தளபதிகளில் ஒருவர் இஸ்ரேலிருந்து திரும்பி வந்திருக்கின்றார். அவரிடம் இஸ்ரேலிய இராணுவத்தினர் எதையாவது நடத்திக் காட்டுங்கள் எனக்கூறி இருக்கின்றார்கள். நீங்கள் உங்களது இணையதளத்தைக்கூட இன்னும் முறையாக செயல்பட வைக்கவில்லை என்ற பொருளில் பேசி இருக்கின்றார்கள். நாம் அவர்களிடம் நமது திட்டங்கள் அடங்கிய காகிதங்களைக் கொடுத்தோம். அவர்கள் ஆறு மாதங்கள் பொறுங்கள் எனக் கூறி உள்ளார்கள்.

நாம் இஸ்ரேலிடம் நான்கு விஷயங்களைக் கேட்டிருக்கின்றோம்.

1. இடையூறே இல்லாமல் தொடர்ந்து ஆயுதங்களும், பயிற்சிகளும் நமக்கு தந்திட வேண்டும்.

2. காவிக் கொடியுடன் நமது அலுவலகத்தை நாம் டெல் அவீவ் (இஸ்ரேலின் தலைநகர்) அமைத்து இயக்கிட அனுமதிக்க வேண்டும்.

3. இந்தியாவில் நமக்கு நெருக்கடி ஏற்படும் போது இஸ்ரேலில் நமக்கு அரசியல் புகலிடம் வழங்கிட வேண்டும்.

4. நமது இலட்சியங்களுக்கும் இந்து அரசுக்கும் ஐக்கிய நாடுகள் சபையில் ஆதரவு பெற்றுத் தந்திட வேண்டும். உலக அரங்கில் இந்து நாடு பிறந்து விட்டது எனக் கூறி அங்கீகாரம் பெற்று தந்திட வேண்டும்.

அவர்கள் (இஸ்ரேலிய நாட்டவர்கள்) இரண்டை ஏற்றுக் கொண்டார்கள் இரண்டை ஏற்றுக்கொள்ளவில்லை.

அவர்கள் நமது இந்து அரசின் தேசியக்கொடி டெல் அவீவில் பறப்பதை விரும்பவில்லை. அவர்கள் (இஸ்ரேல் நாட்டவர்கள்) தங்களுக்கும் இப்போது இந்தியாவிலிருக்கும் அரசுக்குமிடையே உள்ள உறவு நன்றாக இருப்பதாகவும் அதை தாங்கள் விரும்புவதாகவும் அதில் விரிசல்கள் விழுவதைத் தாங்கள் விரும்பவில்லை என்பதையும் வெளிப்படையாகக் கூறிவிட்டார்கள். அடுத்து உலக அரங்கில் நமது இயக்கத்திற்கு சில ஆண்டுகள் வரை ஆதரவு எதையும் தர இயலாது. உங்கள் இயக்கம் இந்தியாவில் ஒர் அழுத்தமான சக்தியாக மாறினால் அட்டி இன்றி உலக அரங்கில் உதவி செய்வதாகக் கூறியுள்ளார்கள்.

அரசியல் புகலிடம் தந்திட இஸ்ரேல் அனுதினமும் தயாராக இருக்கின்றது.

ஆயுதங்களும் பயிற்சிகளும் தங்குதடையின்றி கிடைக்கும். ஆனால் அவ்வப்போது (தீவிரவாத) தாக்குதல்களை நடத்தி முஸ்லிம்களை கொன்று குவித்து அவர்களிடம் காட்ட வேண்டும்.

நாம் படிப்படியாக இஸ்ரேலின் ஆதரவை அனைத்து விஷயங்களிலும் பெற்று விடலாம். இதற்கு இன்னும் பல உத்திகள் நமக்கு தேவை. அதற்கு என்னுடைய யோசனைகள் மட்டும் போதா. ஒர் ஆலோசனை குழுவை ஏற்படுத்திட வேண்டும். அந்தக்குழு நமக்கு என்னென்ன தேவை என்பதை அவ்வப்போது கண்டறிந்திட வேண்டும்.

இன்னும் சில முன்னேற்றங்கள் உண்டு. நேபாள மன்னர் கஜேந்திரருடன் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தேன். 2006 ஜுன்-இல் ஒரு முறையும் பின்னர் 2007-இல் ஒரு முறையும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தேன். இவையெல்லாம் மிகவும் சிறப்பாக நடந்தன. அடுத்து பிப்ரவரி 17-இல் ஒரு சந்திப்பு நடக்கவிருக்கின்றது.

நமது இந்திய ராணுவத்தில் தளபதி (கலோனல்) பரஜ்பால் என்றொருவர் இருக்கிறார். இவர்தான் இவற்றையெல்லாம் ஒன்றிணைக்கின்றார். அவருக்கு இப்போது நமது இந்திய இராணுவத்தின் உளவுத்துறையில் பணியாற்றிடும் வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. அதையும் நன்றாகப் பயன்படுத்திக்கொள்கின்றோம். மன்னர் கஜேந்திரர்-ஐ சந்திக்க நாங்கள் இருவரும் மிகவும் கடினமாக உழைத்திட வேண்டியதாயிற்று.

நாங்கள் மன்னர் கஜேந்திரரைச் சந்தித்தப் போது நான் அவரிடம் நமது கோரிக்கையை வைத்தேன். அவர் அதனை ஏற்றுக் கொண்டார். இஸ்ரேலுக்கு பணம் தரும் பொறுப்பு அவருடையது. இஸ்ரேல் நமக்கு தங்கு தடையின்றி ஆயுதமும் பயிற்சியும் தந்திட வேண்டும். நான் இருபது இளைஞர்களை நமது அமைப்பிலிருந்து பயிற்சிக்கு அனுப்புவேன். ஆறு மாதத்தில் அவர்கள் எல்லாப்பயிற்சியும் முடித்துவருவார்கள். இதன் மூலம் 40 பேரை நான் ஒவ்வொரு வருடமும் பெறுவேன். அவர்களை இங்கே அதிகாரிகளாக நியமித்து இங்குள்ளவர் களுக்குப் பயிற்சி தருவேன். என்னுடையவர்களில் 200 பேர் தேறியவுடன் அவர்களை கொண்டு 400 பேருக்கு பயிற்சி தருவேன்

நான் செக்கஸ்லோவோகியா நாட்டுடனும் தொடர்பு வைத்திருக் கின்றேன். அங்கிருந்து நமக்கு ஏ.கே. ரக துப்பாக்கிகள் கிடைக்கும். இதற்கான பணத்தை நாமே கொடுத்துவிடலாம். இது பிரச்சினை அல்ல. மன்னர் கஜேந்திரர் அந்தப் பணத்தை நமக்கு தந்திடுவார். இதனை அவர் ஒத்துக்கொண்டுள்ளார். இவையெல்லாம் நடந்தால் நமது இந்து அரசு விரைவில் கை கூடிவிடும்.

....இவற்றையெல்லாம் கைக்குக் கொண்டு வந்து செயல்களத்தில் செயல்படுத்திக் காட்டிட ஓர் அமைச்சகத்தை ஏற்படுத்தி இருக்கின்றேன். அதை பாதுகாப்பு அமைச்சகம் MINISTRY OF DEFENCE என பெயர் வைத்து அழைக்கவில்லை. அதற்கு WAR MINSTRY போர் அமைச்சகம் எனப் பெயர் வைத்திருக்கின்றேன். நாம் நம்மைப் பாதுகாத்துக் கொண்டிருக்கப் போகின்றோம் என்பதல்ல. நாம் தாக்குதல்களை நடத்திட இருக்கின்றோம். அந்த அமைச்சருக்கு போர் அமைச்சர் என்று பெயர்.

நாம் இத்தாலியை போன்றதொரு புரட்சியை செய்யப் போவதில்லை. ஏனெனில் நமது நாடு மிகப் பெரிய நாடு. ஒவ்வொரு வீதியிலும் இராணுவத்தை நிறுத்துவது மிகவும் கடினமான ஒன்று. 50,000 படைகளை நம் நாட்டில் ஏக காலத்தில் பரவிடச் செய்திட முடியாது.

நமது ராணுவத்திலும் இதர பாதுகாப்புப்படைகளிலும் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை நான் நன்றாக அறிவேன். எனக்கு நன்றாகத் தெரியும். நமது பட்டாளத்திற்கும் (ARMY)நமது எல்லைப்பாதுகாப்பு படைக்கும் (BSF) இடையில் நிரம்ப கருத்து வேறுபாடுகள் உண்டு. அதேபோல் மத்திய சிறப்புப்பாதுகாப்புப் படைக்கும் எல்லைப்பாதுகாப்புப் படைக்குமிடையில் நல்லுறவு இல்லை. பிரச்சனைகள் இருக்கின்றன. இந்த மத்திய பாதுகாப்புப்படைக்கும் போலிஸ் என்ற காவல் துறைக்கும் எந்த தொடர்புமில்லை. குழப்பமே இருக்கின்றது. நாம் இந்தச் சூழ்நிலையை நன்றாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

இதை எப்படிப் பயன்படுத்துவது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டைச் சொல்லிட வேண்டும் என்றால், நான் நம்மிடமிருக்கும் ஒரு வாகனத்திற்கு இராணுவ வாகனம் போல் சாயமடிக்கின்றேன், அதில் நமது இளைஞர்களை ராணுவ உடை அணியச் செய்து மீரட் (முஸ்லிம்கள் அதிகமாக வாழும்) பகுதியில் தாக்குதல் நடத்துகின்றேன் என வைத்துக்கொள்வோம். இதனால் எந்தப் பிரச்சனையும் நமக்கு வராது. அந்த வாகனங்கள் பத்திரமாக திரும்பி வரும். மக்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். மக்கள் என்ன பேசிக் கொள்வார்கள் என்றால் "ராணுவம் வந்தது தாக்குதல் நடத்தியது, ஏன் எதற்கு என்று தெரியவில்லை, நாட்டில் குழப்பங்கள் மிகைத்து நிற்கின்றன." என்பார்கள்.

நாம் இந்த குழப்பங்களை நமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்றால் நம்மைவிட பெரிய முட்டாள்கள் யாருமிருக்கமாட்டார்கள்.

ஒரு நீண்ட திட்டத்திற்கு ஓர் ஆலோசனை குழுவை நாம் அமைக்க வேண்டும். அதன் வழி முடிவுகளை எடுக்க வேண்டும்.

***டாக்டர்ஆர்பி சிங்*** : ஆமாம்! செய்வோம்.

***புரோகித் :*** அபிநவ் பாரத் வழி சுவாமிஜி சனாதன பாரத்-ஐ கொண்டு வந்திட வேண்டும் என விரும்புகின்றார். இதில் யாருக்கும் எந்த ஐயமுமில்லை. நாம் எல்லாவற்றையும் இந்துத்துவாவைக் கொண்டு வருவதற்கு தாம் செய்து கொண்டு இருக்கின்றோம். ஆர்யவர்த்-இல் சனாதன தர்மமே செயலில் இருக்கும். இந்தத் தர்மத்தைதான் நமது வேதங்கள் நமக்கு தந்துள்ளன. நமது இந்து அரசில் அதாவது ஆாாயவர்த்-இல் மதமே முதலிடம் பெறும். நிருவாகம் இரண்டாவது தான்.

**புரோகித் தொடருகிறார்**

இஸ்லாம் என்ன செய்திருக்கின்றது. சொல்லும் அளவில் எதுவுமில்லை. இன்றைய சூழ்நிலையில் நாம் நமது விடுதலைப் போரை ஓர் ஆலோசனை குழுவின் கீழ் தொடர்ந்திட வேண்டியது தான் . அது ஒரு இந்து மத ஆலோசனை குழுவாகத்தான் இருக்கும். வேறு வழியே இல்லை. இப்போது இந்தியாவிலிருக்கும் அரசியல் நிர்ணயச்சட்டத்தை நாம் பின்பற்ற தேவையில்லை. அதை வீசி விட்டெறிந்துவிடுவதே ஒரே வழி .

கம்போடியா, தாய்லாந்து, பாரத், நேப்பாள், பூடான், ஜப்பான், கொாாயா அனைத்தும் நமக்கு தளம் தான். இந்த நாடுகளை ஒருங்கிணைக்கும் பணியை மேஜர் பாராக்மதோக் என்கிற இராணுவ அதிகாாா செய்து கொண்டிருக்கின்றார். இவர் தான் நமது சர்வதேச அலுவலகத்தை நிருவகித்துக் கொண்டிருக்கின்றார்.

அவர் பூனாவில் நடந்த நமது முந்தைய கூட்டத்தில் கலந்து கொண்டார். அதேபோல் கலோனல் (தளபதி) ராய்கரும் அங்கேதான் இருக்கின்றார். அதேபோல் கலோனல் (தளபதி) காஷ்முக் பட்டேலும் அங்கே தான் இருக்கின்றார். இவர்கள் தாம் நமது வெளிநாட்டு உறவுக்கு முக்கியமானவர்கள். இவர்களுடன் ராணி ஐஸ்வர்யாவின் பாதுகாவலர்கள் உறவினர்கள் ஆகியோரும் நமது வெளிவிவகாரத்துறையைக் கவனித்துக் கொள்கின்றார்கள்

***டிவேடி:*** ராணி ஐஸ்வர்யா என்பவர் யார்?

***புரோகித் :*** மன்னர் கஜேந்திர ஷாவின் (நேப்பாள்) மனைவி. இங்கே பிரமோத் மஹாஜன் நம்மோடுதான் இருக்கின்றார் (இவர் இந்தியாவின் முன்னாள் மத்திய அமைச்சர்).

***உபாதாயாய :*** இன்று நம் நாட்டில் பின்பற்றப்படும் அரசியல் நிர்ணயச்சட்டம் நமக்கு இன்றும் பொருந்தாது. இனி வரும் நாட்களுக்கும் பொருந்தாது. இந்து ராஷ்டிராவின் சட்டங்களை விரைவில் நிலை நிறுத்தவேண்டும்.

அதாவது நாம் மேற்கொள்வது இருமுனை தாக்குதல். ஒன்று இந்தியாவுக்கு வெளியே இருந்து இயங்கும் இந்து அரசு. இரண்டு கீழறுப்பு வேலைகளின் மூலம் தாக்குதல்கள். ஆமாம் பாரதிய ஜனதா கட்சிக்கு மாற்றாக ஒரு நல்ல இந்துத்துவா கட்சி உண்டா?

***புரோகித் :*** நிச்சயமாக.

***ஆர்பி. சிங் :*** ஒரு அரசியல் தளத்தைப் பின்னிட வேண்டும். அதனுடைய உலகத்தொடர்பு மிகவும் பலமானதாக இருந்திட வேண்டும். அத்தோடு உலக அரங்கிலும் அந்தரங்கமாகச் செயல்படும் ஒரு அமைப்பும் வேண்டும்.

நாம் செய்யும் எல்லாச் செயல்களையும் இந்துக்கள் அங்கீகரிக்க வேண்டும்,

ஏற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்பார்த்திடக் கூடாது. இந்துக்களை தேசப்பிரிவினையின் போது முட்டாள்களாக்கி விட்டார்கள்.

### பகுதி 6

புரோகித் : இது இன்றும் நடந்து கொண்டிருக்கின்றது. மதசார்பின்மையைப் பேசுகின்றவர்கள் நம்மை அவர்களின் பிணைக்கைதிகளாக வைத்து வருகின்றார்கள். அதேபோல் இந்துத்துவா கட்சிகள் இந்துத்துவாவிற்கு துரோகம் செய்து விட்டார்கள். அவர்கள் இந்துத்துவாவை தங்கள் அரசியல் வாழ்வுக்குப் பயன்படுத்திக்கொண்டார்கள் . இந்துத்துவ தேசியத்திற்கு மாற்றுகளே கிடையாது. மதசார்பின்மை என்ற மாயையைக் கலைத்து விட்டு. இந்து தேசத்திற்காக உழைப்போம். அதற்கு நமக்கு தேவைப்படுவது பாரதிய ஆயுதப்படைகள். (Barathiya Armed Forces). அவை பாரதிய கலாச்சாரத்தில் தோய்த்து எடுத்தவையாக இருந்திட வேண்டும்.

சதுர் டிவேடி : பாகிஸ்தான் என்ற சொல்லையே அகற்றிட வேண்டும். அகண்ட பாரதம் என்பது அகண்ட பாரதம் தான். நாம் பாகிஸ்தானை அங்கீகரிக்கவில்லை.

**புரோகித் :** ஆமாம் நமது இலக்கு பாரதீய சுயராஜ்யா. கலாச்சார பன்முகத்தன்மை, மதசார்பின்மை இவற்றையெல்லாம் அழித்தொழிக்க வேண்டும். நமது கொடி காவிக்கொடி. பகவான் திவாஸ் உடன் அதன் விழிம்புகள் தங்கத்தால் வேயப்பட வேண்டும். அதில் நான்கு தீபங்கள் பொறிக்கப்பட்டு இருக்கும். அவை நமது நான்கு வேதங்களையும் அடையாளப்படுத்தும். நமது கொடி வாள்கள் ஈட்டிகள் இவற்றில் தான் கட்டப்பட்டு பறக்கவிடப்பட வேண்டும். பக்கிம் சந்திரரின் வந்தே மாதரம்தான் நமது தேசிய கீதம். ஒரு கட்சி ஆட்சிதான்.

**ஆர் பி சிங் :** மன்னராட்சியா?

**திரிப்பாதி :** கடவுள் வழிகாட்டும் மன்னராட்சி

**புரோகித் :** இப்போது நமது அமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் இராணுவப் பயிற்சியும் ஆயுதங்களைப் பயன்படுத்தும் பயிற்சியும் பெற்றிருக்க வேண்டும். எந்த உறுப்பினரும் நாம் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவரல்ல.

அதேபோல் ஊடகங்களோடு, நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டு அவற்றைக் கண்காணிக்க வேண்டும். நமக்கு எதிராக எந்த செய்தியும் வந்துவிடாமல் பார்த்திட வேண்டும்.

**தளபதி தார் :** நமக்கென ஊடகக்கல்லூரி ஒன்று நிறுவப்பட வேண்டும். (MEDIA MANGEMENT COLLEGE)

**புரோகித் :** அது இருக்கின்றது. அதேபோல் இன்னும் பல கல்வி நிலையங்களைக் கொண்டு வந்திட வேண்டும்.

**ஆர்பி சிங் :** ஊடக கல்லூரி டெல்லியில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. 26 பேர் பயிற்சியில் தேறி பல ஊடகங்களிலும் அவற்றின் நிருவாகங்களிலும் ஊடுருவி நிற்கின்றார்கள். இதனை நடத்துவதற்கு பத்து கோடி தேவைப்படுகின்றது.

அதேபோல் நமக்கென ஒரு சேனல் வேண்டும். நாம் விளம்பரம் பெற முடியாது அதற்கும் குறையாமல் பத்து கோடி தொடக்கத்தில் தேவைப்படுகின்றது. முஸ்லிம்கள் ஆசாத் சேனல் என்றொன்றை தொடங்கி இருக்கின்றார்கள். அதில் தாவூத் முதலீடு செய்திருக்கின்றார். இதனால் நாம் உடனேயே செயலில் இறங்கிட வேண்டும்.

**புரோகித் :** நமது நிறுவனங்களெல்லாம் பாரத மாதா மந்திரில் தான் தொடங்கப்பட வேண்டும். அப்போது தான் மாணவர்கள் மத உணர்வோடு இந்து தேசியவாதிகளாக வெளியே வருவார்கள்.

**சுதாகர்டிவேடி :** பெரிய பெரிய கோயில்கள் கட்டப்பட வேண்டும்.

**ஷர்மாஜி :** அடுத்து இஸ்ரேலுக்கு போகின்றவர்கள் ஒரு விஷயத்தைத் தெளிவாக கற்று வர வேண்டும். அவர்கள் ஹோலோ ஹோஸ்ட் என்றொன்றை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். இது 2300 ஆண்டுகால வரலாற்றைப் பதிவு செய்திருக்கின்றது. நமக்கும் அப்படி ஒன்று தேவை. நாம் வைத்திருக்கும் பாரதீய மந்திர் கோட்பாடும் இப்படியே இருக்க வேண்டும்.

**புரோகித் :** நாம் எல்லாத் துறைகளிலும் ஊடுறுவி ஆக வேண்டும். அப்போது நமக்கு வேண்டியவை உடனுக்குடன் நடக்கும். ஓர் அனுபவம் எனக்கு. நமது இராணுவத்தில் ஒரு வேலையாக வேண்டும். சாதாரணமாக அந்த வேலையாக வேண்டும் என்றால் ஒரு மாதமாகும். ஆனால் நமது சங்கப்பரிவாரத்தைச் சார்ந்தவர் ஒருவர்அங்கே இருந்தார். அவரிடம் எனக்கு இப்படி ஒரு வேலையாக வேண்டும் எனக் கூறினேன். அவர் ஒரே நாளில் எல்லாவற்றையும் முடித்துத்தந்தார். நான் அவரை பார்த்ததில்லை. ஆனால் வேலை உடனேயே முடிந்தது. இதனால் தான் கூறுகின்றேன் நம்மிடம் பயிற்சி பெற்றவர்கள் பல்வேறு துறைகளிலும் இருக்கவேண்டும்.

இன்னுஞ்சொன்னால் இப்படிப் பட்டவர்கள் மட்டுந்தான் நமது நிருவாகத்துறையில் இருக்க வேண்டும். இந்துத்துவாவை எதிர்ப்பவர்களை முதலில் அரசியல் பகிஷ்காரம் செய்திட வேண்டும். பின்னர் கொன்றுவிட வேண்டும்.

**ஆர்.பி.சிங்:** அலுவலகப்பணிகள் அதிகாரிகள் இவர்களைப் பொறுத்தவரை இது பொருந்தாத சொல்லாட்சியாகும்

**புரோகித் :** வெளியேற்றிட வேண்டும் என்பதே சரியான சொல்லாட்சி.

**திரிப்பாதி :** ஏனைய வேலைகளை நமது அமைச்சகம் கவனித்து கொள்ளும்.

**ஆர்பிசிங் :** அதாவது போர் அமைச்சகம் பார்த்துக்கொள்ளும்

**சுதாகர் டிவேடி :** ஐக்கிய நாடுகள் சபையில் நமது அரசை இஸ்ரேலிலிருந்து செயல்படும் அரசைப் பதிவு செய்ய வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் தென் ஆசிய நாடுகளின் செயலகம் டெல்லி லோடி சாலையில் இருக்கின்றது. அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையுடன் நேரடியாக நமது அரசு விவகாரத்தை கொண்டு செல்ல தயாராக இருக்கின்றார்கள்.

**ஆர்பி. சிங் :** இதை நாம் தாய்லாந்து வழியாக எளிதாக செய்யலாம். நமக்கு தாய்லாந்தில் சிறந்த நெட்ஒர்க் (தள பிணைப்பு) இருக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையில் செய்ய வேண்டியவற்றை தாய்லாந்து வழியாகச் செய்திடலாம். கம்போடியாவில் (நாட்டில்) தான் நாம் இன்னும் கொஞ்சம் வலுப்பெற வேண்டும்.

**புரோகித் :** பிரச்சாரம் மற்றும் மூளை சலவைக்கென நாம் ஓர் அமைச்சகத்தை ஏற்படுத்த வேண்டும். அந்த அமைச்சகம் நமது இளைஞர்களுக்கு இந்துத்துவாவை ஊட்டி மூளை சலவைச் செய்யும்.

அதேபோல் இணையதளத்திலும் ஒரு குழு வேலை செய்து கொண்டிருக்கின்றது. அது முஸ்லிம் நாடுகளிலுள்ள இணையதளங்களை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றது.

நமது குழு ஒன்று கன்னட மாநிலத்திலும் செயல்பட்டு வருகின்றது. அவர்கள் இந்து ராஷ்டிரிய்ய சேனை என்ற பெயரில் இயங்கி வருகின்றார்கள். ஸ்ரீராமர் சேனா என்பதும் அவர்களின் மற்றொரு பெயர்.

**கூட்டத்திலிருந்து ஒருவர்:** முத்தாலிக்ஜி? (இவர் 60 லட்சம் ரூபாய் தாருங்கள், ஒரு கலவரத்தை நடத்திக் காட்டுகின்றேன் என தெஹல்கா பத்திரிக்கையாளரிடம் கூறியவர்

**- எம்.ஜி.எம்**

# அன்வர் பாலசிங்கம் என்ற பெயரில் எழுதிய "கருப்பாயி என்கிற நூர்ஜஹான்" நூலுக்கு டி.எம். உமர் ஃபாரூக் கொடுத்த மறுப்பு




*தந்தை பெரியாரின் பேச்சும் எழுத்தும் வரலாறும் அடங்கிய "ஈ.வே. இராமசாமி என்கிற நான்" என்ற நூலை எழுதி உலக பிரசித்தி பெற்ற நண்பர் திரு. பசு கௌதமன் அவர்கள் ஒரு நாள் கைபேசியில் தொடர்பு கொண்டு ஒரு தேதியைச் சொல்லி அந்த தேதியில் அன்வர் பாலசிங்கம் எழுதிய கருப்பாயி என்கிற நூர்ஜஹான் என்ற நூலைப் பற்றி விவாதம் நடத்த தஞ்சைக்கு வருமாறு அழைத்தார். அந்த தேதியில் தவிர்க்க முடியாத வேறு வேலை இருந்ததால் இயலாது என்று பணிவோடு கூறிவிட்டேன். என்னுடைய கருத்தைக் கட்டுரையாக எழுதி அனுப்பினால் என் சார்பில் அரங்கில் வாசித்துவிடுவதாகக் கூறி அந்த புத்தகத்தையும் எனக்கு அனுப்பிவைத்தார். அந்த நூலைப் படித்த நான் அதிர்ச்சியும் வியப்பும் அடைந்தேன். காரணம் நெல்லை மீனாட்சிபுரத்தில் 1981ல் ஒட்டு மொத்தமாக தலித்துகள் மதம் மாறிய நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக அது இருந்தது இந்திய தேசத்தையும் தமிழகத்தையும் உலுக்கியெடுத்த மீனாட்சிபுரம் மதமாற்றம் இந்திய தேசத்தில் எத்தகைய அதிர்ச்சியை இந்துக்களுக்குத் தந்தது என்பதை 1982ஆம் வருடம், மார்ச் மாதம் 20 ஆம் தேதி புகழ் பெற்ற எழுத்தாளர் திரு.* **V.T.** *இராஜசேகர் அவர்கள் எழுதிய கட்டுரையில் சில வரிகளை கீழே தருகிறேன்.*

> *தமிழகத்தில் மீனாட்சிபுரம் என்ற ஊரில் தலித் மக்கள் இஸ்லாம் மதத்தை தழுவிய மதமாற்றம் இந்து இந்தியாவை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. காட்மேன் சங்கராச்சாரி முதல் சாய்பாபா வரை பல வகை ராகம்பாட ஆரம்பித்து விட்டனர் (பக்கம் 5)*
>
> *ஆர்.எஸ்.எஸ். தலைவர் கே.ஆர். மல்கானி இந்திய நாட்டின் அதிகார மாற்றத்திற்குப்பின் நாடு சந்தித்த மாபெரும் நெருக்கடி இம்மதமாற்றமே என்றார். அடல் பிகாரி வாஜ்பேய் மேற்படி மீனாட்சிபுரம் ரஹ்மத் நகராகிய கதையை நேரில் சென்று பார்வை இட்டு பிரதமர் இந்திரா காந்திக்கு ஒரு அறிக்கையை நேரில் சமர்ப்பித்தார். (பக்கம் 6)*
>
> *தீண்டத் தகாதவன் முத்திரை இட்டு விலங்கினும் கேவலமாய் நடத்தப்பட்டு வாழ்நாளெல்லாம் இந்துக்களின் கொடுமைகளை எதிர் கொண்டே சாவதை விட மவுடீக இந்து மதச்சங்கிலியை உடைத்தெரிந்து உலகம் தழுவிய பவுத்த கிருஷ்த்துவ முஸ்லிம் மதத்தினை ஏற்று எந்த மதத்தில்*

சுயமரியாதையும் சமத்துவமும் உறுதி அளிக்கப்படுகிறதோ அம்மதத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றார் அண்ணல் அம்பேத்கர் (பக்கம் 6)

பௌத்தம் இந்நாட்டில் பரி விரக்கத்தை நிலைத்திருக்கச் செய்திடும் என்பதால் பௌத்த சங்கங்களில் பார்ப்பனர்கள் ஊடுருவி அம்மார்க்கத்தையே மங்கிடச் செய்து விட்டனர். உழைக்கும் மக்களுக்கு உயர்வளிக்க வல்ல மார்க்சியமும் இந்நாட்டு பார்ப்பனர்களின் ஏகபோக சொத்தாகி விட்டது, இக்காலக் கட்டத்தில் பிறப்பிலேயே போர்குணமிக்க தலித் மக்கள் இந்து பார்ப்பணீயத்தை எதிர்த்து தனிமைப்போர் நடத்திக் கொண்டிருப்பதை விட மத மாற்றத்தின் மூலம் உலக சகோதரர்களிடையே ஒன்றாகி விடுவதே உகந்த வழி என்று அண்ணல் அம்பேத்கர் கூறினார் என்பதாகவும் இன்னும் அதிகமாகவே கூறியுள்ளார்.

அன்பார்ந்த வாசகர்களே! புகழ்பெற்ற எழுத்தாளர் திரு. **V.T.** இராஜசேகர் அவர்களுடைய உரையின் சில பகுதிகளைப் படித்து அது எத்தகைய தத்துவார்த்தமானது என்பதை நீங்கள் விளங்கியிருப்பீர்கள். அந்த மீனாட்சிபுரம் மக்கள் இந்துக்களுக்குக்குக் கொடுத்த அந்த எச்சரிகையைக் கொச்சைபடுத்துகின்ற வகையில் மீனாட்சிபுரம் மதமாற்றம் தோற்றுவிட்டது என்பது போல் தோழர். அன்வர் பாலசிங்கம் அவர்கள் கருப்பாயி என்கிற நூர்ஜஹான் என்ற நூ□ல் எழுதியிருந்தது தான், என் அதிர்ச்சிக்கும் வியப்புக்கும் காரணமாகி இருந்தது.

1981ல் மீனாட்சிபுரத்தில் மதம் மாறிய சுமார் 800 குடும்பங்களைப் புதிய முஸ்லிம்கள் என்று காரணம் காட்டி இஸ்லாமியர்கள் ஒதுக்கிவிட்டதாகவும் தற்போது அங்கு தொழுகை நடைபெறவில்லை என்றும் 30 வயதுக்கு மேற்பட்ட 60 பெண்கள் திருமணம் ஆகாமல் கிடப்பதாகவும் பழைய முஸ்லிம்கள் எவரும் பெண் எடுக்க வருவதில்லை என்றும், உழைத்துச் சாப்பிட்டு கவலை இல்லாமல் இருந்த அந்த மக்கள் இன்றைக்கு குமரிகளைப் பெற்று வைத்துக் கொண்டு வேதனையில் ஆழ்ந்து கிடப்பதாகவும் எத்தனை இலட்சம் வேண்டுமானாலும் வரதட்சணையாக கொட்டிகொடுக்க தயாராக இருந்தும் பழைய முஸ்லிம்கள் யாரும் பெண் எடுக்க வரவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். பெண் எடுக்க வராததற்கு வரதட்சணை காரணமில்லை, புதிய முஸ்லிம்கள் என்பது தான் காரணம் என்பதாக எழுதியுள்ளார்.

1981ல் மதமாற்றம் நடைப்பெற்ற அந்தக் காலத்தில் இருந்து அந்த ஊரைக் கட்டி காத்தவரும், மார்க்கத்தை வளர்த்தவருமான ஜனாப். காதர் பாய் என்பவரின் மகள் கருப்பாயி என்ற நூர்ஜஹான் தாம் மார்க்கக் கல்வி முறையாகப் படித்திருந்தும்,, பட்டப் படிப்பு, படித்திருந்தும் மாப்பிள்ளைக்காக தன் தந்தை ஊர் ஊராக அலைவதைக் கண்டு சகிக்காமல் தன் தந்தைக்கு உருக்கமான கடிதத்தை எழுதிவைத்துவிட்டு தனது நாற்பதாவது வயதில் தற்கொலை செய்து கொள்கிறார்.

இதனால் மனம் உடைந்து போன காதரும் அவருடைய மனைவியும் சேர்ந்து அன்றைக்கே விஷம் குடித்து தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

இந்த வேதனை தாளாமல் மேற்படி கருப்பாயியின் சித்தி தெருமுனையில் உள்ள கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொள்கிறார். இதற்கு முன்னால் பச்சை துண்டு பஷீர் என்பவருடைய பெண்ணை நெல்லையிலிருந்து பெண்பார்க்க வந்தவர்கள் புதிய முஸ்லிம்கள் என்று கேள்விப்பட்டு பாதியிலேயே திரும்பி போய்விட்டதாகவும், ஊரைக்கூட்டி பிரியாணி எல்லாம் சமைத்து வைத்திருந்த பஷீர் பாய் செய்தி அறிந்து அவர் மாடி வீட்டிலேயே தூக்குப்போட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகவும் அவருடைய மகள் பைத்தியம் பிடித்து நீண்ட காலமாக அவரது வீட்டு அறையில் அடைந்து கிடப்பதாகவும் எழுதியுள்ளார்.

ஒரு காலத்தில் சுயமரியாதையோடு சுதந்திரமாக வாழ்ந்த மீனாட்சிபுரம் மக்கள் இன்று வேதனையில் ஆழ்ந்து கிடப்பதாக நிறைய சம்பவங்கள் சொல்லப்படுகிறது. நூலில் இதைப் படித்த நான் என் இதர பணிகளை ஒதுக்கி வைத்துவிட்டுத் தோழர். பசு கௌதமன் அவர்களுக்கு நூல் விவாதத்தில் கலந்துக் கொள்வதாகத் தகவல் அனுப்பிவைத்தேன்.

உடனடியாக இந்த கொடுமைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற எண்ணத்தோடு, வைகறை வெளிச்சம் பத்திரிக்கை ஆசிரியரும் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேசன் ட்ரஸ்ட் நிறுவனருமான அண்ணன் எம். குலாம் முஹமது அவர்களோடு திருநெல்வேலி சென்றோம். அங்கு மூன்று இளைஞர்களை அழைத்துக் கொண்டோம். நூலாசிரியர் மீனாட்சிபுரம் என்பதற்கு பதிலாக காமாட்சிபுரம் என்றும் ரஹ்மத் நகர் என்பதற்கு பதிலாக பிலால் நகர் என்றும் எழுதியிருந்ததால் காமாட்சிபுரம் பிலால் நகரைத் தேடி அலைந்து எங்களுக்கு அரை நாள் ஆகிவிட்டது. அப்படி ஒரு ஊரே இல்லை என்று அறிந்தவுடன் அந்த நூல் வெளியீட்டகம் முகவரியைத் தேடி சென்றோம்.

செங்கோட்டை தாலுக்கா, பூலான் குடியிருப்பு அஞ்சல், கலங்காத கண்டி, புது காலனி தெரு, கலங்கை பதிப்பகம் என்ற முகவரியைத் தேடி அலைந்தோம். நண்பர் அன்வர் பாலசிங்கம் அவர்கள் கலங்காத கண்டியைச் சேர்ந்தவர் என்பதை அங்கு சென்றே அறிந்து கொண்டோம்.

அங்கே புது காலணி என்ற இடத்தில் அவருக்கு சொந்தமான சுமார் 2 ஏக்கர் நிலபரப்பில் அமைந்திருந்த தனிக் குடியிருப்பை அடைந்த போது மாலை நேரமாகிவிட்டது.

அங்கே நண்பர் அன்வர் பாலசிங்கத்துக்குச் சொந்தகாரர் திரு. பிரசாந்த் மற்றும் வேறொருவரைச் சந்தித்தோம். நாங்கள் புத்தகம் வாங்க வந்ததாக அறிமுகம் செய்து கொண்டோம். வீட்டில் ஒரு புத்தகம் தான் இருப்பதாகவும் அன்வர் பாலசிங்கம் அறந்தாங்கியில் தங்கி இருப்பதாகவும், காமாட்சிபுரம், பிலால் நகர், என்பவை கற்பனைப் பெயர் என்றும், மீனாட்சிபுரம், ரஹ்மத் நகரை மையப்படுத்தி எழுதிய நூல் என்பதை மேற்படி பிரசாந்த் மூலம் அறிந்து கொண்டோம்.

பொழுதெல்லாம் காமாட்சிபுரத்தை தேடி அலைந்து களைத்துப் போய் விட்டோம். இரவை தங்கும் விடுதியில் கழித்தோம். மறு நாள் புறப்பட்டு ரஹ்மத் நகரை அடைந்தோம், ரஹ்மத் நகர் பள்ளிவாசலில் இமாம் சலாஹுதீன் அவர்கள் சுமார் 20 பிள்ளைகளை வைத்துக் கொண்டு பாடம் நடத்திக் கொண்டிருந்தார். கேரளாவில் இருந்து வந்திருந்த தப்லிக் ஜமாத்தார்களுக்குச் சமையல் நடந்து கொண்டிருந்தது. அஸர் தொழுகைக்கு பாங்கு சொல்லப்பட்டது சுமார் 60க்கும் மேற்பட்டவர்களுடன் அஸர் தொழுகையை முடித்துக்கொண்டு இமாமைச் சந்தித்தோம்.

சமீபத்தில் தற்கொலை செய்து கொண்டவர்கள் யார் என்று அவர்களிடத்தில் விசாரித்தோம். அவர் அதிர்ச்சிக்குள்ளாகிப் போனார். ஊர் நாட்டாண்மை ஜனாப். அப்துல் ரஹீம் அவர்களைச் சந்தித்தோம் மேற்சொன்ன விவரங்களை அவரிடத்தில் கேட்ட போது முஸ்லிம்கள் தற்கொலை செய்து கொள்ள அனுமதி உண்டா என அவர் திருப்பி கேட்டார்.

நாங்கள் கேட்ட தகவல்கள் அனைத்தும் தவறானது என்றும் மாப்பிள்ளை தேடி எந்த பெண்ணும் ரஹ்மத் நகரில் இல்லை என்றும் சில பெண்கள் படித்துக் கொண்டு இருப்பதாகவும் மாப்பிள்ளை வந்தால் திருமணம் செய்து கொடுப்பது பெற்றோரின் விருப்பம் என்றும் கூறினார்.

ஜனாப் மைதீன், என்பவரைச் சந்தித்தப் போது தனது தந்தை மர்ஹூம் இஸ்மாயில் மீரான் மீனாட்சிபுரம் மக்கள் மதம் மாறியபோது போலிசார் அவரைச் சிறையில் அடைத்து வெடிகுண்டு வழக்குப் போட்டு இரண்டு ஆண்டுகள் கொடுமைப் படுத்தியதாகவும், தனது ஒரே மகளை நல்ல ஈமான்தாரிக்குத் தான் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று தன்னைக் கேட்டுக் கொண்டதாகவும் அண்மையில் இஸ்மாயில் காலமாகிவிட்டதாகவும் தன் தந்தையில்

வேண்டுகோளின் படி தன் தங்கைக்கு அண்மையில் திருமணம் செய்து வைத்ததாகவும் கூறினார்.

தற்கொலை பற்றி மைதீனைக் கேட்ட போது 1981ல் பசியும் பட்டினியுமாய் கிடந்தோம் எவ்வளவோ துன்பங்களை எதிர்கொண்டோம் அப்போதெல்லாம் தற்கொலை செய்து கொள்ளாத நாங்கள் இப்போது மச்சு வீடு, மாடி வீடுகளில் அல்லாஹ்வின் கிருபையாலும் எங்கள் முன்னோர்கள் 1981 இல் மதமாற்றத்தின் போது செய்த தியாகத்தாலும் நல்ல வாழ்க்கை வாழ்கிறோம் இந்த நேரத்தில் அல்லாஹ்வுக்கு விரோதமான காரியங்களைச் செய்வோமா? என்று கேட்டார்.

அந்த சமயத்தில் அங்கு வந்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பகுதி செயலாளர் ஜனாப். சலீம் அவர்கள் சமீபத்தில் தான் சேட்டு வீட்டு கதீஜா, ஹம்சா ஆகிய இரண்டு பெண்களை பூலான் குடியிருப்பு பழைய முஸ்லிம்களுக்கு திருமணம் செய்து வைத்தோம் என்றும் கலங்காத கண்டியை சேர்ந்த அன்வர் பாலசிங்கம் என்பவர் தன்னை வந்து விசாரித்ததாகவும் தான் இப்படியெல்லாம் அவதூறான செய்தியைச் சொல்லவில்லை என்றும் மீனாட்சிபுரத்தைப் பற்றி அவதூறான நூல் ஒன்று வந்திருப்பதாக முன்பே தெரியும் என்றும் பாலசிங்கம் மீது அவதூறு வழக்குப் போடவேண்டும் என்றும் தங்கள் மாவட்டத் தலைவரிடம் சொல்லியிருப்பதாகவும் கூறியதோடு உடனடியாகத் தொலைபேசியில் மாவட்டத் தலைவரிடம் பேசினார்.

அவர் புத்தகத்தைக் கேட்பதாகவும் எங்களிடம் கூறினார். நூலில் கண்ட படி மீனாட்சிபுரம் பெண்களுக்குத் திருமணம் நடக்காதிருப்பது உண்மையானால் தென்காசியில் ஒரு அலுவலகம் அமைத்து இதற்கு ஒரு தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற திட்டத்தோடு சென்ற எங்களுக்கு சம்பவம் உண்மையில்லை என்பதை அறிந்தவுடன் ஒரு மன அமைதி ஏற்பட்டது.

21/4/2012 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு, தஞ்சாவூர் நீதிமன்ற சாலை பின்புறம் அமைந்துள்ள சரோஜ் நினைவரங்கத்தில் கருப்பாயி என்கிற நூர்ஜஹான் என்கிற நாவல் ஆய்வரங்கம் நடப்பதாக நண்பர் பசு கௌதமன் அவர்களிடம் இருந்து அழைப்பு வந்தது அந்த அழைப்பில் நானும் நண்பர் பசு கௌதமன் அவர்களும், முனைவர் மு. இராமசாமி அவர்களும் எழுத்தாளர் ஹெச், முஜீப் அவர்களும். எழுத்தாளர் பாமரன் அவர்களும், நாவல் ஆசிரியர் அன்வர் பாலசிங்கம் அவர்களும் இன்னும் சிலரும் கலந்து கொள்வதாக அழைப்பில் இருந்தது. நானும் அண்ணன் எம். குலாம் முஹம்மது அவர்களும் மற்றும் நீலப்புலிகள் இயக்கத் தோழர்களோடு சரியான நேரத்தில் அரங்கை அடைந்தோம்.

இங்கே முன்னாள் தமிழக அமைச்சர் ஜனாப். உபைதுல்லாஹ் அவர்களும் நிகழ்ச்சி நிரலில் கண்டவர்களும் மற்றும் அரங்கு நிறைந்த அளவில் கூடியிருந்தார்கள். துவக்க உரையில் நண்பர் பசு கௌதமன் அவர்கள் இந்த நூலில் உள்ள குற்றசாட்டுகள் எங்கள் பகுதியில் அதாவது தஞ்சைப் பகுதியில் இல்லை என்றும் இது ஒட்டுமொத்த மார்க்கத்தைச் சார்ந்த விவாதம் இல்லையென்றும் விவாதம் இந்த நூலைப் பற்றியதே என்றும் குறிப்பிட்டார்.

நூலாசிரியர் அன்வர் பாலசிங்கம் அவர்கள் எழுந்தவுடன் தன்னுடைய உரையில் தற்கொலைகள் பற்றியோ, திருமணமாகாமல் முடங்கிக் கிடக்கும் பெண்களைப் பற்றியோ அவர் ஏதும் பேசாமல் 1981ல் மீனாட்சிபுரத்தைப் பற்றி இந்துக்கள் கூறிய அவதூறுகள் பற்றி விளக்கமாகக் கூறினார்.

தற்போது அந்த மக்கள் வறுமையிலும் துன்பத்திலும் வாழ்வதாகக் கூறினார். அடுத்து பேசிய முனைவர் மு. இராமசாமி அவர்களும், எழுத்தாளர் பாமரன் அவர்களும் நூலில் கூறப்பட்டுள்ள விசயங்களைப் பற்றிப் பேசாமல் வேறு விசயங்களைப் பேசி முடித்துவிட்டார்கள்.

அடுத்துப் பேச வந்த நான் இந்த நூல் மதம் மாறியவர்களுக்கும் மதம் மாற இருப்பவர்களுக்கும் அர்ப்பணம் என்று சொல்லப்படிருக்கிறது. மதம் மாறியவர்கள் இந்த நூலை படித்து விட்டு திரும்ப தங்கள் ஜாதிக்கே திரும்பிவிட வேண்டும் என்றும்

மாற இருப்பவர்கள் மதம் மாறாமல் இந்து மதத்திலேயே இருந்துவிட வேண்டும் என்னும் பொருள் பட எழுதியிருக்கிறது.

சுதந்திரம் என்பது வெற்று பெயர் மாற்றத்தினாலோ, பண்பாடு, கலாச்சாரங் களை மாற்றிக் கொள்வதாலோ வருவதில்லை என்பதின் படிப்பினை தான் இந்த நாவலுக்கான மூலக்கூறு என்கிறார் நாவலாசிரியர்.

மேலும் மதங்கள் மனிதர்களின் பாதைகளை வேண்டுமானாமல் மாற்றலாம் பயணங்கள் ஒன்றுதான் என்று கூறுகிறார். இது தந்தை பெரியாருக்கும் அண்ணல் அம்பேட்கருக்கும் எதிரான கொள்கை அல்லவா? இதை எப்படி விவாதத்திற்கு எடுத்துக் கொண்டீர்கள். ரோஜாவை என்ன பெயரிட்டு அழைத்தாலும் மணக்கத்தானே செய்யும்? என்ற சேக்ஸ்பியரின் கருத்தைச் சொல்லியிருக்கிறார் நூலாசிரியர்.

இதற்கு அண்ணல் அம்பேட்கர் அவர்கள் தெளிவாகவே பதில் சொல்லியிருக்கிறார்.

> தீண்டத்தகாதவர்களின் தாழ்த்தப்பட்ட நிலை நாற்றமெடுக்கும் பெயருடன் இணைந்திருக்கிறது அந்தப் பெயர் மாற்றப்படாத வரை சமூக நிலையில் உயர்வதற்கான வாய்ப்பே இல்லை
>
> இந்து மதத்தில் இருந்து கொண்டு பெயரை மாற்றிக் கொள்வது பயனளிக்காது பெயரில் ஏராளமான செய்திகள் அடங்கியுள்ளன. அது பல மாற்றங்களைச் செய்யும். பெயர் மாற்றம் தீண்டத்தகாதவர்களின் நிலையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும். ஆனால் அந்த பெயர் இந்து மத வட்டத்திற்கு வெளியே இருக்க வேண்டும். மேலும் அது இந்து மதத்தால் களங்கப்படுத்தி தாழ்வடையச் செய்ய முடியாத சமூக குழுவின் பெயராக இருக்கவேண்டும். இத்தகைய பெயரே தலித்துக்களின் சொத்தாக இருக்கமுடியும். மதமாற்றத்தின் மூலமே இது சாத்தியப்படும் இந்து மதத்திற்குள்ளேயே பெயர் மாற்றம் செய்யும் கள்ளத்தனம் எவ்வித பலனையும் தராது.
>
> மதமாற்றத்தினால் என்ன நன்மை கிடைக்கும் என்பது தேர்ந்தெடுக்கப்படும் மதத்தையும் அந்த மதத்தினுடைய ஆதரவாளர்களின் சமூக தன்மையையும் பொறுத்தது ஆகவே மதமாற்றம் மட்டுமே தீண்டாமையை ஒழிக்கும்.

என்பதாக அண்ணல் அம்பேத்கர் தெளிவாக குறிப்பிடுகிறார் தோழர் பாலசிங்கம் வெற்றுப் பெயர் மாற்றம் என்கிறார். பண்பாடு கலாச்சார மாற்றத்தினால் சுதந்திரம் வராது என்கிறார்.

மேலும் பாதைகள் பலவானாலும் பயணம் ஒன்று தான் என்கிறார் இது சங்கராச் சாரியாரின் கருத்தல்லவா? பாதை மாறும் போது பயணம் எப்படி ஒன்றாக இருக்க முடியும். ஒரு பார்ப்பானின் பயணமும் ஒரு வெட்டியானின் பயணமும் ஒன்றாக முடியுமா?

மத மாற்றத்தின் மூலமே சுதந்திர மனிதனாக வாழ முடியும் என்ற அண்ணல் அம்பேத்கர் கருத்து இங்கே மறுக்கப்படுகிறது அல்லவா? இழிவினை கற்பிக்கும் இந்து மதத்தை விட்டு ஒழிந்து இஸ்லாம் மார்க்கத்தில் இணைவதன் மூலம் சுயமரியாதைப் பெற முடியும் இன இழிவை போக்க இசுலாம் ஒன்றே தீர்வு என்று தன் வாழ்க்கையில் பெரும் பகுதிகளில் எடுத்துரைத்து வந்த தந்தை பெரியாரின் கருத்துக்கு எதிரானது இல்லையா அன்வர் பாலசிங்கம் அவர்களின் கருத்துகள்?

இந்த மாமேதைகள் இருவரின் கருத்தும் மறுக்கப்படுகிற இந்த கருப்பாயி என்கிற நூர்ஜஹான் என்ற நூல் ஒரு அபத்தமான நூல் என்பதை அறிந்தும் இந்நூலை விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட தோழர் பசு கௌதமன் அவர்களும் தோழர் பாமரன் அவர்களும் ஒருவாரம் பறையனாக இருந்து பாருங்கள் அப்போது தான் மத மாற்றத்தின் ஆளுமையும் அம்பேத்கர், பெரியார் ஆகியோரின் பெருமையும் உங்களுக்குத் தெரியும்.

தோழர் பாலசிங்கம் அவர்கள் அன்வர் என்கிற பெயருக்கு அர்த்தமில்லாமலே இந்த நூலை எழுதியுள்ளார். ஒரு இறை நம்பிக்கையுள்ள முஸ்லிம் எந்த ஒரு செயலும் அல்லாஹ்வின் கிருபையால் தான் என்று நம்புவான். குடிக்கின்ற தண்ணீர் கூட அல்லாஹ்வின் கிருபை இருந்தால் தான் அதனால் தாகத்தை தணிக்கமுடியும் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும்.

மேலும் தற்கொலை செய்து கொள்வது இஸ்லாத்திற்கு எதிரானது ஒவ்வொரு மூமீன்களும் மறுமை வாழ்க்கைகாக இம்மை நாளை கழிக்கிறார்கள். ஒரு முஸ்லிம் தற்கொலை செய்து கொண்டால் அதே தண்டனை தான் மறுமையிலும் அவனுக்கு வழங்கப்படும் என்று மார்க்கம் தெளிவாகச் சொல்வதாக மார்க்கஅறிஞர்கள் கூறுகிறார்கள்.

அதாவது ஒரு முஸ்லிம் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டால் அவன் மறுமையிலும் அவன் தூக்கில் தொங்க வேண்டியது தான். ஒருவன் விஷம் குடித்து மாய்த்துக் கொண்டால் மறுமையிலும் அவனுக்கு வாந்தி மயக்கம் இப்படித் தான் தண்டனை ஒருவன் மலையிலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொண்டால் மறுமையிலும் சிதறிய உடலோடு தான் கிடந்து உழல வேண்டும். ஒரு மனிதனுக்கு உயிரைப் பற்றி எவ்வளவு எச்சரிக்கை செய்யப்படுகிறது. இதை நம்பாதவன் முஸ்லிமே அல்ல.

இசுலாத்தை ஏற்றுக் கொண்டு 35 ஆண்டுகள் மூமீனாக வாழ்ந்த ரஹ்மத் நகர் முஸ்லிம்களுக்கு இது கூடவா தெரியாமல் போனது ஆகவே இதில் சொல்லப்பட்டுள்ள சம்பவங்கள் உண்மையல்ல.

நண்பர் பாலசிங்கம் ஒரு முஸ்லிமுக்கான நம்பிக்கையோடு இந்நூலை எழுதவில்லை பிஸ்மில்லாஹ் போட்டுக் கூட நூலை துவக்கவில்லை. அவர் எழுத்தின் இடையில் ஒரு இஸ்லாமியருக்கான பண்பாட்டுக்கான கூறுகள் எதுவும் இதில் காணப்படவில்லை. பாலசிங்கமாகவே இந்த நூலை எழுதியுள்ளார். அன்வர் என்பதற்கு அர்த்தமேயில்லை. நூலில் சொல்லப்பட்டுள்ள சம்பவங்கள் உண்மையில்லையாதலால் இது விவாதத்திற்கான நூலே அல்ல" என்பதாக கூறினேன்.

எனக்குப் பின்னால் பேச வந்த எழுத்தாளர் ஹெச். முஜீப் அவர்கள் இந்த நூலை நியாயப்படுத்திப் பேசியதோடு நான் நேரில் சென்று கள ஆய்வு செய்ததைக் கொச்சைப்படுத்திப் பேசினார். நாவல் என்றால் எல்லாம் உண்மையாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றும் உலகம் முழுவதும் இஸ்லாத்தில் பாகுபாடு இருக்கிறது என்றும் நாவலில் இல்லாத விசயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்.

பார்வையாளர் பகுதியில் இருந்த உள்ளூர் தோழர்கள் அவர் பேசிய கருத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பேசினார்கள் இதனால் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டு அத்துடன் கூட்டத்தை முடிப்பதாக அறிவிப்புச் செய்து இறுதியாக நூல் ஆசிரியர் அன்வர் பாலசிங்கம் அவர்களுக்கு ஐந்து நிமிடம் வாய்ப்புக் கொடுத்தார்கள். அப்போது மீனாட்சிபுரத்தில் தற்கொலை செய்து கொண்டது உண்மையென்றோ, 60க்கும் மேற்பட்ட பெண்கள் திருமணம் ஆகாமல் இருப்பது உண்மையென்றோ அவர் குறிப்பிடவில்லை இது குறிப்பிடத்தக்கது.

: டிஎம். உமர் ஃபாரூக்

## நிகழ்ச்சியில்:

ஹெச். முஜீப்: வட இந்தியாவில் இஸ்லாத்தில் ஜாதி இருக்கின்றது. இதற்கு இணையதளங்களைப் பாருங்கள். அதனால் ஜாதியை ஒழிக்க, இஸ்லாத்திற்கு செல்வதில் அர்த்தமில்லை, என இணையதளங்களின் முகவரிகளைத் தந்து கொண்டிருந்தார்.

குழுமி இருந்தவர்களில் ஒரு முஸ்லிம் மேடைக்குச் சென்று ஹெச். முஜீப் என்பவர் சொல்லும் இணையதளங்கள் இஸ்லாத்தின் எதிரிகளால் உருவாக்கப்பட்டவை என்பதைத் தெளிவுபடுத்தினார்.

அன்வர் பாலசிங்கம் அவர்களுக்கு மீண்டும் பேசிட வாய்ப்பு வழங்கப் பெற்றதால் மீண்டும், டிஎம். உமர் பாரூக் அவர்களுக்கு சில

நிமிடங்கள் வழங்கிட வேண்டும் என்றொரு கோரிக்கையை குழுமியிருந்தவர்கள் நிகழ்ச்சி ஏற்பாட்டளாரிடம் கூறினார்கள்.

ஆனால் நிகழ்ச்சியை ஏற்பாட்டாளரான செய்திருந்த கௌதமன் அவர்கள் மீண்டும் ஒரு வாய்ப்பினை டி.எம். உமர் பாரூக் அவர்களுக்கு வழங்கிட மறுத்தார்கள்.

ஆனால் டி.எம். உமர் பாரூக் அவர்கள் தான் இருந்த இடத்தில் எழுந்து நின்று மீனாட்சிபுரம் மதமாற்றம் ஓர் தோல்வியல்ல என்பதை அழுத்தமாகத் தெளிவு படுத்தினார்கள்.

நிகழ்ச்சியினூடே, சாமியார் ஒருவர் சாமியார் உடையிலேயே வந்து அன்வர் பாலசிங்கம் அவர்களுக்கு பச்சை ஆடையொன்றை அணிவித்தார்.

நிகழ்ச்சிக்குப் பின்னரும் மக்கள் ஆங்காங்கே குழுமி நின்று விவாதங்களை மேற்கொண்டார்கள்.

மொத்ததில் டி.எம். உமர் பாரூக் அவர்களின் ஜாதி ஒழிந்தது நூலுக்குப்பின் இஸ்லாத்திலும் ஜாதி உண்டு என்றொரு பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டிருப்பதாக தெரிகின்றது என்றனர் இன்னொரு சாரார்.

நோக்கம் ஜாதி ஒழியும் என்பதற்காக இஸ்லாத்திற்கு யாரும் செல்ல வேண்டாம், என தீண்டத்தகாத மக்களுக்கிருக்கும் கடைசி வழியையும் அடைப்பதே ஆகும். இதுவும் மக்கள் விவாதத்தில் வந்தது அருந்தியர் சமுதாயத்தின் விடுதலைக்காகப் போராடி வரும் வழக்கறிஞர் சின்னசாமி அவர்கள் தாங்களும் இந்த விவாத அரங்கில் பேசிட வாய்ப்புக் கேட்டிருந்ததாகவும். அதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்ததாகவும். ஆனால் அதற்கு பின்னர் மறுக்கப்பட்டிருந்ததாகவும் கூறினார்கள்.

சுருக்கமாகச் சொன்னால் 1981 இல் மீனாட்சிபுரத்தில் ஏற்பட்ட மனமாற்றம் மத மாற்றம் இவற்றிற்கெதிரான பெரும் போர் இன்னும் இன்றும் தொடருகின்றது என்றே படுகின்றது.

: தஞ்சையிலிருந்து நமது நிரூபர்




திருமணம் மற்றும் அனைத்து
விசேஷங்களுக்கும் தேவையான
வண்ண வண்ண
பத்திரிக்கைகள் வாங்கிட..

# லிபர்ட்டி


## கார்ட்ஸ் & பேப்பர்ஸ்

மற்றும்

- அனைத்து வகை ஸ்டேஷனரி
- பேப்பர்கள், ஸ்கூல் நோட் புக்ஸ்
- ஜெராக்ஸ்
- லேமினேஷன்

எண். 1, ஜின்னா காம்ப்ளக்ஸ்
(நகராட்சி மேல்நிலைப்பள்ளி எதிரில்)
143, பட்டமங்கலத்தெரு, மயிலாடுதுறை
போன் : 04364 - 225185

# அப்சல் குரு தூக்கிலடப்படத்தான் வேண்டுமா?



## நாடாளுமன்றத் தாக்குதல்

**அருந்ததி ராய் எழுப்பும் 13 கேள்விகள்**

நமது நாட்டை உலுக்கிய மாபெரும் நிகழ்வு டிசம்பர் 13,2001 இல் நடந்த நாடாளுமன்ற தாக்குதல்.

நாட்டு மக்களின் அனைத்துப் பிரதிநிதிகளும் ஒன்றாய் இருந்த அவை தாக்கப்பட்ட இந்த நிகழ்வு நமது நாட்டு மக்களின் கோபத்தையும் அதைப் பின்னணியாகக் கொண்டு ஒரு பெரும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தி இருக்க வேண்டும்.

ஆனால் நாட்டு மக்கள் அனைவரும் இந்த நாட்டில் நடக்கும் சதிகளைப் பற்றித் தெரிந்திருந்தார்கள்.

இதில் அதாவது நாடாளுமன்ற தாக்குதலில் குற்றவாளிகளாகக் காட்டப் படுபவர்களுக்குப் பின்னால் கீழறுப்பு வேலைகள் குமிந்து கிடக்கின்றன என்பதை நிச்சயமாக அறிந்து கொண்டார்கள். ஒவ்வொரு முறையும் இது போன்ற நிகழ்வுகள் நடக்கும் போதும் பாசிச பயங்கரவாதிகள் பலனடைகின்றார்கள் என்பதையும் நன்றாகவே அறிந்து வைத்திருந்தார்கள்.

அதனால் அமைதி காத்தார்கள். அவர்களுக்கு அப்போது நாடான்ற பாசிச காட்சியாகிய பாரதீய ஜனதா காட்சி ஏதோ கீழறுப்பு வேலைகளைச் செய்கின்றது என்பது மட்டும் நன்றாகத் தெரிந்திருந்தது. ஆனால் அஃது என்னவென்று தெரியவில்லை. அது குறித்த விளக்கங்களும் அவர்களைச் சென்றடைய வில்லை.

நாடாளுமன்ற தாக்குதலுக்கு முன் நாட்டை ஆட்சி செய்த பாரதீய ஜனதாகட்சியின் சவப்பெட்டி ஊழல் நாட்டையும் நாடாளுமன்றத் தையும் ஒன்று போலவே உலுக்கிற்று.

அப்போதைய உள்துறை அமைச்சர், கோடிக்கணக்கில் சிறுபான்மை மக்களின் உயிர்களைக் குடித்த எல்.கே. அத்வானி என்பவராவார். நாடாளுமன்றத்தில் அப்போது ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். அது தான் பொடா. இது அனைவராலும் காட்டுமிராண்டி சட்டம் எனப் பேசப்பட்டது.

இந்தச் சட்டத்தை அவரால் அன்றைய நாள்களில் நாடாளுமன்றத்தில் அறிமுகப் படுத்தக்கூட இயலவில்லை. அந்த அளவுக்கு பாரதீய ஜனதாகட்சியின் ஊழல் ஊரெல்லாம் உழன்று கொண்டிருந்தது.

அப்போது வாங்கிய லஞ்சத்திற்காகத் தான் பங்காரு லஷ்மன் என்ற பாரதீய ஜனதாகட்சியின் அமைச்சர் இப்போது 2012ஆம் ஆண்டு சிறைத்தண்டனைப் பெற்றுள்ளார்.

ஊழலில் சிக்கிக்கொண்ட பாரதீய ஜனதா கட்சி பொடா என்ற காட்டுமிராண்டி சட்டத்தைக் கொண்டு வந்து விட வேண்டும் என்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தது.

நாடாளுமன்ற தாக்குதல் நடந்தது. அனைவரின் கவனத்தையும் வேறு பக்கம் திருப்பி பீதியை உருவாக்கி பொடாவைச் சட்டமாக்கிக் கொண்டது.

நாடாளுமன்ற தாக்குதலின் பின்னாலுள்ள சதிகளையும் அதற்கு ஏற்பாடு செய்தவர்களையும் மக்கள் மன்றத்திலிருந்து மறைப்பதற்கு நமது ஊடகங்கள் செய்த சதிகளுக்கு அளவே இல்லை.

இதையே நீட்டி முழக்காமல் சொன்னால் உண்மைகளை மக்கள் மன்றத்திலிருந்து மறைப்பதற்கு நமது இந்திய ஊடகங்கள் கொண்ட முயற்சிகளுக்கு அளவே இல்லை.

இப்படி, நமது நாடாளுமன்ற தாக்குதலில் ஊடகங்கள் மொத்தமாக மறைத்த நூல்களுள் ஒன்று தான்.

Dec 13, Terror Over Democracy இந்த நூல் PUDR என்ற People's Union For Democratc Rights என்ற மனித உரிமை குழுவின் ஆவணத்தொகுப்பு.

சாதாரணமாக இந்த அமைப்பின் சாதாரண அறிக்கைகளுக்கே நமது ஊடகங்கள் மிகையாக முக்கியத்துவங்களைத் தரும்.

ஆனால் நாட்டை உலுக்கிய மிகப்பெரிய நிகழ்வில் தொகுத்த ஆவணங்களை அப்படியே மறைத்துவிட்டன நமது ஊடகங்கள்.

கண்ணியமிக்க மனித உரிமை போராளி அருந்ததிராய்,இன் கட்டுரைகள் அன்று இன்றும் பல பத்திரிகளில் அட்டைப்பட கட்டுரைகளாக இடம் பெற்று வருகின்றன.

ஆனால் நாடாளுமன்ற தாக்குதல் குறித்து அருந்ததிராய் சொன்ன கருத்துக்கள், எழுப்பிய ஐயங்கள் இவையெல்லாம் முற்றாக மறைக்கப்பட்டு விட்டன.

நமது தலை நகர் டெல்லியில் அருந்ததி ராய் இன் முயற்சியில் ஒரு பெரும் கருத்தரங்கு 2006இல் நடைபெற்றது.

இந்தக் கருந்தரங்கில் ஒரு பெரும் நூல் வெளியிடப்பட்டது. அந்த நூலின் பெயர் டிசம்பர் 13.

இந்த வெளியீட்டு நிகழ்ச்சியில் நாட்டு மக்களின் கருத்துக்களை உருவாக்குபவர்கள் எனக்கருதப்படுகின்ற தலைசிறந்த எழுத்தாளர்களான ஏ.ஜி. நூரானி, பிரபுல் பிட்வய் சிறந்த வழக்கறிஞரும் மனித உரிமை ஆர்வலருமான நந்தித்தா, ஹக்சிரீ அசோக் மித்ரா, ஜாவித் நக்வி, நிர்மலாவ்ஹு முகர்ஜி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இவர்களும் சோனிய ஜப்பார், இந்திர ஜெய்சிங் இருவரும் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள். பொது மக்கள் சேவைக்காக பத்மஸ்ரீ பட்டம் வழங்கப்பெற்றவர். மிகிர் சீழிவாஸ்தவா (இவர் தெஹல்கா, என்ற ஆங்கில வார இதழின் நிரூபர்) இத்தனை பேரும் பங்குக்கொண்டார்கள்.

ஆனால் நமது பொது ஊடகங்கள் இந்தச் செய்தியையோ இந்த நூலையோ கண்டு கொள்ளவில்லை.

இதனை நாம் நமது பத்திரிகைகளில் தெளிவாக எழுதினோம். ஆனால் அவற்றில் இடம் பெற்ற கருத்துக்களில் பல மக்களைச் சென்றடையவில்லை.

இவையெல்லாம் இன்று, நமது குடியரசு தலைவர் முன் உள்ளது. அதனால் அவற்றை இங்கே இடம் பெறச் செய்கின்றோம்.

அதில் அருந்ததி ராய் எழுப்பிய சில வினாக்களை இந்த இதழில் இடம் பெறச் செய்கின்றோம்.

1. நாடாளுமன்றத் தாக்குதல் நடப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பிருந்தே காவல்துறையும் மத்தியில் ஆட்சி செய்து கொண்டிரு:நத ஃபாசிஸ அராசங்கமும் ஓர் அறிவிப்பைச் செய்து கொண்டே இருந்தன. அது, நமது நாடாளுமன்றம் தாக்கப்படலாம் என்பதே. 2001ம் ஆண்டு டிசம்பர் 12ம் நாள், பாதுகாப்பு அதிகாரிகளுடன் நடத்திய ஆலோசனையில் ((Informal Meeting) நிச்சயமாக நமது நாடாளுமன்றம் தாக்கப்படும் என்று அன்றைய பிரதமர் வாஜ்பேய் திட்டவட்டமாக ஓர் எச்சரிக்கையை விடுத்தார்.



டிசம்பர் 13ம் நாள் நாடாளுமன்றம் தாக்கப்பட்டது. இந்தப் பின்னணியில் நாடாளுமன்றத்தைப் பாதுகாக்க பாதுகாப்புப் படையினருக்குக் கடுமையான பயிற்சிகள் வழங்கப்பட்டன. நாடாளுமன்றத்தைச் சுற்றி சிறப்புக் காவல்கள் போடப்பட்டன இந்நிலையில் வெடிகுண்டுகள் நிறைந்த கார் ஒன்று எப்படி நாடாளுமன்ற வளாகத்திற்குள் நுழைந்தது?

2. நாடாளுமன்றத் தாக்குதல் நடந்தவுடன் டெல்லியில் இயங்கும் சிறப்புக் காவல்படைப் பிரிவு இந்த நாடாளுமன்றத் தாக்குதல் லஷ்கர்இதொய்பா, ஜெய்ஷ்இமுஹம்மத் போன்ற அமைப்புகளின் திட்டமிட்ட செயல் என்று அறிவித்தது. அத்தோடு இந்தத் தாக்குதல் முஹம்மது என்பவரால் தலைமையேற்று நடத்தப்பட்ட தாக்குதல் என்றது இந்த முஹம்மது என்பவர்தான் 1998ல் இந்திய விமானம் I.C..814ஐ கடத்தியவர் என்றும் அறிவித்தது. வழக்கு முடிந்த போது இவை எதுவுமே எந்த நீதிமன்றத்திலும் நிரூபிக்கப்படவில்லை. இது தான் உண்மை நிலை என்றால் இவர்களால் எப்படி நாடாளுமன்றத் தாக்குதல் நடந்தவுடன் இது போன்ற அறிவிப்புகளை செய்ய முடிந்தது? அப்படி அறிவிக்க இவர்களிடம் என்ன அத்தாட்சி இருந்தது?

3. நாடாளுமன்றத் தாக்குதல் நடைபெற்ற போது அதனை முழுமையாக நாடாளுமன்ற வளாகத்திலுள்ள கேமராக்களாலும் நாடாளுமன்ற அரங்கிற்குள்ளிருந்த () க்கேளாஸ் சர்க்யூட் டிவி என்ற சி.சி.டிவிகளாலும் பதியப்பட்டு நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கபில் சிபால் இந்தத் தொலைக்காட்சிப் பதிவை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு போட்டுக் காட்ட வேண்டும் என அன்று நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தார். அவரை அப்போதைய மேல் சபையின் துணைத் தலைவர் நஜ்மா ஹெப்துல்லா ஆதரித்தார். நஜ்மா ஹெப்துல்லா அவர்கள் நாடாளுமன்றத் தாக்குதல் குறித்த விளக்கங்களில் பல குழப்பங்கள் இருக்கின்றன என்றும் கூறினார். காங்கிரஸ் தலைமைச் கொறடாவான பிரியரஞ்சன் தாஸ் முன்ஷி அவர்கள், நாடாளுமன்றத்தைத் தாக்க வந்த காரிலிருந்து 6 பேர் இறங்கிப் போவதை நான் பார்தேன் ஆனால் ஐந்து பேர் மட்டுமே கொல்லப்பட்டார்கள் நாடாளுமன்ற வளாகத்தின் தொலைக்காட்சிப் பதிவுகள் (CCTV) தெளிவாக 6 பேரைக் காட்டியது என்று கூறினார். தாஸ் முன்ஷி சொல்வது சரியானதுதான் என்றால் காவல்துறையினர் ஏன் ஐந்து பேர்கள் தான் காரில் வந்தனர் என சாதிக்கின்றனர்? அந்த ஆறாவது நபர் யார்? அவர் இப்போது எங்கே இருக்கின்றார்? அந்தத் தொலைக்காட்சிப் பதிவை ஏன் காவல்துறை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வில்லை? அதை ஏன் பொதுமக்களுக்குக் காட்டவில்லை?

4. இது போன்ற கேள்விகளை அப்போது நாடாளுமன்றத்தில் எல்லோரும் எழுப்பினார் கள். ஆனால் உடனேயே நாடாளுமன்றக் கூட்டம் ஒத்திப் போடப்பட்டது அது ஏன்?

5. நாடாளுமன்றம் தாக்கப்பட்ட உடன் அப்போதைய அரசு நாடாளுமன்றத் தாக்குதலில் பாகிஸ்தானின் கை இருக்கின்றது என்பதற்கு மறுக்கவியலாத சாட்சியங்கள் இருப்பதாக அறிவித்தது. அதோடு 50 லட்சம் படை வீரர்களை இந்தியா, பாகிஸ்தான் எல்லையை நோக்கிக் கொண்டு சென்றது

இந்தியத் திருநாடு ஓர் அணு ஆயுதப் போரை சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானது அஃப்சல் என்பவரை சித்திரவதை செய்து வாங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றைத் தவிர இவர்களிடம் என்ன அத்தாட்சி இருந்தது. இந்த ஒப்புதல் வாக்குமூலம் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. இவர்கள் தங்களிடம் இருப்பதாகச் சொன்ன அந்த மறுக்க முடியாத அத்தாட்சி என்ன?

6. டிசம்பர் 13 அன்று நாடாளுமன்றத் தாக்குதல் நடப்பதற்கு முன்பே பாகிஸ்தானின் எல்லையை நோக்கி படைகளை நகர்த்தியதாக பல செய்திகள் கூறுகின்றன. இது உண்மையா? பொய்யா?

7. நமது படைகளை போர் பீதியுடன் ஒரு வருடத்திற்கு பாகிஸ்தானின் எல்லையில் நிறுத்தி வைத்திருந்தோம்.. இதற்கு நாம் செய்த வீண் செலவு எவ்வளவு? இதில் நமது இராணுவ வீரர்கள் எத்தனை பேர் மாண்டார்கள்? கன்னி வெடிகளை நாம் சரிவரக்கையாளாததால் இறந்த படை வீரர்கள் எத்தனை பேர்? இறந்த குடிமக்கள் எத்தனை பேர்? நமது இராணுவ வாகனங்கள் இடித்துத் தகர்த்ததால் உயிரிழந்த கிராமவாசிகள் எத்தனை பேர்? கழனிகளில் கன்னி வெடிகளை புதைத்ததால் உயிரிழந்த நமது விவசாயிகள் எத்தனை பேர்?

8. கிரிமினல் வழக்கு ஒன்றில் புலன் விசாரணை மேற்கொள்ளும் போது சம்பவம் நடந்த இடத்தில் கிடைக்கின்ற தகவல்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க காரணமாக அமைந்தது எப்படி, என்பதை நிரூபிக்க வேண்டியது காவல் துறையின் கடமை அவ்வாறு இருக்க காவல்துறையினர் முஹம்மது அஃப்ஸல் அவர்களைக் குற்றவாளி என எப்படிக் கண்டுபிடித்தனர்? காவல்துறையின் சிறப்புப் பிரிவு எஸ்.ஏ.ஆர். ஜீலானி என்பவர் மூலமாகத்தான் அஃப்ஸலைக் கண்டுபிடித்ததாகக் கூறுகின்றது ஆனால் அஃப்சலைக் கைது செய்வதற்கான அவசர செய்திகள் ஜீலானி அவர்களைக் கைது செய்வதற்கு முன்பே அனுப்பப்பட்டு விட்டன அவ்வாறு இருக்க எப்படி காவல்துறையினர் அஃப்சலை நாடாளுமன்றத் தாக்குதலில் சம்மந்தப்படுத்துகின்றனர்.

9. காவல்துறையும், நீதிமன்றங்களும் அஃப்ஸல் நமது பாதுகாப்பு படையினரிடம் சரண் அடைந்த ஒரு போராளி என்றும் அவர் ஜம்மு கஷ்மீரின் (Special Task Force) சிறப்புக் காவல்படையின் கண்காணிப்பில் இருந்தவர் என்றும் ஒத்துக் கொள்கின்றன. அப்படி இருக்க தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த ஒருவர் எப்படி நாடாளுமன்றத்தையே தாக்குகின்ற பெரும் சதியில் ஈடுபட முடியும் இதற்கு சிறப்புக் காவல்துறையினர் தரும் விளக்கம் என்ன?

10. லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முஹம்மது போன்ற அமைப்புகள் கஷ்மீரின் சிறப்புக் காவல்படையின் கீழ் இருந்த ஒருவரை அதிலும் குறிப்பாக சிறப்புக் காவல் படையினரால் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட ஒருவரை நம்பி நாடாளு மன்றத் தாக்குதல் போன்ற பெரும் பணிகளில் இறங்குவார்களா?

11. தன்னுடைய வாக்கு மூலத்தில் அஃப்ஸல் என்பவர் தனக்கு முஹம்மது என்பவரை அறிமுகப்படுத்தியவர் தாரீக் தான் என்று, கூறியுள்ளார் இந்த தாரீக் என்பவர்தான் முஹம்மது என்பவரை டெல்லிக்கு அழைத்து வரும்படி கூறியதாகவும் கூறுகிறார். தாரீக் என்பவரின் பெயர் காவல் துறையினர் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையிலும் இடம் பெற்றுள்ளது இந்தக் தாரீக் என்பவர் யார்? அவர் இப்போது எங்கே இருக்கின்றார்?

12. 2001 டிசம்பர் மாதம் 19ம் நாள் அதாவது நாடாளுமன்றத் தாக்குதல் நடந்து ஆறு நாட்களுக்கு பிறகு மஹாராஷ்டிராவில் உள்ள தானே மாநகரக் காவல்துறை ஆணையர் எஸ்.எம் சங்காரி என்பவர் ஓர் அறிவிப்பைச் செய்தார். அந்த அறிவிப்பில் நாடாளுமன்றத் தாக்குதலின் போது கட்டுக் கொல்லப்பட்ட முஹம்மது யாசீன் ஃபதா முஹம்மத் (என்ற அபூ ஹம்ஸா) என்பவர் லஷ்கர் இ தொய்பாவைச் சார்ந்தவர். அவரை நான் மும்பையில் நவம்பர் 2000ல் கைது செய்தேன் கைது செய்தவுடன் அவரை ஜம்மு கஷ்மீர் காவல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளேன் என்று கூறினார். தன்னுடைய வாக்குமூலத்தை உறுதிப்படுத்தும் வகையிலான வலுவான ஆதாரங்களையும் அவர் வெளியிட்டுள்ளார் மஹாராஷ்டிரா காவல்துறை ஆணையர்

சங்காரி என்பவர் சொல்வது உண்மையானால் ஜம்மு கஷ்மீர் காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்ட முஹம்மது யாஸீன் எப்படி நாடாளுமன்றத் தாக்குதலில் ஈடுபட்டிருக்க முடியும்?

காவல்துறை ஆணையர் சங்காரி என்பவர் கூறுவது பொய்யாக இருந்தால் முஹம்மது யாஸீன் என்பவர் எங்கே இருக்கிறார்?

நாடாளுமன்றத் தாக்குதலில் சுட்டுக் கொல்லப்பட்ட 5 பேரும் யார் யார் என்பதை இன்னும் நாம் கண்டுபிடிக்கவில்லையே ஏன்?

13. இந்த வினாக்களை எழுப்பும் அருந்ததிராய் இவற்றை ஆழமாக ஆராய்கின்ற போது நாடாளுமன்றத்தாக்குதலில் பாதுகாப்புபப் டையினரின் (குறிப்பாக ஜம்மு கஷ்மீர் எஸ்.டி.எஃப்.ன்) கரங்கள் உதவிகள் ஈடுபாடுகள் ஆகியவை இருப்பது தெளிவாகத் தெரிகின்றது என்கின்றார் அத்தோடு இந்தச் செய்திகள் நமக்குள் அதிர்ச்சியையோ, ஆச்சரியத்தையோ ஏற்படுத்த வேண்டாம். அரசாங்களும் புலனாய்வத்துறைகளும் இது போன்ற யுக்திகளைக் கையாண்டு தங்களுடைய இலக்குகளை அடைந்து கொள்வது வரலாற்றில் நிரம்பவே நடந்திருக்கின்றது. 1933ல் ஜெர்மனியில் (Reichstag) ரீசஸ்டாக் என்பதை கொளுத்தித்தான் நாஜிகள் ஆட்சியைப் பிடித்தார்கள் அதே போல் தான் ஐரோப்பாவின் உளவுத்துறையினர் இத்தாலியில் ரெட் பிரிகேட் என்ற போராளிக் குழுவை மக்கள் மன்றத்தில் தீவிரவாதிகளாகக் காட்டினார்கள். பின்னர் அழித்தார்கள். மேலே உள்ள கேள்விகளை அரசாங்கத்தை நோக்கிவிடுத்து விட்டு அருந்ததிராய் கூறுகின்றார்.

இதற்கு நம் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் பதிலெல்லாம் வெறும் மௌனம் மட்டும் தான். அருந்திராய் மேலும் கூறுகின்றார் :

அஃப்ஸலைத் தூக்கில் போட்டே ஆகவேண்டும் என்பதற்காக பா.ஜ.க பல்வேறு கீழ்தரமான வேலைகளில் ஈடுபட்டு வருகின்றது. எம்.எஸ்.பிட்டா (M.S.Pitta) என்ற அகில இந்திய தீவிரவாதத்திற்கு எதிரான அமைப்பை நடத்துபவர் நாடாளுமன்றத் தாக்குதலின் போது இறந்த பாதுகப்புப் படையினரின் குடும்பங்களை அணுகி அவர்களுக்கு வழங்கப்பட்ட விருதுகளை அரசாங்கத்திடம் திருப்பிக் கொடுத்து விடும் படி மிரட்டி வருகிறார் அல்லது அஃப்ஸலை உடனேயே தூக்கில் போட வேண்டும் என அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தி வருகின்றார் பத்திரிகைகள் பலவும் இதே மாதிரி எழுதி வருகின்றன. ஸ்பவன் தாஸ் குப்தா என்ற எழுத்தாளர் அஃப்ஸலை தூக்கில் போடவில்லை என்றால் தசரா, துர்கா, போன்ற பண்டிகைகளையோ பூஜையையோ நடத்துவது அர்த்தமற்றது என்று கூறின்றார் இவர்கள் உண்மைகளை மறைக்கின்றார்கள். பொய்யை நிலைநாட்ட எழுதுகின்றார்கள். இதன் மூலம் வகுப்புவாதத்திற்கு தூபம் போடுகின்றார்கள். இவ்வாறு அருந்ததிராய் டிசம்பர் 13 ஒரு மறு ஆய்வு என்று நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அவுட்லுக் என்ற ஆங்கில வார இதழில் (30 அக்கேடாபர் 2006) அஃப்ஸலைத் தூக்கிலிடாதே என்ற கட்டுரையில் அருந்ததிராய் கூறுகின்றார் :

அஃப்ஸல், ஷக்வத் ஆகிய இருவரையும் தேடச் சொல்லும் செய்தி ஸ்ரீநகர் காவல்துறையினருக்கு டிசம்பர் 15 காலை 5.45க்கு வந்ததாக நீதிமன்ற ஆவணங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் தில்லி காவல்துறை ஆவணங்களின்படி ஜீலாணி டெல்லியில் டிசம்பர் 15 காலை 10 மணிக்குத் தான் அதாவது நான்கு மணி நேரம் கழித்தே கைது செய்யப்பட்டார். இந்த முரண்பாட்டை அவர்களால் விளக்க இயலவில்லை காவல்துறையின் கூற்றில் பொருள் முரண் இருப்பதாகப் பதிவு செய்யும் உயர்நீதிமன்றத் தீர்ப்பு இது உண்மையும் அல்ல என்று பலமாகத் தெரிவிக்கிறது. எதற்காக டெல்லி காவல்துறை பொய் சொல் வேண்டும் என்கிற கேள்வி கேட்கப்படாமலும் பதிலற்றும் உள்ளது.


ஆதாரம் : 13 December - A Reader The Strange case of the attack on the Indian Parliament. ஆங்கிலம் தெரிந்த வாசகர்கள் அவசியம் வாங்கிப் படிக்க வேண்டிய நூல்.

:MGM

புதைக்கப்பட்ட மக்கள்: மறைக்கப்பட்ட வரலாறு :

# பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை !!!

கரு: டாக்டர். ஆங்ச்சுவீ
தமிழ்வடிவம் : மு. குலாம் முஹம்மது




நானும் எனது புதிய பாலஸ்தீன தோழி லைலா ஷஹீதும் ஷாப்ரா, ஷத்திலா முகாமில் கண்ட காட்சி எங்களை பேய் அறைந்தாற் போல் மலைத்து நிற்க வைத்து விட்டது.

எங்கள் கண்முன்னே! சிறுவர்களுக்கான ஒரு விளையாட்டு மைதானம். அந்த மைதானத்தில் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட்ட அந்த அரும்புகளின் உடல்கள் சிறார்களின் பிணங்கள் நாங்கள் போகும் போது அழுகத் தொடங்கி இருந்தன.

அந்தச் சிறார்களின் உடல்களிலிருந்து துர்நாற்றம். சற்று நெருங்கிப் போர்த்தோம். பூக்களை புயல் அடித்துச் சிதறச் செய்ததைப் போல் ஆங்காங்கே மழலைகளின் பிணங்கள் உதிரிப்பூக்களாய். எங்களால் அந்தக் காட்சியை பார்த்திட இயலவில்லை, சகிக்க முடியவில்லை.

இன்னும் கொஞ்சம் நடந்தோம். நிலத்தில் விழிபதித்து கூர்ந்து பார்த்தோம். அங்கே புதைக்கப்பட்ட இல்லை மண்ணோடு மண்ணாக்கப்பட்ட சிறார்களின் உடலிருந்து மண்ணில் புதைந்திட மறுத்த சிறுவிரல்கள் பருத்து பரவியும் கிடந்தன.

என்னே இந்த இஸ்ரேலிய இராணுவத்தினர், மழலைகளைக் கூடவா இப்படிச் சிதைப்பார்கள்? குரூரமாகக் கொலை செய்வார்கள்?

அவர்கள் குரூரகுணம் எங்களை கதிகலங்கிடச் செய்தது. எங்களைக் கவ்விக் கொண்ட சோகத்தினூடே ஓர் எண்ணம். இந்த மைதானத்தில் இஸ்ரேலிய இராணுவம் செய்த கொலைகள் பிணமாகக் குவிந்த பின்னரும் அந் மழலைகளின் உடல்களை அவர்கள் கையாண்ட விதம் எங்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. இஸ்ரேலிய இராணுவத்தினர் படுகொலைகளைச் செய்த, ஷாப்ரா, ஷத்திலா முகாம்களில் பிணங்களை புல்டோசர்களைக் கொண்டு மண்ணோடு மண்ணாக ஆக்கிவிட்டார்கள். அதனால் இஸ்ரேலிய இராணுவம் இந்தப் படுகொலைகளை உலக மக்களின் பார்வையிலிருந்து மறைத்து விட்டதாக எண்ணிக் கொண்டது.

இந்த உத்தியை இந்த விளையாட்டுத் திடலில் நடந்த குழந்தைகள் படுகொலையிலும் கையாண்டிருக்கின்றது. அதே நேரத்தில் இந்த மழலைகளின் பிண அடுக்கு ஒன்றையும் இங்கே விட்டுச் சென்றிருக்கின்றது. அதுதான் ஏன் என்று புரியவில்லை? இஃதோர் புதிராகவே தெரிந்தது. புரிந்து கொள்ள முடியவில்லை.

லைலா ஷஹீத் இன் பார்வையில்

இஸ்ரேலிய இராணுவம் இந்தக் குழந்தைகளின் பிணங்களை அவர்களின் படுகொலை களிலிருந்து தப்பித்தவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக விட்டுச் சென்றிருக்கலாம். காரணம் இதனை பார்க்கும் எஞ்சியுள்ள பாலஸ்தீன அகதிகள் இனி இஸ்ரேல் என்றால் பதறுவார்கள். எங்கேயும் சாட்சி சொல்ல வர மாட்டார்கள்.

ஆனால் பாலஸ்தீன முஸ்லிம்கள் அத்துணை கோழைகளல்ல. அவர்கள் சண்டையிடவோ சாட்சி சொல்லவோ வாய்ப்புக்கிடைத்தால் அதனை நழுவ விடுபவர்களல்ல. அவர்கள் உயிருக்கு அஞ்சுபவர்களல்ல அதை இஸ்ரேலிய இராணுவத்தினர் இனிவரும் நாட்களில் தான் புரிந்து கொள்வார்கள். ஆனாலும் இப்படிப்பட்ட கல்நெஞ்சக் காரர்களை மனித இனத்தில் எங்கேயும் காணவியலாது. எங்கள் மனம் பட்டபாட்டை சொல்லி மாளாது எங்களுக்குத் தெரிந்ததெல்லாம் காஸா மருததுவமனை அதனை மீண்டும் மீண்டும் உயிர்வாழ செய்திடும் அஜீசா ஹாலித், உம்மு வாலித், ஹாட்லா ஆகியோர் தான். ஆகவே அவர்களுக்கே செய்தியைச் சொன்னோம் அந்த மழலைகளின் உடல்களை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். அஜீசா ஹாலித் அவர்களின் ஏற்பாடுதான் அந்த மழலைகளின் உடல்களுக்கு நல்லடகத்தைப் பெற்றுத் தந்தது.

என்றாலும் இந்த மழலைகளின் நினைவுகள் எங்கள் இதயங்களை முற்றாக ஆக்கிரமித்து ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தன. எங்களால் அதற்குமேல் அங்கே நின்றிட இயலவில்லை.

கனத்த இதயமொன்றைச் சுமந்தவர்களாக நாங்கள் அங்கிருந்து அகன்றோம் லைலா, ஷஹீத் தளர்ந்தவளாக தான், இல்லம் சென்று மறுநாள் திரும்புவதாகச் சொன்னாள். ஆண்துணை இழந்த ஓர் அபலையின் முகத்தைப் போல் இருந்தது.

எங்கேனும் சென்று என்னுடலை படுக்கையில் போட வேண்டும். அப்போது தான் இதயத்தில் ஏறிய பழுவை இந்த உடல் தாங்கிடும். இல்லையேல் சுமை தாழாமல் உடல் தரையிலேயே சாய்ந்திடும் போல இருந்தது.

கண்ணீர் மல்க இருவரும் பிரிந்தோம். மறுநாள் லைலா ஷஹீத் காலையிலேயே நாங்கள், அதாவது வெளிநாடுகளிலிருந்து நிவாரணப் பணிகளைக் கவனிக்க வந்த மருத்துவர்கள், தங்கி இருந்த ஹம்ராவிலுள்ள மேஃபெயர் ரேபி டென்சிக்கே வந்தாள்.

அவள் முகம் மிகவும் சுருங்கி இருந்தது. நான் கேட்பதற்கு முன் அவளே ஓர் தன்னிலை விளக்கத்தைச் சொன்னாள். இரவெல்லாம் தூக்கமில்லை சுவீ, படுக்கையெல்லாம் புரண்டு புரண்டு காலத்தைக் கடத்தினேன். கண்களைச் சுதந்திரமாக விட்டு விட்டேன். அந்த மழலைகள் என் இரத்தம். எங்கள் குடும்பமே 1948இல் ஜெரூசலத்திலிருந்து விரட்டப் பட்டதுதான். நாங்கள் எங்கள் குடும்பத்தில் 18 பேரை அப்போது பிணமாகத் தந்தோம் எங்கள் கண்களின் முன்னாலேயே அவர்கள் கண்ட துண்டமாக வெட்டப்பட்டார்கள். இவர்களும் அங்கிருந்து அன்று தப்பியர்கள் தாம். ஆனால் இங்கே குழந்தைகளே இவ்வளவு கோரமாகக் கொலை செய்யப்பட்டிருக் கின்றார்கள் என்றாள். தேம்பித் தேம்பி அழத்தொடங்கி விட்டாள் அத்தோடு அவளை என் மார்போடு அணைத்துக் கொண்டேன்.

அவள் எழுந்திருந்தாள். களைத்துப் போயிருந்தாள். நான் அவளைத் தேற்றினேன். அவள் இல்லை சுவீ அந்த மக்களுக்குத்தான் ஆறுதல் தேவைப்படுகின்றது. அங்கே செல்வோம். அவர்களில் பிழைத்தவர்களுக்கு சற்றே ஆறுதல் சொல்லிவிட்டால் என் மனச்சுமை சற்றாவது இறங்கும் என்றாள்.

வா போகலாம் என்ற நான், இந்த மக்களை இந்த நிலைக்கு ஆளாக்கியவர்கள் இந்த மேல்நாட்டவர்கள் தாம். அவர்களே இந்த பாதகத்திற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றேன். அவர்கள் இந்த மக்களை தங்கள் ஆண்களோடு வாழ்ந்திட அனுமதித்திருந்தால் இஸ்ரேலிய இராணுவம் புன்மைத் தோரைகளைப் போல் இவர்களைக் கொன்று குவித்திருக்கவியலாது என்றேன். அப்போதும் எனக்கு இந்த வரிகள் தாம் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்தன.

"I Could only guess how the palestinian fighers who had been evacuvated must have felt when they left their families be-

hind, they entrused them to the powerful western nations who guranteed their safety. they left Lebanon after ten weeks of bombardment so that isreal's attack on lebanon would end and lebananese and Palestininan citizens would he spared. They have done so at the request of various habananese and Arab Leaders. Tucked away now in Syria, Tunisia, Algeria, Greece and other countries no doubt they felt betrayed and wished that they had stayed after all whatever everyone else wanted. If they had stayed Isreal would have flattened labanon when they left their families were massacred.: (From Beirut to Jerusaltm By Dr Ang Swee Chai Page 82)

நான் (ஷாப்ரா, ஷத்திலா) அகதிகள் முகாம்களிலிருந்து பாலஸ்தீன போராளிகள் எப்படி நெஞ்சமுழுத்தங்களுக்கு உள்ளாகி இருப்பார்கள் என்பதை எண்ணிப்பார்தேன் அவர்கள் தங்கள் குடும்பங்களை எல்லா பலமும் பெற்ற மேலை நாட்டவர்களிடம் தான் ஒப்படைத்து விட்டு சென்றார்கள். இந்த மேலை நாட்டவர்கள் அந்த மக்களின் பாதுகாப்பிற்கு உத்திரவாதம் கொடுத்தார்கள். இஸ்ரேலிய இராணுவம் தொடர்ந்து பத்து வாரங்கள் லெபனான் மீது தாக்குதலை நடத்தியதால் அவ்விடம் (ஷாப்ரா, ஷத்திலா அகதிகள் முகாம்) விட்டு வெளியேறினார்கள். அதனால் லெபனான் மீது தொடரும் தாக்குதல் ஒரு முடிவுக்கு வரும். இதனால் லெபனானைச் சார்ந்த சாதாரண குடிமக்களும் பாலஸ்தீனை சார்ந்த அப்பாவி அகதிகளும் தாக்கப்படுவது தவிர்க்கப்படும் என்று நினைத்தார்கள். லெபனானைச் சார்ந்த தலைவர்களும் அரபு நாட்டு தலைவர்களும் அவர்களிடம் வேண்டியதற்கிணங்கவே அவர்கள் (அந்தப் பாலஸ்தீன மழவர்கள்) தங்களவர்களை அகதிகள் முகாமில் விட்டு (ஷாப்ரா, ஷத்திபா) அகதிகள் முகாமை விட்டு வெளியேறினார்கள். அவர்களை சிரியா துனூசியா, அல்ஜீரியா, கிரீஸ், இன்னும் பல நாடுகளுக்கு அனுப்பி விட்டார்கள். நிச்சயமாக அவர்கள் தங்களை மேலை நாடுகள் ஏய்த்துவிட்டன என்றே எண்ணி இருப்பார்கள். அவர்கள் (ஷாப்ரா, ஷத்தீலா படுகொலைகளைப்பற்றிக் கேள்விப்பட்ட பின் நாம் அந்த முகாம்களிலே தங்கி இருந்திருக்க வேண்டும் யார் என்ன சொன்னாலும் சரியே என்றே நினைத்திருப்பார்கள். அவர்கள் தங்கி இருந்தால் இஸ்ரேல் லெபனானை தரைமட்டமாக்கி இருக்கும். ஆனால் அவர்கள் பாலஸ்தீன போர்வீரர்கள் சென்ற பின் அவர்களின் குடும்பங்களைக் கூட்டாகக் கொலை செய்து விட்டார்கள்.

பெய்ரூத்திலிருந்து லெபனான் வரை டாக்டர் : ஆங்சுவீ சென் : பக்கம் 82

ஆகவே ஒரு சர்வதேச சதியின் விளைவு தான் ஷாப்ரா, ஷத்தீலா படுகொலைகள் என நான் லைலா ஷஹீதுக்கு ஆறுதல் சொன்னேன். அத்தோடு இருவரும் ஷாப்ரா, ஷத்தீலா அகதிகள் முகாம் நோக்கி சென்றோம் ஒரு சிலருக்காவது ஆறுதல் சொல்லிட...

அங்கே முன்னர் (ஷாப்ரா, ஷத்திலா படுகொலைகளுக்கு முன்னர் நான் வைத்தியம் செய்த முன்னா என்பவன் என்னை நோக்கி ஓடிவந்தான். அவனும் ஒரு சிறுவன் தான். ஆனால் இந்தப் படுகொலையின் போது ஒளிந்து இருந்து கொண்டான். அவன் என்னை கட்டித்தழுவினான் மழலைப் பருவத்திலிருந்து சற்றுக் பெரியவன் அவ்வளவுதான். என்னை நன்றிப் பெருக்கோடு ஆரத் தழுவினான் நான் அவனிடம் எப்படி இருக்கின்றாய் எனக் கேட்பதற்குள் அவன் என்னிடம் எப்படி இருக்கின்றீர்கள் எனக் கேட்டான். நான் அடுத்துப் பேசுவதற்குள் அவனே பேசிடத் தொடங்கினான். உங்களையெல்லாம் அந்தக் கொலைகாரர்கள் கடத்திச் செல்வதை நான் மறைந்திருந்திருந்து பார்த்தேன். நீங்கள் உயிரோடு இருப்பது ஆச்சரியமாக இருக்கின்றது என்றான்.

நீ அப்போது எங்கிருந்தாய் எனக் கேட்டேன். காஸா மருந்துவமனைக்குள்ளேயே பதுங்கிக் கொண்டேன் என்றான்.

“பின்னர் என்றேன்” நான் அவன் தாமதிக்காமல் பதுங்கி பதுங்கி ஷத்திலா முகாம் வந்தேன். அதற்குள் எல்லாம் முடிந்து விட்டது. என்னோடு சிறுவர்கள் விளையாட்டுத் திடலில் விளையாடிக் கொண்டிருக்கும் போதே சுட்டுக் கொன்றார்கள். எங்கள் குடும்பத்தில் எல்லோரையும் கொன்று விட்டார்கள் பாட்டி


AS - SALAM
COLLEGE OF ENGINEERING & TECHNOLOGY
STRIVE ALWAYS TO EXCEL
AS-SALAM
College of Engineering & Technology
COURSES OFFERED
B.E. - Mechanical Engineering
B.E. - Civil Engineering
B.E. - Electronics & Communication Engineering
B.E. - Computer Science & Engineering
B.E. - Electrical & Electronics Engineering
SALIENT FEATURES
➤ Lush Green Environment
➤ Well Qualified and Experienced Faculties
➤ Special Training for Communication & Soft Skill
➤ Excellent & Modern Infrastructure
➤ Well Equipped Laboratories & Automated Libra
➤ Seperate Hostel for Boys & Girls
➤ Transport provided from major towns
AS-SALAM COLLEGE OF ENGINEERING & TECHNOLOGY
Thirumangalakudi - Aduthurai, Thanjavur Dist. 612 102 - Phone: 0435-2473354, 247335
Email: ascet.aduthurai@gmail.com - Website: www.as-salamcollege.com



மட்டும் தான் மிச்சம் என்றான். கொலைகளை நான் மறைந்திருந்து பார்த்தேன் என்றான் கண்ணீர் மல்க.

எங்கே உன் பாட்டி? எனக் கேட்டேன் என் கைகளைப்பிடித்து இழுத்துக் கொண்டு போய் பாட்டியின் முன்னால் நிறுத்தினான்.

லைலா ஷஹீத் இதையெல்லாம் கண்டு அதிசயத்தால் ஆட்கொள்ளப்பட்டவளாக நின்றாள். கண்களில் கண்ணீர் நிரம்பி நின்றது. அவள் அந்த மக்கள் விசயத்தில் காட்டிய அன்பு அனுதாபம் அக்கறையெல்லாமே என் இதயத்தைப் பிழிந்தன.

முன்னாவின் பாட்டியிடம் சென்றோம். குனிந்த நிலை நிமிராமல் இல்லை நிமிர முடியாமல் சோகச் சுமை அவள் தலை குப்புறக் கவிழ்ந்தே கிடந்தது. முன்னா தன் பாட்டியிடம் எங்களை அறிமுகப்படுத்தி வைத்தான்.

அவள் சற்றே எங்களை ஏறெடுத்துப் பார்த்தாள். நாங்கள் அவள் கைகளைப் பற்றியவளாக ஆறுதல் சொன்னோம். இப்போது எனது மொழி அங்கே பிரச்சனை இல்லை லைலா ஷஹீத், நேரடியாக அவளுக்கு ஆறுதல் சொன்னாள்.

முன்னாவின் பாட்டி ஹாதிஜி சற்று நேரத்தில் எங்களுடன் கலந்து பழகத் தொடங்கி விட்டாள்.

ஷாப்ரா, ஷத்தீலா. படுகொலைகளால் பட்ட கொடுமைகள் அவளை வெகுவாகப் பாதித்திருந்தன. ஏனையவர்களின் துயரத்தை விட அவளுடைய துயரம் சற்று கோரமானது குரூரமானது அனைத்தையும் விட ஆழமானது.

''பாலஸ்தீனத்திலிருந்து யூத தீவிரவாதத்தால் துரத்தப்பட்ட மக்கள் அகதிகளாக முஸ்லிம் நாடுகளில் குறிப்பிட்ட அரபு நாடுகளில் குடியேறினார்கள். அதில் 1948களில் ஒரு பகுதியினர் லெபனானி டெல்அஷத்தர் என்னுமிடத்தில் அகதிகளாக வாழத் தொடங்கினார்கள். அங்கே லெபனானின் ஏனைய முஸ்லிம்கள் தந்த ஆதரவால் வலுப்பெற்றார்கள். ஓரளவுக்கு சராசரி வாழ்க்கை கைவரப் பெற்றவர்களாக வாழ்ந்தார்கள். இப்போது இஸ்ரேல் 1982இல் லெபனானுக்குத் தந்த நெருக்கடியைப் போல் 1976களிலும் ஒரு நெருக்கடியைத் தந்தது.. அந்த நெருக்கடி டெல்அஷத்தரில் வாழும் பாலஸ்தீன அகதிகள் அங்கிருந்து வெளியேறிட வேண்டும் என்பதே. சில நிபந்தனைகளின் கீழ் பாலஸ்தீன அகதிகள் அந்த அகதிகள் முகாமைவிட்டு வெளியேறிட ஒத்துக் கொண்டார்கள்."

அந்த நிபந்தனைகளுள் ஒன்று அவர்கள் வெளியேறிடும் போது அவர்கள் விரும்பும் நாடுகளுக்குச் சென்றிட அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே

ஆனால் தாங்கள் தந்த வாக்குகளுக்கு நேர் எதிராக நடந்து கொண்டார்கள் யூதர்கள். வெளியேறிட தலைப்பட்ட பாலஸ்தீன அகதிகளைக் கொலை செய்தனர்.

ஆண்களும், பெண்கள் குழந்தைகள் முதியோர் உட்பட மூன்றாயிரம் (3000) பாலஸ்தீன அகதிகள் கொலை

செய்யப்பட்டனர். படுகொலைகள் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டன. இதை பொருத்திட இயலாத அந்த பாலஸ்தீன ஆண்களும், பெண்களும் யூத இராணுவத்தை எதிர்த்துப் போராடினார்கள்.

மூன்றாயிரம் பேரை இழந்தபின் தொடங்கப்பட்ட எதிர்தாக்குதல் என்றாலும் வலுவான தாக்குதல். அதிர்ந்து போன யூதர்கள் சமாதானம் செய்து கொண்டார்கள் மேலை நாட்டவர்களின் உதவியோடு.

அப்போதும் சர்வதேச நாடுகள் யூதர்களுக்கே உதவி செய்தன. இதிலுள்ள மாபெரும் கொடுமை என்னவெனில் அந்தப் பிணங்களையும் (White Lime) வெள்ளை எலுமிச்சை என்றொரு இராசயன பொடியை அந்த பிணங்களின் மேல் தெளித்தார்கள் சதைப்பகுதி சாம்பலாகியது. எலும்புகளை புல்டோசர்களைக் கொண்டு மண்ணோடு மண்ணாக ஆக்கி விட்டார்கள்.

இந்த டெல் அல் ஷத்தர் படுகொலைகள் உலக மக்களின் பார்வையிலிருந்து முற்றாக மறைக்கப்பட்டு விட்டன.

இந்த டெல் அல்ஷத்தர் படுகொலைகள் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த போது அந்த அகதிகள் முகாமிலிருந்து தப்பித்துக் கால்நடையாக வெளியே சந்ததிகள் முன்னாவின் பாட்டி அத்தோடு தன் குடும்பத்தைச் சார்ந்த ஏழு பேரை காப்பாற்றிக் கொண்டு வந்து விட்டாள். அவர்கள் 20 கிலோ மீட்டர் தூரத்தை நடந்தே கடந்து வந்தார்கள்.

ஆனால் முன்னாவின் பாட்டியை பிரித்து எல்லோரும் ஷாப்ரா, ஷத்தீலாவில் (1982 செப்டம்பர் 18முதல் 21 வரை) நடந்த படுகொலையின் போது கொலை செய்யப்பட்டு விட்டார்கள்.

முன்னாவின் தயார் கொலை செய்யப்பட்ட விட்டாள் முன்னாவின் தந்தை சர்வதேச ஏற்பாட்டின் கீழ் வெளியேற்றப்பட்டார்.

முன்னாவின் மாமா அபூ ஜுபைர் ஓர் அழகான ஆஜானுபாகுவான போர் வீரன். அவன் டெல் அல் ஷத்தர் படுகொலைகளின் போது இஸ்ரேலிய இராணுவத்தை எதிர்க்க வெறுங்கையோடு களமிறங்கியவன். ஆனால் லெபனான் முஸ்லிம்களின் உதவியுடன் ஆயுதங்களைப் பெற்றவன். இஸ்ரேலிய இராணுவத்தோடு ஒரு முழு அளவு போரை நடத்தி இஸ்ரேலை சமாதானம் என்ற போர்வையில் பின்வாங்க செய்தவன். அதனால் அவனுக்கு டெல் அல்ஷத்தர் வீரன் என்றொரு பெயரும் உண்டு.

அவன் முன்னாவின் குடும்பத்தில் முக்கியமானவன். அவன் பின்னர் டெமாஸ்கஸ் என்ற இடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டான் சர்வதேச ஏற்பாட்டின் கீழ்.

டெமாஸ்கஸ் ஆகதிகள் முகாமிலிருந்தவர்களுக்கு ஷாப்ரா, ஷத்தீலாவில் நடந்த படுகொலைகள் தெரிய வந்தன. அவர்களில் சிலரை அழைத்துக் கொண்டு அபூஜுபைர் அதாவது முன்னாவின் மாமா ஷாப்ரா, ஷத்தீலா அகதிகள் முகாமை நோக்கி நகர்ந்திருக்கின்றான். வழியில் அவனை யூதர்கள் கொலை செய்து விட்டார்கள் இந்தச் செய்தியும் முன்னாவின் பாட்டிக்கு எட்டியது. அவள் முற்றாக உடைந்து போயிருந்தாள்.

கவிழ்ந்த தலை உயர்ந்ததில்லை. எங்களை (ஆங் சுவீ ஆகிய என்னையும் லைலா ஷஹீதையும்) பார்த்தப் போது தான் அவள் தலை நிமிர்ந்தாள்.

முன்னாவின் பாட்டி ஹாதிஜிக்கு அபூஜுபைர் தான் மூத்த மகன். அவனை பற்றி ஹாதிஜி புலம்பத் தொடங்கி விட்டாள் இப்படி. என் மகனே ஏன் நீ ஒரு துப்பாக்கியோடு மலையையும் மடுவையும் கடந்து பயணம் செய்தாய்? உன் உயிரைக் குடிக்க பிணந்திண்ணும் கழுகாய் வட்டமிட்டு வருகின்றார்கள் என்பதை நீ அறிய மாட்டாயா? அத்தனைக் கஷ்டங்களை ஏற்று நெடும்பயணத்தை நீ மேற்கொண்டது கொலை செய்யப்படவா?

பெய்ருத்தே நீ என்னிடமும் என்னைப் போன்ற தாயிடமும் இருந்தவை அனைத்தையும் பறித்துக் கொண்டாய். எங்கள் வாழ்க்கையின் கடைசி நம்பிக்கையையும் நீ புதைத்து விட்டாய்.

உன்னுடைய வீதிகளில் என்னுடைய இதயம் இறந்து கிடக்கின்றது என் மக்களின் உடல்கள் சிதறிக்கிடக்கின்றன.

அபூ ஜுபையர் என்ற நெடு உயர்ந்த மரம், உன்னுடைய வீதியில் வேரோடு பிடுங்கப்பட்டு

வீழ்த்தப்பட்டது.

பெய்ரூத்தே அவனை கொன்றவனின் இரத்தமும் உன் மண்ணில் கலக்கும் நாளை நான் எதிர்பார்க்கின்றேன்.

அவனை கொலை செய்தவனின் தாயும் என்னைப் போல் ஒரு நாள் அழுவாள் என்பது திண்ணம்

மழலைகளையும் மலையாய் நிற்கும் மாண்பாளனையும் பிணமாய்க் குவித்து வேடிக்கைப் பார்க்கும் இந்த உலகை நான் வெறுக்கின்றேன்.

ஆயிரம் கப்பல்கள் கூட என் சோகத்தை சுமக்கமாட்டா.

என்னருமை சகோதரிகளே என்மகள் அவனைப்போல் எங்களுக்காக உயிரைத் தந்த இளவல்கள் இவர்களின் புதைகுழிகளைக் கண்டுபிடியுங்கள் பிரார்த்தனை செய்யுங்கள். மணித்துளியேனும் வாழ்க்கையில் வசத்தத்தைச் சந்திக்காத ஏன் நிம்மதியான ஒரு நொடியைக் கூட சிந்திக்காத அந்த இளம் ஆண்களுக்காவும் பெண்களுக்காகவும் இறைவனிடம் பிரார்த்தியுங்கள்.

அந்த இளம் பெண்ணின் உடலும் ஆண்களின் உடலும் அவ்வளவு சீக்கிரம் மண்ணில் கலந்து விட்டனவே.

வாழ்க்கை வரண்டு போனது

கண்களில் நீர் வற்றிப் போனது

வெற்றிடமானது வாழ்க்கை வாழ வேண்டிய பெண்களும் ஆண்களும் மண்ணோடு மண்ணாகிப்போன பின் நான் ஏன் இங்கே?

இப்படி முன்னாவின் பாட்டி ஹாதிஜி அதாவது யூசுப் ஹுஸைன் முஹம்மத் இன் மனைவி தன் மனச்சுமையை எங்களிடம் சொல்□க் கதறினாள்.

அந்த அரபுமொழி சொற்களை நான் அதன் அழுத்தங்களோடு புரிந்து கொண்ட என் தோழி லைலா ஷஹீத் தாரை தாரையாகக் கண்ணீரை கொட்டினாள்.

அவள் தன் கண்ணீரையும் விஞ்சி என்னிடம் சொன்னது என்னையும் உலுக்கிற்று.

முழுவதையும் புரிந்து கொண்டு அந்த நங்கை ஹாதிஜிக்கு ஆறுதல் சொல்லிட இயலவில்லையே என நான் மனம் நொடிந்த போது எனக்கு லைலா ஷஹீத் ஆறுதல் சொன்னாள் இப்படி. சுவீ கவலைப்படாதே அவள் சொன்னதையெல்லாம் நான் என் டேப்பில் பதிவு செய்துள்ளேன். நான் மொழிபெயர்த்துத் தருவேன் லண்டன் சென்றதும் என்றாள்.

ஆமாம் அடுத்த நாள் அவள் லண்டன் செல்லவிருந்தாள்

அவள் லண்டன் பயணத்தை நான் எனக்கும் அந்த அபலைகளுக்கும் சாதகமாகப் பயன்படுத்திட விரும்பினேன். அதை அடுத்த இதழில் பார்ப்போம

இன்ஷா அல்லாஹ் .....தொடரும்.


வைகறை வெளிச்சம் இப்போது துபாயிலும்....

துபாய் வாசகர்கள் வைகறை வெளிச்சம் மாத இதழை பெற்றிட தொடர்பு கொள்ள வேண்டிய

தொலைபேசி எண் : +971551390923
சென்னை தொடர்புக்கு : 9444329594

வைகறை வெளிச்சம் மாத இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்!

| | |
|---|---|
| பின்அட்டை | ரூ 6000 |
| உள்பக்க அட்டை | ரூ 4500 |
| முழுப்பக்கம் | ரூ 1000 |
| அரைப்பக்கம் | ரூ 500 |
| விசிட்டிங்கார்டு அளவு | ரூ 250 |

*சிறப்புப் பார்வை*

# ஜாமியா மிஸ்பாஹுல் ஹுதா அரபிக்கல்லூரி

## *நாலணா என்ன செய்யமுடியும்?*




*உலகெங்கும் வாழும் மக்களின் கவனத்திற்கும், கருத்திற்கும் அந்த மத்ரஸாவின் குறுகிய வரலாற்றைச் சமர்பிக்கின்றோம்- இவன் வைகறை ஆசிரியர் குழு மற்றும் பத்திரிக்கையாளர் ஷாஹுல் ஹமீத்,*

**நாலணா என்ன செய்யமுடியும்?**

*தஞ்சை மாவட்டம் நீடூர் நெய்வாசலில் வீற்றிருக்கும் ஜாமியா மிஸ்பாஹுல் ஹுதா அரபிக்கல்லூரி 100 ஆண்டுகளை வெற்றிகரமாக முடித்திருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ்*

*(1912-2012 ஜுன் 29,30 - ஜுலை 1)*

*ஒரு மத்ரஸா 100 ஆண்டுகளை நிறைவு செய்வது என்பது சாதாரண விஷயமல்ல*

*மத்ரஸாவை நிருவகிப்பவர்கள் பல தலைமுறைகளாக அதன் நிருவாகத்தைப் பாதுகாத்திருக்கின்றார்கள் என்பது மட்டுமல்ல, அதைச் சுற்றி வாழும் நீடூர் நெய்வாசல் முஸ்லிம்களும் அதையே தங்கள் இதயத்தில் வைத்துப் போற்றிப் பாதுகாத்து அடுத்தடுத்த தலைமுறையிடம் ஒப்படைத்திருக்கின்றார்கள் என்ற உண்மை உரக்க முழுங்கிட வேண்டிய ஒன்று!*

*இந்த வகையில் உலகெங்கும் வாழும் வைகறை வாசகர்களின் துஆக்கள் அதற்குண்டு*

*இப்படி என்னை கிண்டல் செய்தார்கள் என மனம் நொந்தார்கள் நூறு ஆண்டுகளுக்கு முன் அன்புக்கினிய பானீ ஹஜரத் அவர்கள். ஆனால் அந்த நாலணா இன்னொரு வரலாற்றுச் சாதனையாக மிளிர்ந்திருக்கிறது. 100ஆண்டுகால சாதனையாக வளர்ந்திருக்கின்றது.*

*உலகின் பல்வேறு பகுதிகளிலும் தோன்றிய மத்ராஸாக்கள் ஹஜரத் பாணியிலேதான் தோன்றி இருக்கின்றன.*

*இன்று பல்லாயிரக்கணக்கான மார்க்க மேதைகளை உருவாக்கி உலகமெல்லாம் உலாவந்திடவிட்டிருக்கும் தாருல்உலூம் தேவ்பந்த் ஒரு மரத்தடியில் தொடங்கப்பட்டது தான் என வரலாறு கூறும்.*

*அதேபோல் தான் இன்று நீடூர் நெய்வாசலில் வீற்றிருக்கும் ஜாமியா மிஸ்பாஹுல் ஹுதா அரபிக்கல்லூரியும் அன்று இந்த மத்ரஸாவுக் கான கருவை தனது மனதில் வளர்த்த அல்லாமா மௌலவி அல்ஹாஜ் ஷாஹ் அப்துல்*

*கரீம் (ரஹ்) அவர்கள் 1912-இல் தான் செய்த முதல் வேலையை இப்படி குறிப்பிடுகின்றார்கள்*

**“இதற்காக சிறியோனால் இயன்றதை செய்ய வேண்டும் என நாடி அச்சமயமே நிகரில்லா நாயனை முன்னோக்கி சகல வஸ்துகளின் பேரிலும் சக்தி பெற்ற என் ரப்பே! என் மனதில் உள்ள நிதி பாக்கியத்தை நீயே மிக அறிந்தருக்கின்றாய். ஆதலால் உனக்காக அம்மதரஸாவுக்கு நான்கணா கொடுக்கின்றேன் அதை என்னில் நின்றும் ஒப்புக்கொண்டு அதை விருத்தி செய்து வைத்தருள்வாயாக! எனக்கூறி என் கையிலிருந்து 4 அணாவை எடுத்து ஓரிடத்தில் வைத்துவிட்டு..... ”**

*..11.8.1919 இல் பானீ ஹஜ்ரத் ஆற்றிய உரையிலிருந்து..*

*அல்லாஹ்வும் அதை விருத்தியாக்கித் தந்தான் என்பதற்கு இன்றைய நூற்றாண்டு விழா கோலங்கள் சாட்சி!*

*இந்த நான்கணா எட்டணாவாக மாறி 10 அணா 14 அணா என வளர்ந்து சமுதாயத்தில் நல்லெண்ணங்கள் கொண்டவர்களால் பல்கிப்பெருகி ஏளனம் செய்தவர்கள் ஏகடியம் பேசியவர்கள் இவர்களையெல்லாம் விஞ்சி வளர்ந்தது. ஏழு ஆண்டுகளில் அஃது முழு கட்டிடமாக முழுமை பெற்று 11.8.1919 ஆம் ஆண்டு 17 அறைகளுடன் திறக்கப்பெற்றது. அப்போது பானீ ஹஜ்ரத் ஆற்றிய உரையிலிருந்து தான் நாம் மேலே மேற்கோள் காட்டினோம்.*

*அதுவும் நீடூர் நெய்வாசல் ஜாமியா பள்ளிவாசலின் வலது புறத்தாழ்வாரத்தில் தொடங்கப்பெற்ற இந்த மத்ரஸா பின்னர் விசாலமானதொரு இடத்திற்கு மாற்றப்பெற்றது.*

*அல்லாஹ்வின் அளப்பரிய கருணையை வேண்டி நின்ற பானீ ஹஜ்ரத் அவர்களை அல்லாஹ் பொருந்திக்கொண்டான் என்பது மட்டுமல்ல அதனைப் பல்கிப்பெருகிடவும் செய்தான். என்பதை 1932 இல் அல்லாஹ்வை சென்றடைந்த பானீ ஹஜ்ரத் அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பு இல்லை. ஆனால் அளவற்ற அருளான் அல்லாஹ் அவர்களுக்கு இனிவரும் நாள்களிலும் இதற்கான கூலியை வழங்கிக் கொண்டே இருப்பான்.*

*அன்று இடம் வாங்கிட இயலவில்லை என அல்லாஹ்விடம் துஆ செய்த அல்லாஹ்வின் நல்லடியாரின் முயற்சியில் முகிழ்ந்த இந்த மத்ரஸா இன்று விசாலமானதொரு இடத்தை பிடித்துள்ளது. எந்த அளவுக்கு அல்லாஹ் இந்த இடத்தில் செழிப்பை உண்டாக்கினான் என்பதை மருத்துவக்கல்லூரி ஒன்று அங்கே வரவிருந்த போது 50 ஏக்கர் இடத்தை தந்திடும் அளவுக்கு அல்லாஹ் விருத்தியைக் கொடுத்தான். அதாவது பானீ ஹஜ்ரத்தின் துஆவை ஏற்றுக்கொண்டான்.*

**ஜமியா மிஸ்பாஹுல் ஹுதா அரபிக்கல்லூரி வளர்ந்த வரலாறு**

*1912 தொடக்கம் நீடூர் நெய்வாசல் ஜமியா மஸ்ஜித் தாள்வாரம்.*
*19.8.19 புதிய கட்டிடம் 17 அறைகளுடன்.*
*1932 பாணீ ஹஜ்ரத் வபாத் இன்னாலில்லாஹி*
*1939 பத்வாக்கள் எழுதி வழங்கப் பெறுவது தொடங்கியது.*
*1947 பட்டங்கள் வழங்கல் தொடக்கம் - கட்டிடங்கள் விரிவாக்கப்பட்டன.*
*1955 நூல் நிலையம் தொடக்கம்*
*1965 முகப்புத் தோற்றம் வடிவமைப்பு*
*1972 மணிவிழா மணி மண்டபம் வடிவமைப்பு*
*1991 நிக்காஹ்; மஹால் தொடக்கம் 23.12.1991*
*1995 புதிய கட்டிடம் வகுப்பு அறைகள் விரிவாக்கம் 15.1.1995*
*2002 மிஸ்பாஹுல் ஹுதா பள்ளிவாசல் தொடக்கம்*
*2012 நூற்றாண்டு விழா அல்ஹம்துலில்லாஹ்..*

அன்றைக்கு மாணவர்களின் உணவுக்காக புடி அரிசி வாங்கிய மதரஸா இன்று ரூபாய் 50 கோடி சொத்துக்கு அதிபதி.

நாலணாவுக்கு அல்லாஹ் வழங்கிய விருத்தியை இன்று சில பதர்கள் ஆக்கிரமித்திருக்கின்றன. அவற்றை மீட்க வேண்டும் என ஜாமியா மிஸ்பாஹுல் ஹுதா வின் செயலாளர் எஸ்கொயர் சாதிக் ஹாஜி அவர்கள் அக்கறையுடன் கூறி இருக்கின்றார்கள் பேட்டி: சாகுல் ஹமீத்

இதில் பயின்ற மாணவர்கள் பின்னர் அரசின் அப்சலுல் உலமா தேர்வையும் எழுதிட வகை செய்திடும் அளவில் 1981 இல் இந்த மதரஸா ஜாமியா என்று பெயர் மாற்றம் பெற்றது. அன்று முதல் மதரஸா ஜாமியா மிஸ்பாஹுல் ஹுதா என மாறியது.

நவீன மயமாக்கலுக்கு நாங்கள் அன்னியமா னவர்களல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் கணினி கல்வியும் இப்போது இங்கு கற்றுக் கொடுக்கப்படுகின்றது. இன்றைய உலகம் கணினி மயமாக்கப்பட்டு வருவதால் இந்த கல்வி மிஸ்பாஹுல் ஹுதா மாணவர்களுக்கு அறிவுலகின் வழிகளை திறந்துவிடும்.

இது போன்ற முன்மாதிரிகளை முன்வைத்து பலப்பல கல்வி நிலையங்களை உருவாக்குவோம் அல்லாஹ்விடம் அளப்பரிய கூலிகளைப் பெறுவோம். இன்ஷா அல்லாஹ்!

## ஜாமியாவின் தந்தை

நமது ஜாமியாவின் ஸ்தாபகர் அல்லாமா ஷாஹ் அப்யில் கறிம் ஷஜ்ரத் அவர்கள் பிரபல வணிக குடும்பத்தில் ஜனாப் அப்துல் ரஹ்மான் சாஹிபு அவர்களின் இராண்டாவது குமாரராகப் பிறந்தார்கள் .ஆரம்ப கல்வியை உள்ளூரிலேயே முடித்த அவர்கள் தஞ்சை மாவட்டத்தின் தென்கோடியிலுள்ள அதிராம்பட்டினத்தில் சூபி ஹஜ்ரத் மற்றும் ஷைகுனா ஹஜ்ரத் அவர்களிடம் இலக்கணக் கல்வியையும் தப்சீர் ஹதீஸ்களையும் கற்றறிந்தார்கள். அதனை தொடர்ந்து மேற்படிப்பிற்காக வேலூர் சென்று அங்குள்ள சையது வம்சத்தினர்களால் நடத்தப்படக் கூடிய பாரம்பாரியம் மிக்க லத்தீஃபிய்யா அரபிக் கல்லூரியில் சேர்த்து படித்து வந்தார்கள்.

பின்பு குத்பே வேலூர் எனப்போற்றப்பட்ட அஃலா ஹஜரத் ஷம்சுல் உலமா அவர்களிடம் கல்வி ஞானம் பெற்றார்.

பின்னர் வடவடநிலத்தின் உத்திர பிரதேசத்திலுள்ள தேவ்பந்த் தாருல்உலூம் சர்வகலா சாலைக்குச் சென்று பட்ட மேற்படிப்பை முடித்தார். ஊர் திரும்பிய பின்பு வணிகத்தில் ஈடுபட்டார். இஸ்லாமிய நெறிகளுக்கு உட்பட்டு வணிகம் செய்தால் நஷ்டமே வரும் என்ற நிலை. அதனால் வியாபாரத்தில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். (இதனை 1919ல் மத்ரஸா புதிய கட்டிட திறப்பு விழாவின் போது ஆற்றிய உரையில் அதைக் குறிப்பிட்டுள்ளார்கள்). பின்னர் வெளிநாடு சென்று பொருள் ஈட்டினார்கள்.

இருப்பினும் தமது மனம் இதிலெல்லாம் லயிக்கவில்லை என்பதை அனுபவ ரீதியாக புரிந்து கொண்டு ஊர் திரும்பி 1912-ல் இக்கலா சாலையை நிறுவினார்கள்.

1927ம் ஆண்டு புனித ஹஜ் கடமையை நிறைவேற்றினார்கள். இவர்களிடம் ஞானக்கல்வி பயின்ற மாணவர்கள் உலகமெங்கும் பரவி விரவி வியாபித்து இருக்கிறாகள்.

இருபதாண்டு காலம் கல்விச் சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஹஜ்ரத் அவர்கள் 1932ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ம் தேதி தனது இவ்வுலகப்பணியை முடித்துக் கொண்டார்கள்.


அல்லாஹுத்தாலா அவர்களது சேவையை ஏற்று உயரிய பதவிகளை தந்தருள் புரிவானாக! ஆமீன்!.

நன்றி : B.M.Z 50வது ஆண்டு மலர்

## மத்ரஸாக்கள் அன்றும் இன்றும்

நாடெங்கும் மத்ரஸாக்களில் சேர வரும் மாணவர்களின் எண்ணிக்கை அருகி வருகின்றது என்ற கவலை உலமாக்கள் சமூகத்தை கவலையில் ஆழ்த்திவருகின்றது.

இதனால் மத்ரஸாக்கள் நவீன பாட திட்டங்களுடன் நடத்தப்பட வேண்டும் என்ற


Ph. : 04364 - 240080
94 862 786 36
SMART
Electro Spares
Sales & Service
Bus Stand Back Side,
13/10, Bajanai Mada Street, MAYILADUTHURAI - 1.

கோரிக்கைகளும் பேசப்படுகின்றன. மத்ரஸா கல்விகள் உள்மார்க்க விஷயங்களோடு முடங்கிவிடக்கூடாது என்பது நியாயமான கவலையே!

நமது கல்வி நிலையங்களின் பாங்கும் போக்கும் மாறிட வேண்டும் என்பதும் நியாயமானதே!

பல வட மாநில மத்ரஸாக்களில் பாடதிட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவரப் பெற்று, மத்ரஸாக்களில் கல்வி பயின்றவர்கள் இந்தியாவின் நிர்வாகத்துறையாகிய Indian Administrative Service தேர்வுகளிலே தேர்ச்சிப் பெற்றிருக்கின்றார்கள்

இதனை நாம் மிகவும் விரிவாக ஓர் ஆலிம் IAS ஆகின்றார் என்ற தலைப்பில் வைகறை வெளிச்சத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம்.

இந்திய ஆட்சித்துறை என அறியப்படும் Indian Administrative Service அரசியல்வாதிகளின் ஏவலர்களாகவும், எடுபிடிகளாகவும் பயன்படுத்தும் இன்றைய காலகட்டத்தில் தக்வா என்ற இறைவனைப்பற்றிய அச்சத்தை நெஞ்சத்திலே சுமக்கும் ஆலிம்கள் எந்த அளவுக்கு அந்தப் பதவியில் தாக்குப்பிடித்திட இயலும் என்பது கேள்விக்குறியே! எனினும் ஓர் ஆலிம் IAS ஆனது மத்ரஸாக்களும் சாதிக்க இயலும் என்பதையே சுட்டிக்காட்டுகின்றது.

மத்ரஸாக்கள் இதையும் தாண்டி நல்ல விஞ்ஞானிகளையும் அறிஞர்களையும் தொழில் நிபுணர்களையும் தர முடியும் என்பதற்கு மத்ரஸாக்களால் IAS அதிகாரிகளாக ஆக்கிட இயலும் என்பது ஒரு சாட்சி. எனினும் இஸ்லாமியக் கல்வி என்பதும் இஸ்லாம் கல்விக்கு செய்த தொண்டுகளும் இன்னும் விசாலமானவை.

தமிழக மத்ரஸாக்களுக்கு ஒரு பெருமையுண்டு ஆமாம்! திராவிடக் கொள்கைகளை பட்டித்தொட்டிகளிலெல்லாம் பரவிடச் செய்த அண்ணாவை சிறந்த மேடைப்பேச்சாளராகப் பட்டைத்தீட்டியது மத்ரஸாக்கள் தாம் என அண்ணாவே கூறியுள்ளார்கள். தொடக்க காலங்களில் எனக்கு மேடைகள் தேவைப்பட்டன. அந்த மேடைகளை எனக்கு தந்தவை மத்ரஸாக்கள் தாம் என அறிஞர் அண்ணா அவர்கள் பெருமைப்பட பேசி இருக்கின்றார்கள்.

## மேற்கு வங்கத்தில் மத்ரஸாக்கள்

மேற்கு வங்காளத்தில் மத்ரஸாக்கள் வேறொரு மகோன்னத பணியைச் செய்து கொண்டிருக்கின்றன. அது அரசாங்கத்தால் கல்வியைக் கொண்டு சென்றிட இயலாத இடங்களுக்கு கல்வியைக் கொண்டு சேர்த்துக்கொண்டிருக்கின்றன. மேற்குவங்கத்தின் தொலை தூர கிராமங்களில் மதரஸாக்களே எல்லா மக்களுக்கும் பாட சாலைகள்.

இதனால் வெகுவாகக் கவரப் பெற்ற மேற்குவங்க அரசு அந்த மதரஸாக்களுக்கு நிதி உதவி வழங்கிட முன் வந்து, இன்றளவும் நிதி உதவிகளை வழங்கி வருகின்றது.

இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில் மேற்குவங்க மத்ரஸாக்கள் ஒரு உயர் நிலைப் பள்ளியின் வேலையைச் செய்கின்றன. மத்ரஸாக்களில் அரசின் கல்வித்துறையே தேர்வுகளை நடத்தி சான்றிதழ்களை வழங்குகின்றன.

அதில் முஸ்லிம் மாணவர்களைப் போல் முஸ்லிம் அல்லாத மாணவர்களும் கல்வி கற்கின்றார்கள். அனைவரும் அரசின் சான்றிதழ்களைப் பெறுகின்றார்கள்.

இதன் பொருள் அங்கே மத்ரஸாக்களில் வழங்கப்படும் பாடங்கள் அனைத்தையும் தழுவியவை. மேற்குவங்கத்தில் ஆங்கிலேயர் களின் வருகைக்கு முன் கல்வி என்றால் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர் களுக்கும் மதரஸா கல்விதான்.

இந்த மதரஸாக்கள் அனைத்தும் முஸ்லிம்கள் உருவாக்கிய அறக்கட்டளைகளால் வழி நடத்தப்பெற்றவையே !

கல்வி எல்லா சமயத்தவர்களுக்கும் இலவசமாகவே வழங்கப்பபெற்றன.

அந்தப் பாடத்திட்டங்கள் இந்திய அரசின் குறுக்கீடுகளால் சில மாற்றங்களுக்கு உள்ளாகின. என்றாலும் பொதுவான கல்வி என்பது உடைபடாமல் மார்க்க அறிஞர்கள் பார்த்துக் கொண்டார்கள் உண்மையைச் சொன்னால் பாதுகாத்துக் கொண்டார்கள் அனைவருக்கும் கல்வி தரும் கேந்திரங்களாக மத்ரஸக்கள் இருந்துவருகின்றன.

இங்கே அரசு அங்கீகாரம் என்ற பேச்சே எழவில்லை மாறாக அரசே ஓடோடி வந்து எங்களால் மக்களுக்கு கொடுத்திட இயலாததை நீங்கள் தாம் கொடுக்கின்றீர்கள் எனப் பாராட்டி பணமும் தருகின்றது.

இதில் சுயப்பிரவமாக வெளியே வரும் உண்மை என்னவெனில் அங்குள்ள மதரஸாக்களின் பாடத்திட்டங்கள் எல்லாக்கல்வியையும் ஒன்றாக தருகின்றன. மேற்குவங்க மதரஸாக்களில் கம்யூனிஸ்டுகள் தங்கள் கொள்கைகளை திணிக்க எடுத்த முயற்சிகளையும் முறியடித்து மதரஸாக்கள் தங்கள் பயணத்தைத் தொடர்கின்றன.

இந்த பின்னணி இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் தொன்மை மிக்கது. ஆமாம் நாம் கார்தோபாவில் இப்படித்தான் கல்வி தந்தோம். கார்தோபா, ஸ்பெயின், நாட்டின் தலைநகர். இங்கு தான் இஸ்லாம் 800 ஆண்டுகள் ஆட்சிச் செய்து கொண்டிருந்தது (கி.பி. 711-1492) இந்த கல்விக் கூடத்தில் உலகெங்கிலும் இருந்து எல்லா மதங்களையும் சார்ந்தவர்கள் வந்து கல்விகற்றுச் சென்றார்கள். அன்று உலகெங்கிலுமிருந்து கல்விக்கற்றிட வந்த அனைத்து தரப்பு மக்களுக்கும் கல்வியைத் தந்தது. இந்த கார்தோபா மத்ரஸாவில் படித்த சிறந்த மாணவர்களுள் ஒருவரான “ஜெர்பர்ட் என்பர்” பிற்காலத்தில் சில்வெஸ்டர் என்ற பெயரில் போப்பாண்டவரானார். அதாவது கிறிஸ்தவ மதத்தலைவர் பதவியாகிய போப் என்ற உயர்ந்த நிலையை அடைந்தார் என்பது வரையிட்டுக்காட்டடப்பட வேண்டிய வரலாற்று சம்பவம். (SPANISH ISLAM). பிரான்ஸ் நாட்டின் பேரரசர் சார்லிமென் தன் மகனை கார்தோபா பல்கலைகழகத்திற்கு கல்வி கற்க அனுப்பி வைத்தார். (SPANISH ISLAM) (இஸ்லாமிய ஒளிச்சுடர் என்ற நூலில் இரங்கூன் சுலைமான்)

அப்படியனால் அங்கே எல்லாக்கல்வியும் ஒன்றாய் வழங்கப்பெற்றிருக்கின்றது. என்பதை நாம் நன்றாக அறிந்திட இயலும் அந்தக் கல்வியும் இலவசம் தான் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

விஞ்ஞானிகளையும் விஞ்ஞான அறிவையும் இந்த உலகத்திற்கு அள்ளிக்கொட்டிய இஸ்லாமியக் கல்வி இந்த மத்ரஸாக்களில் வழங்கப்பபெற்றவை தான். கல்வி நிலையங்கள் என்றாலே மத்ரஸாக்கள் தாம் என்பது தான் அன்றைய நிலை. இந்த இஸ்லாமியக் கல்விக் கூடங்கள் மத்ரஸாக்கள் பிரிதோர் மகத்தான சாதனையை நிகழ்த்திக் கொண்டிருந்தன. அது உலகில் எங்கெல்லாம் அறிவை வளர்க்கும் இலக்கியங்கள் கிடைத்தாலும் அவற்றை மொழி பெயர்த்து உலகின் மொத்த மக்களுக்கும் கிடைக்கும் படி செய்யும்.

இதனால் கிடைக்கும் அறிவை பார்த்து எழுதி நகல்கள் எடுக்க 180 பேர் கார்தோபா பல்கலைக்கழகத்தில் முகாமிட்டிருந்தார்கள் அவர்கள் நகல்களை எடுத்து தங்கள் மக்களுக்கு கொண்டு சேர்த்தார்கள். அதாவது தங்கள் நாடுகளுக்குக் கொண்டு சென்றார்கள். நகல் எடுக்கவும் அவற்றை தங்கள் மக்களுக்குச் கொண்டு சேர்க்கவும் நிதி உதவிகள் தேவைப்பட்டால், அதனையும் அந்த மதரஸாக்கள் தந்தன. அதாவது கரும்பு தின்னக் கூலியும் கொடுத்தார்கள் முஸ்லிம்கள்.

முஸ்லிம் தனவந்தர்கள் மதரஸாகளுக்கு எழுதி வைத்த சொத்துக்கள் அந்த அளவிற்கு வருவாயை தந்துகொண்டிருந்தன. முஸ்லிம்கள் இதையெல்லாம் செய்து கொண்டிருந்த போது இன்று அறிவுலகின் களம் எனப்போற்றப்படும் ஐரோப்பா எப்படி இருந்தது என்பதை பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள்¸ Europe was in Darken ஐரோப்பா இருளில் முழ்கிக் கிடந்தது

என்பார். (Source : Glimpses of world History By Pandit. Jawaharlal Nehru)

இப்படி கல்வியை அறிவின் வளர்ச்சி என்றும் அதுவே மக்களை மௌட்டீகத்தி லிருந்து விடுவிக்கும் என்றும் விரிந்த விசாலமான பார்வையோடு வளர்த்தது இஸ்லாம். இதுவே மத்ரஸாக்களின் கடமை. அன்று கார்தோபா பல்கலைக்கழகத்தில், டெமாஸ்கஸ்-இன் நூரிய்யா பல்கலைக் கழகங்களில், அன்றைய அல் அஸ்கரில் சொல்லித்தரப்பட்ட பாடத்திட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டு மாணவர் உலகத்திற்குச் கொண்டு சேர்க்கப்பட்டாக வேண்டும். இன்ஷா அல்லாஹ்!

## மத்ரஸாக்களின் மீது கெடுபிடி

வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் ஆங்கிலேயர்கள் உலகின் பல்வேறு நாடுகளையும் ஆக்கிரமித்து தங்கள் கைகளில் வைத்து அந்த நாடுகளை சுரண்டி வந்தார்கள். தாங்கள் ஆதிக்கம் செலுத்திய நாட்டு மக்களைத் தங்களது கொத்தடிமைகளாகவே நடத்தி வந்தார்கள்.

அந்த மக்கள் மீது அவர்கள் கட்டவிழ்த்திட்ட அநியாங்களுக்கு அளவே இல்லை.

இந்த அநியாயங்கள், வெள்ளை ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் மீதும் செல்விந்தியர்கள் மீதும் அமெரிக்க கறுப்பர்கள் மீதும் அரங்கேற்றப்பட்டன. இந்த அநியாயங்களை கட்டவிழ்த்து விட்டவர்களும் வெள்ளை ஐரோப்பிய கிறிஸ்தவர்களே.

ஐரோப்பிய வெள்ளை கிறிஸ்தவர்கள் வெள்ளை ஐரோப்பிய கிறிஸ்தவர்களுக்கெதிராக போராடிட கண்டெடுத்த கொள்கையே கம்யூனிஸம் என்ற பொதுவுடைமை கொள்கை. ஆங்கிலேயர்களின் இந்த அநீதியும் அடக்குமுறைகளும் கறுப்பு இனமக்களுக்குகெதிராகத் திரும்பியது. அது $3$57+(,' என்ற நிறவெறி கொள்கையாக மாறியது.

ஆனால் இதே ஆங்கில ஆதிக்கம் அநீதி இவை முஸ்லிம்கள் வாழ்ந்த நிலப்பரப்பு களுக்குள் புகுந்த போது அவை அன்று வரை சந்தித்திராத எதிர்ப்புகளைச் சந்தித்தன.

அநியாயங்களையும் அட்டூழியங்களையும் முஸ்லிம்கள் அட்டியின்றி ஏற்றுக்கொள்வார்கள் என எதிர்பார்த்த ஆங்கிலேயர்கள் அதிர்ச்சிவயப்பட்டு நின்றார்கள். முஸ்லிம்களின் எதிர்ப்பு அவர்களை அப்படி அதிசயிக்க வைத்தது.

ஆயுதங்களைக்காட்டி இந்த முஸ்லிம்களை அடக்கிப் போட்டிடலாம் என அவர்கள் கொண்ட முடிவும் அவர்களுக்குப் பலனளிக்கவில்லை. காரணம், அநீதிக்குள்ளான முஸ்லிம்கள் எதிரே தங்களை அடக்கி ஆளவந்த படையின் பலத்தை பற்றியோ அவை தாங்கிவரும் ஆயுதங்கள் பற்றியோ கவலைப்படவில்லை. அந்நிய படைகள் அவை தாங்கிவரும் ஆயுதங்கள் அவற்றின் வழி விளையும் மரணம் இவை சொர்க்கத்தின் நுழைவுச்சீட்டு என அவர்கள் மகிழ்ந்து கிடந்தார்கள்.

அநீதிக்கெதிரான இந்தப் பெரும் போரை நடத்தியவர்களும் அதில் அங்கம் வகித்தவர்களும் ஆலிம்கள் தாம். இவர்களும் மத்ரஸாக்களின் உருவாக்கம் தான்.

இதனால் அவர்களை உருவாக்கிய மத்ரஸாக்களும் மத்ரஸாக்களின் பாடத்திட்டங்களும் பெருமளவில் குறிவைக்கப்பட்டன, ஆதிக்க சக்திகளால்.

அந்த மத்ரஸா பாடத்திட்டங்கள் முஜாஹித்களை அதாவது அநியாங்களை எதிர்ப்பவர்களையோ விஞ்ஞானிகளையோ உருவாக்கிடக் கூடாது என்பதில் அதிக கவனம் எடுத்துக்கொண்டார்கள் ஆங்கில ஏகாதிபத்திய வாதிகள்.

இந்தச் சூழ்ச்சியில் அவர்கள் கையகப்படுத்தி காணாமல் ஆக்கிய மத்ரஸாக்கள் ஏராளம், ஏராளம்! அவர்கள் கொன்று குவித்த ஆலிம்கள் என்ற அறிஞர்கள் ஆயிரமாயிரம்.

இந்திய விடுதலைப்போரிலும் இந்த ஆலிம்களும் மதரஸாக்களும் ஆற்றிய பங்கிற்கு அளவே இல்லை . இந்திய விடுதலைப்போரில் லக்னோவிலிருந்து டெல்லி வரையிலிருந்த மரங்களில் சுமார் 7000 ஆலிம்கள் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டார்கள்

என்ற உண்மை இந்திய விடுதலைப் போர் வரலாற்றில் நீங்கா வரிகளாக நிலைத்து நிற்கின்றன. ஆதாரம் 0 86/,06#,1#,1',$#%<
$%8/#+$6$1#$/,#1$ ' : ,

இதனால் "இந்தியாவிலுள்ள மத்ரஸாக்களில் உள்ள பாடத்திங்களை நான் முற்றாக மாற்றிவிட்டேன், இனி அவர்கள் மத்ரஸாக்களில் கற்றிடும் கல்வி நிச்சயமாக நமக்கெதிராக திரும்பாது. அவர்களுக்கு அனைத்தையும் பெற்றுத்தந்து கொண்டிருந்த மத்ரஸா கல்விகள் இனி ஒரு வேளை சோற்றுக்கு கூட பயன்படாது" என வில்லியம் ஹன்டிங்டன் என்ற ஆங்கில அதிகாரி இந்தியாவிலிருந்து தனது எஜமானி இங்கிலாந்து ராணிக்கு, எழுதிய கடிதம் இன்றளவும் வரலாற்று நூலாய் வலம் வந்து கொண்டிருக்கின்றது. (INDIAN MUSALMAN : WILLIAM HUNTINGTON)

ஆக மத்ரஸாக்கள் தொடர்ந்து அரசின் சூழ்சிகளுக்கும், கெடுபிடிகளுக்கும் ஆளாகியே வந்திருக்கின்றன. பல நேரங்களில், ஆட்சியாளர்கள் பாடத்திடங்களில் நேரடியாகவே தலையிட்டார்கள். அவற்றை மாற்றினார்கள்.

9,11 என அடையாளப்படுத்தப்படும் அமெரிக்க இரட்டை கோபுரங்களை யூத அமெரிக்க உளவுத்துறைகள் தகர்த்த போது பழியை முஸ்லிம்கள் மீது முதலிலும் மத்ரஸாக்கள் மீது இரண்டாவதும் சுமத்தின.

மத்ரஸாக்கள் )$&725,(6#2)#-,+$' ஜிஹாதின் தொழிற்சாலைகள் எனப் பழிக்கப் பட்டன. மதரஸாக்களின் பாடத்திட்டங்களின் தாக்குதல் ஒன்று நடந்தது. தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது.

ஏற்கெனவே நலிந்திருந்த பாடத்திட்டங்கள் இன்னும் சிதைவுக்கும் இடையுறுகளுக்கும் உள்ளாயின.

இன்று அமெரிக்கா, ஆப்கானஸ்தானில் அடைந்து வரும் தோல்விக்கு ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான் எல்லையோரங்களிலிருக்கும் மதரஸாக்களையே குறைகூறி வருகின்றன.

இதுவரை 1800 மாணவர்களை வான் வெளித்தாக்குதல் மூலம் கொலை செய்திருக்கின்றது. அமெரிக்கா. இப்படி மத்ரஸாக்கள் தொடர்ந்து தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றன. அவற்றிக்குப் பின்னால் சூழ்ச்சிகள் பல தொடர்ந்து அரங்கேற்றப் பட்டுவருக்கின்றன என்பதை மத்ரஸா கல்வியை குறைகூறுபவர்கள் கவனிக்க வேண்டும். இதுபோன்ற சூறாவெளிகளையெல்லாம் தாண்டித் தான் மத்ரஸாக்கள் வாழ்ந்திட வேண்டிய இக்கட்டான நிலை இந்தப் பின்னணியில் 100 ஆண்டுகளைக் கடந்த ஜாமியா மிஸ்பாஹுல் ஹுதாவை பாராட்டுவோம் . அதன் வெற்றிக்கு துஆ செய்வோம்.

-எம்.ஜி.எம்.

இப்போது பரபரப்பான
விற்பனையில்......
யூசுப் அல் கர்ளாவி யின்
நாம் பிரிந்து விடவேண்டாம்
முஸ்லிம்கள் 73 கூட்டங்களாக பிரிய மாட்டார்கள் என்று குர்ஆன், சுன்னா ஒளியில் நிரூபிக்கும் நூல்!
முஸ்லிம்கள் பிளவுபட குர்ஆனோ, ஹதீஸோ காரணமில்லை என்று விளக்கும் நூல்!!
முஸ்லிம்கள் ஒன்றுபடுவதற்கான காரணங்களையும், வழிமுறைகளையும், ஐயங்களையும் விவரிக்கும் நூல்!!!
விலை 175
இல்யாஸ் ரியாஜி அவர்களின் இனிய தமிழ் நடையில்.......
வேர்கள் வெளியீட்டகம்
52/1, மண்ணடி தெரு, 4வது மாடி,
சென்னை.1, தொலைபேசி: 45566909

# கஷ்மீரின் பாதி விதவைகள்



கணவன் நசீர் அஹ்மத் டேகாவை நமது இராணுவத்தினர் அவள் கண்களின் முன்னாலேயே இழுத்துச் சென்றார்கள்.

கணவன் நசீர் அஹ்மத் டேகா அப்படியொன்றும் பெரிய தவறுகள் எதையும் செய்திடவில்லை.

அதிகாலயில் வைகறை தொழுகை என்ற ஃபஜ்ர் தொழுகைக்காக வீட்டை விட்டு வெளியே வந்தான். அவ்வளவு தான்.

"என்னை யாரும் கொலை செய்திட முடியாது. ஏனெனில் நான் ஏற்னெவே இறந்து விட்டேன்."

இப்படிச் சொல்லிச் கொண்டே இராணுவ முகாம்களுக்குள் மிகவும் நெஞ்சுரத்தோடு நுழைகின்றார் தஸ்லீமா பானு, தன் கணவனைத் தேடி.

அவள் இராணுவ முகாம்களில் நுழையும் போது துப்பாக்கியைக்குறுக்கே நீட்டினால் தட்டியெறிந்து விட்டு உள்ளே நுழைய முற்படுகின்றாள்.

தடுத்து நிறுத்துகின்றார்கள் நமது இராணுவத்தினர்.தாக்கிடவும் செய்கின்றார்கள் தங்கள் முரடு பலத்தை வெளியே காட்டிட...

நினைவிழந்து வீழ்ந்தாலொழிய அவள் செயலற்று நிற்பதில்லை.

ஆமாம்! அவளுடைய அன்பிற்கினிய

அலாக்காக தூக்கிக் கொண்டு சென்று விட்டார்கள் நமது இராணுவத்தினர். இவர்களுக்குக் கஷ்மீரில் பாதுகாப்புப் படையினர் என்று பெயர்.

தன் சொந்த மக்களையே கொலை செய்யும் பட்டாளத்தை பாதுகாப்புப் படை என எந்த முட்டாளாவது அழைக்க இணங்குவானா?

கொலை செய்யப்படுவது முஸ்லிம்கள் என்பதால் நமது இராணுவத்தினர் கொலைகளைச் செய்து விட்டு லாவகமாக வாழ்கின்றார்கள், பாதுகாப்புப்படை என்ற பெயரில்.

அன்று ஃபஜர் தொழுகைக்காக சென்றவர்களில் தஸ்லீமா பானுவின் கணவன் மட்டுந்தான் நமது இராணுவத்தின் கைகளில் சிக்கினான் என்றில்லை. அப்துல் ரஹ்மான்

பாடர் மௌவ்லவி ஷவ்கத் அலி முஹம்மத் இன்னும் குலாம் நபி ஆகியோரும் அள்ளிச் செல்லப்பட்டார்கள்.

தஸ்லீமா பானு தொழுகைக்காக சென்றவர்களை எப்படி அழைத்துச் செல்லலாம் எனக் கேட்ட போது நமது இராணுவத்தைச் சார்ந்தவர்கள் சொன்ன பதில் "நாங்கள் அன்று காலைப்பொழுதில் யாரும் வெளியே வரக் கூடாது என முந்தைய நாள் இரவே அறிவித்திருந்தோம் வெளியே வருபவர்கள் தீவிரவாதிகளாகத் தான் இருப்பார்கள்" என ஒரு குண்டை தூக்கிப் போட்டார்கள் பதிலாக, ஃபஜர் தொழுகையைத் தொழுபவனெல்லாம் தீவிரவாதி என்பது அவர்களின் அகராதி.

அதிர்ந்து போன தஸ்லீமா பானு, இந்த பதில் நிச்சயமாக எல்லாச் சட்டங்களுக்கும் தார்மீக நியதிகளுக்கும் எதிரானது என்பதை நன்கு அறிந்திருந்தாள். ஓரிடத்தில் இல்லையென்றாலும் பிரிதோர் இடத்தில் தனக்கு நியாயம் கிடைத்து விடும் என எண்ணினாள்.

அத்தோடு தன்கணவனும் மற்றவர்களும் கொலை செய்யப்பட்டிருக்க மாட்டார்கள் அவர்களை மீட்டே விடலாம் என்ற அலாதியான நம்பிக்கையும் அவளுக்கிருந்தது.

இந்த நம்பிக்கைக்கு இன்னொரு காரணமும் இருந்தது அது அவள் பட்டப்படிப்பு வரை படித்திருந்தாள். இஸ்லாத்தையும் நன்றாகப்படித்தவள். அத்தோடு புர்கா போன்ற விஷயங்களில் கண்டிப்புடன் இருப்பவள். அவளுடைய கணவன், நசீர் அஹ்மத் டேக்காவும் படித்தவன் வேலை கிடைக்காததால் பழவியாபாரம் செய்து கொண்டிருந்தவன். நல்ல வியாபாரி. நல்ல முஸ்லிம். இவர்களின் திருமணம் அவர்களாகவே தங்களுக்குள் முடிவு செய்தது. அதனால் கஷ்மீரின் வழக்கமான அலம்பல்கள் எதுவும் இல்லாமல் மிகவும் சாதாரணமாகவே அவர்களின் திருமணம் நடந்தேறியது.

பெண் வீட்டிலிருந்து கிடைக்க வேண்டியவைக் கிடைக்கவில்லை என்பதால் நசீர் அஹ்மதின் வீட்டில் உள்ளவர்கள் காதல் திருமணம் என அந்த திருமணத்தைக் கொச்சைப்படுத்தவும் செய்தார்கள்.

ஆனால் இருவரும் அன்பால் குடும்பத்தவர்களையும் அக்கம் பக்கத்திலுள்ளவர்களையும் ஆட்கொண்டார்கள். அதனால் அவர்களின் குடும்ப வாழ்க்கை அமைதியாகவும் ஆனந்தமாகவும் இருந்தது.

நசீர் அஹ்மத் டேக்காவின் குடும்பத்திலுள்ளவர்கள் தஸ்லீமா பானுவை வாய்ப்புக்கிடைக்கும் போதெல்லாம் புண்படுத்தவும் கொச்சைப்படுத்தவும் செய்வார்கள். ஆனால் அவள் அதைக் கண்டு கொள்வதில்லை தன் சகிப்புத்தன்மை பொறுப்பு, இவற்றால் குடும்பத்தை வென்றாள் என்றே சொல்லிட வேண்டும்.

இப்போது ஐந்து குழந்தைகளின் தாய் ஆனால் தன் அன்புக்கினிய கணவரைத் தான் நமது இராணுவத்தினர் பிடுங்கிச் சென்று விட்டனர். அவனை தீவிரவாதி என முத்திரை குத்தி விட்டனர். இதனால் சமுதாயத்தின் இதரப் பகுதியில் உள்ளவர்கள் அவளை சற்று ஒதுக்கத் தொடங்கி விட்டனர்.

நசீர் அஹ்மத் டேக்காவின் குடும்பத்திலுள்ளவர்கள் பழியை தஸ்லீமா பானுவின் மேல் போட்டுவிட்டு எந்த உதவியையும் செய்ய மறுத்துவிட்டார்கள்.

கஷ்மீரில் எந்த முஸ்லிம் இளைஞனாவது தீவிரவாதி என முத்திரைக் குத்தப்பட்டு விட்டால் குடும்பத்தின் இதர உறுப்பினர்கள் அவனுக்கு உதவி செய்ய வந்தால் அவர்களும் தீவிரவாதிகள், தீவிரவாதிக்கு உதவி செய்பவர்கள் என்று பழிசுமத்தப்பட்டு அடிக்கடி விசாரணை, கைது, சிறை, சித்திரவதை என எல்லாக் கொடுமைகளுக்கும் ஆளாக்கப்படுவார்கள்.

இந்த நிலை கஷ்மீரிலுள்ள பாராமுல்லாஹ் மாவட்டத்திற்கு ஏனைய மாவட்டங்களை விட மிகவும் அதிகமாகப் பொருந்தும். அந்த மாவட்டத்தைச் சார்ந்தவள் தான் தஸ்லிமா பானுவும் அவளது கணவனும்.

கொடுமையான சூழ்நிலைகள் அவளுடைய வீட்டில் அவளுக்கு எதிராக என்றாலும் அவள் தன் கணவனையும் அவரோடு கடத்திச் செல்லப்பட்ட இதர இளைஞர்களையும் தேடும் வேட்டையில்

*தன்னை முழுமையாக ஈடுபடுத்திடுவது என முடிவு செய்திருந்தாள்.*

*ஆனால் இராணுவத்தினர் செய்யும் அநியாயங்களையெல்லாம் ஒன்றாய் மூடிமறைத்திடும் சட்டம் ஒன்று கஷ்மீரில் இருக்கின்றது என்பதை அறிய மாட்டார்கள்.*

*ஒவ்வொரு இராணுவ முகாமாக தேடிச் சென்றாள் தெரியாது என்பதே பதிலாக இருந்தது சிலர் இராணுவ அதிகாரிகள் அவர் உண்மையிலேயே தீவிரவாதி இல்லையென்றால் வந்து விடுவான் எனப்பதில் சொன்னாள்.*

*அவளுக்கிருந்த மிகப்பெரிய பளு என்னவென்றால் அவளுடைய கணவனை இராணுவத்தினர் கடத்திச் சென்றிடும் போது அவள் 40 நாளான தன் கடைசி மகனை தன் கைகளிலே வைத்திருந்தாள்.*

*காட்டு மிராண்டிகளின் காலத்தை கஷ்மீரில் செயல்படுத்திக் கொண்டிருக் கின்றார்கள் நம் இராணுவத்தினர் பாதுகாப்புப் படையினர் என்ற பெயரில்.*

*இதனால் அந்த ஆண் குழந்தையை எடுத்துச் கொண்டு இராணுவ முகாம்களுக்குச் செல்வது எந்த விதத்திலேயும் புத்திசாலித் தனமல்ல. "குழந்தையைக் கொலை செய்து விட்டு அவன் வளர்ந்தாலும் நாங்கள் தானே கொலை செய்ய வேண்டும் அதை இப்போதே செய்து விட்டோம் எனக் கூறிடும் கல்நெஞ்சத்திற்கு சொந்தக் காரர்கள்" அவர்கள் என்பதை அவளறிவாள்.*

*ஆனாலும் குழந்தையைக் கையில் சுமந்தவளாகவே இராணுவ முகாம்களுக்குச் சென்றாள். சில நேரங்களில் பல நேரங்களில் அவளுடைய தங்கை குழந்தையைப் பார்த்துக் கொள்வாள்.*

*அவள் பத்து மாதங்கள் அலைந்தாள் ஒவ்வொரு இராணுவ முகாமாக. தன் கணவன் கிடைத்தால் அவனை அழைத்துச் சென்றார்கள் என்ற குறிப்புகள் கூட எங்கேயும் இல்லாமல் திரும்ப அழைத்து வந்திட வேண்டும்.*

*கணவன் கிடைத்து விட்டால் எல்லாவற்றையும் மறந்து விட்டு வாழ்க்கையை சுமூகமாக நடத்திட வேண்டும். குழந்தைகளை நன்றாகப் படிக்க வைத்து ஆளாக்கிட வேண்டும் என்றெல்லாம் தனக்குத்தானே திட்டம் போட்டுக் கொண்டாள். தேவையானால் மறுவாழ்வுத் தேடி காஷ்மீரை விட்டு வெளியேறிட வேண்டும்.*

*ஆனால் நாள்கள் நரக வேதனையோடு நகர்ந்தனவே அல்லாமல் கணவனைப்பற்றி எந்தப் துப்பும் கிடைக்கவில்லை.*


*கையிலிருந்து காசுகள் கரைந்தன. வீட்டிலிருந்த பொருள்களை விற்றிட வேண்டிய நிலை. ஆனாலும் கிஞ்சிற்றும் கவலைப்பாடமல் அவற்றை விற்றாள். தன் கணவனை எப்படியேனும் மீட்டிட இயலும் என்ற நம்பிக்கையில். அவளுடைய நம்பிக்கையைப் போல் காசுகளும் காற்றில் பறந்தன. கதியேதுமில்லை.*

*தொடர்ந்தாள் தன் பயணத்தை! ஆமாம் ! அவளுக்கு அனைத்தையும் விட கணவன் முக்கியம். இந்த பெண்களின் அவலங்களை தாராளமாக காசாக மாற்றிட எத்தனையோ அதிகாரிகள் காத்துக்கிடந்த. இந்த வகையில் ஓர் இடைத் தரகனை ஒரு நாள் சந்தித்தாள் தஸ்லீமா பானு. அவன் சில இராணுவ அதிகாரிகளுக்குப் பணம் கொடுத்தால் துப்புத் துலங்கும் அதை அடிப்படையாகக் கொண்டு இயங்கினால் நிச்சயமாக நசீர் அஹ்மத் டேக்காவை மீட்டிடலாம் என்றான் ஆனால் ரூபாய் 15,000ஐ மொத்தமாகத் தந்திட வேண்டும் என்றான்.*

*தஸ்லீமா பானுவிடம் கொஞ்சம் நகைகள் இருந்தன. வளரும் இரண்டு பெண் குழந்தைகளுக்கு அவை என முடிவு செய்திருந்தாள். ஆனால் தரகன் சொன்ன சொற்கள் அவளுக்குக் கணவன் கிடைத்துவிடுவான் என்ற நம்பிக்கையை ஊட்டிற்று. அதனால் அவற்றை விற்று தரகனின் கைகளில் கொடுத்து விடுவது என முடிவு செய்தாள்.*

*தரகனிடமே நகைகளைத் தந்தாள். அவனுடன் நகைக்கடைக்குச் சென்றாள். அவன் அவற்றை ரூ 15,000க்கு விற்றான். எடுத்துச் சென்றான்.*

*தினமும் அந்தத் தரகனைச் சந்தித்தாள்*




கோத்தி பாக் காவல்நிலையத்தில் தான் புகார் கொடுக்க வேண்டும் எனக்கூறினார்கள்.

புகார் ஒன்றை தயார் செய்து விட்டு கோத்திபாக் காவல் நிலையம் சென்றாள் இதனிடையே 16 மாதங்கள் கடந்து விட்டன. இந்த புகார் காலம் கடந்து வருவதால் புகாரை பதிவு செய்திட இயலாது என்று கூறிவிட்டார்கள் காவல்துறையினர்.

பதிவு செய்ய மாட்டோம் என்பதை எழுதித் தந்து விடுங்கள் என்றாள். ஒரிரு நாள் அலைத்துவிட்டு ஒருவாராக இறங்கி வந்தார்கள் கொஞ்சம் பணம் கேட்டார்கள். கொடுத்தாள். புகாரை பெற்றுக் கொண்டார்கள். ஒரு கைச்சாத்தும் கொடுத்தார்கள்.

அவன் சாக்குப் போக்குகளைச் சொன்னான் அவளுக்கிருந்த நம்பிக்கையும் நகையும் ஒன்று போலவே கொள்ளை போயிடும் நிலை தரகனுக்குக் கூட ஏதோ கொஞ்சம் மனசாட்சி இருந்தது. அவன் ஒரு நாள் ரூபாய் 12,000ஐ கொண்டு வந்து அவள் கையில் தந்தான்.

என்னை மன்னித்துவிடு தஸ்லீமா; என்னால் எதுவுமுடியவில்லை; இராணுவ அதிகாரிகள் முழுவதையும் விழுங்கிட இருந்தார்கள்; முடிந்ததை மீட்டுக் கொண்டு வந்து விட்டேன்.

நான் இதில் சல்லி காசு கூடு எடுக்கவில்லை இனி நீ இப்படி அலைந்து கொண்டிருக்காமல் ஏதேனும் காவல் நிலையத்தில் புகார் செய். அதற்காக தரும் கைச்சாத்தைப் பெற்றுக் கொள். நான் தரும் முகவரிகளுக்கு அந்த புகாரின் பிரதியையும் ஒரு மனுவையும் அனுப்பிவை என்றான்.

இயன்ற மட்டும் பார்த்துவிட்டு பேனாவையும் பேப்பரையும் கையிலெடுத்தாள்.

புகாரைப் பெற்றுக் கொண்டவுடன் அதன் நகல்களோடு தரகன் தந்த முகவரிகளுக்கெல்லாம் அனுப்பினாள். யாரிமிருந்தும் பதில் வரவில்லை.

புகார் தந்த காவல்துறையின் படிக்கட்டுகளில் தவமிருந்தாள். மேல் நடவடிக்கை எடுக்கச் சொல்லி பலனில்லை.

இறுதியாக நீதிமன்றங்களை அனுகினாள் காஷ்மீரில் நீதிமன்றங்கள் காணாமல் போகும் முஸ்லிம் இளைஞர்கள் விவகாரத்தில் நமது மத்திய அரசைப் போலவே நடந்து கொள்கின்றது .

வாயிதாக்களே அங்கே வாழ்க்கை. நமது மத்திய உள்துறை மாநிலத்தின் முதலமைச்சர் இப்படித் தொடர்ந்து நடவடிக்கைகளை

மூச்சுவிடாமல் எடுத்துக் கொண்டே இருந்தாள். அது போல் இராணுவ அதிகாரிகளுக்குக் கடிதம் அவர்கள் மேல் புகார் அதனை அடிப்படையாகக் கொண்டு வழக்கு இப்படி ஒரு வெறியோடு நடவடிக்கைகளை மேற்கொண்டாள்.

அடிக்கடி நீதிமன்றங்களில் ஏதேனும் ஒரு வழக்கு இதுவிவகாரத்தில் சென்று கொண்டே இருந்தது.

இதில் சில நீதிமன்றங்கள் இராணுவத்திற்கு நோட்டீஸ் அனுப்பின. இந்த நோட்டீஸ் கைவரப்பெற்ற இராணுவ அதிகாரிகள் ஒரு பதிலை நீதிமன்றத்திலும் அதன் நகலை தஸ்லீமா பானுவுக்கும் அனுப்பி வைத்தார்கள்.

சுருங்கச் சொன்னால் 2000 இல் தொடங்கிய இந்த பெரும் போரில் 2009ல் பதில் வந்தது அதில் இப்படிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

"Kindly refer to your communication No. 448/Ps/Psi. Adv/2009 dated 29th June 2009 Regarding SRO. A3 case of Tasleema Bano W/o Nazir Ahamed Deka r/o. Dessu, Kokerrag In this Connection I am to request that the applicants case was referred to General Administration Department vide this office letter No. 13-13/CA/ SRO.43 dated 26 May 2009. But the case has been scrutinised and rejected by General Administration Department vide No. GAD/Mrg iii/44/2009 dated 19th June 2009 as the deceased was a surrendered Militant

இதன் சுருக்கம் :

“கோகராங் என்னுமிடத்திலுள்ள தஸ்லீமா பானு வின் வழக்கைப் பொறுத்தவரை அவளுடைய வழக்கு பொது நிருவாகத் துறைக்கு அனுப்பப்பட்டது. பொது நிருவாகத் துறை வழக்கை சீராய்வு செய்து இறந்து விட்ட அவளது கணவன் ஒரு சரணடைந்த போராளி என அவளது மனுவைத் தள்ளுபடி செய்து விட்டது.”

கடிதம் கைவரப் பெற்றதும் தஸ்லீமாவுக்கு பகீரென இருந்தது. இடி வீழ்ந்ததைப் போல் நெஞ்சம் பதறினாள். காரணம் கடிதம் அவளுடைய அன்பிற்கினிய கணவன் இறந்து விட்டதாகக் கூறுகின்றது.

பஜ்ர் தொழுகைக்குப் போனால் போராளி அவள் கண்முன்னேயே கடத்திச் சென்று விட்டு போராளி எனப் பேசுகின்றார்கள் இவர்களுக்கு இதயம் என்றொன்றே இல்லையா? என்று உரக்க முழுங்கிடவே வேண்டும் போலிருந்தது. ஆனால் அத்தனைக்கும் அவள் உள்ளமும், உடலும் இடந்தந்திடவில்லை. அந்த இடத்திலேயே மூர்ச்சையாகி வீழ்ந்தாள்.

இன்ஷா அல்லாஹ் தொடரும்.


**இறைவனின் அழகிய வழிகாட்டுதல் அனைவருக்கும்!**

**மனிதன் இந்த உலகில் எப்படி வாழ வேண்டும்?**

இந்த வினாவிற்கு முழுமையான விடையே திருக்குர்ஆன். இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை.

அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன் தமிழ்மொழிபெயர்ப்பைப் பெற்றிட கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுங்கள்.

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேசன் டிரஸ்ட்**

52/1, மண்ணடி தெரு,
கோனிகா கலர் லேப் பில்டிங்
4வது மாடி,அறை என் 7.
மண்ணடி சென்னை-1

இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கு இல்லை.

# அல்ஹரமைன்

## ஹஜ் சர்வீஸ் (பி) லிட்


இந்திய வெளியுறவுத்துறை மற்றும் சவுதி அரசு அங்கீகாரம் பெற்றது
தமிழ்நாடு ஹஜ் ஏற்பாட்டாளர்கள் சங்க உறுப்பினர்.

Al - Haramine Haj Service (P) Ltd.

THOA

Since 1993

2012
புனித ஹஜ்
உம்ரா
பயண
அழைப்பு



20 ஆம் ஆண்டு சேவையில்

- ஹரம் ஷரீஃபிற்கு மிக அருகே தங்கும் இடவசதி,
- தரமான தமிழக உணவு, தெளிவான வழிகாட்டுதல்,
- 19 ஆண்டுகள் அனுபவம் நிறைந்த திட்டமிட்ட பயண ஏற்பாடுகள்.
- ஹஜ் பயணம் இன்ஷா அல்லாஹ் அக்டோபர் மூன்றாவது வாரம் (35-40 நாட்கள்)
- மாதந்தோறும் உம்ரா பயண ஏற்பாடு.

மன நிறைவான ஹஜ் உம்ரா பயண ஏற்பாடுகளுக்கு அன்புடன் அழைக்கும்.

**அ. முகம்மது இக்பால் B.A.B.L.**

நிர்வாக இயக்குனர். செல் : 98400 56461

## அல்ஹரமைன் ஹஜ் சர்வீஸ் (பி) லிட்

ப. எண், 73, பு. எண். 10, தாதா முத்தியப்பன் தெரு,
கொத்தவால் சாவடி காவல் நிலையம் எதிரில்,
பிராட்வே, சென்னை - 600 001.
போன் : 2524 2323, 2524 2324, Email : alharaminehaj@yahoo.com

நிர்வாக அலுவலகம்

**No. 4, ஜான் செல்வராஜ் நகர்,**
**புதிய பேருந்து நிலையம் சாலை,**
**C.R.C. அருகில், கும்பகோணம் - 612001.**
**Ph : 0435 2403849**

# அரபுலக எழுச்சி

**எம்.ஜி.எம்**




எகிப்தில் அல் இஹ்வான் அல் முஸ்லிமூன் குடியரசு தலைவர் பதவியை வென்றது.

இஹ்வான்களின் வேட்பாளராகிய முஹம்மது முர்ஸி வென்றார், ஜனாதிபதி தேர்தலில்! ஆனால் அவர் உண்மையான குடியரசு தலைவராக அதிகாரம் பெறுவாரா? என்பது ஐயமே!

இஹ்வான்களின் கைகளில் முழு அதிகாரமும் சென்று விடக் கூடாது என்பதில் யூதர்களும், அமெரிக்கர்களும் உறுதியாக இருந்தார்கள். வேகமாகச் செயல்பட்டார்கள்.

எகிப்தில் இஹ்வான்கள் என்ற, இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்ட இலட்சிய செல்வங்கள் ஆட்சிக்கு வருவதை அமொரிக்கர்களும், யூதர்களும் நவீன சிலுவைப்போரின் முகவர்களும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். பார்த்துக்கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள் என்பது ஊரறிந்த உண்மை.

உலகுக்கு ஜனநாயகவாதிகளைப் போல் காட்டிக்கொண்டிருக்கும் இவர்கள் உள்ளுக்குள் சும்மா இருக்க மாட்டார்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

அவர்களின் எடுபிடியாக இருந்த முன்னாள் சர்வாதிகாரி ஹோஸ்னி முபாரக் விரட்டியடிக் கப்பட்ட பின் அவர்களிடம் பயிற்சி பெற்ற எகிப்தின் இராணுவ தளபதிகள், எகிப்தின் நீதித்துறையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் நீதிபதிகள், இவர்கமெளல்லாம் அவர்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இவர்கள் எகிப்தின் ஜனாபதி தேர்தல் நடக்கவிருந்த ஜுன் 16 ஆம் தேதிக்கு முன்னரே பல தகிடுதத்தங்களைச் செய்தார்கள். அவற்றுள் மிகவும் முக்கியமானது முதல் முதலில் இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் முதல் வேட்பாளர் ஹெய்ரத்துல் ஷத்தார் அவர்களின் வேட்பு மனுவை, சில சில்லரைக் காரணங்களைக் காட்டி நிராகரித்தார்கள். இதனால் வேகமும், விவேகமும் நிறைந்த இன்றைய சூழ்நிலைகளில் இஸ்லாமிய ஆட்சியை எப்படி கொண்டுவருவது என்ற சாதுர்யத்தையும் அறிந்த ஒரு வேட்பாளரை அந்தப் பதவியின் பக்கம் வரவிடாமல் பார்த்துக் கொண்டார்கள் .

இப்படி சொல்லி விடுவதால் இப்போது வெற்றி பெற்றிருக்கும் முஹம்மத் முர்ஸி அவர்கள் தகுதியில் குறைவந்தவர் என்றில்லை, மாறாக ஹெய்ரத்துல் ஷத்தார் அளவுக்கு திறமையானவரல்ல. வென்றிருந்தால், எல்லா அதிகாரத்தையும் ஒன்றாய்ப் பெற்ற இராணுவத்திற்குப் பெரும் தலைவியாக இருந்திருப்பார்.

இப்படி முதல் காயை தங்களுக்கு சாதகமாக நகர்த்திய யூத, அமெரிக்கர்கள் அடுத்து, தங்கள் எடுபிடிகளைக் கொண்டு அடுத்தகட்ட பணியைச் செய்தார்கள், அது ஜனவரி 25,2011 எழுச்சியைத் தொடர்ந்து மக்களுக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதைப் போன்ற தொரு பாசாங்கு, எழுச்சியில் ஈடுபட்ட இளைஞர்களையும், மக்களையும்




சமாதானப்படுத்திட. எகிப்திற்கு புதிய அரசியல் நிர்ணயச்சட்டத்தை எழுதுவோம் என்றொரு அறிவிப்பைச் செய்தார்கள். அந்த புதிய அரசியல் சாசனத்தை எழுதிட ஒரு குழுவை அமைத்தார்கள். அந்தக்குழுவில் புதியதாக தேர்ந்தெடுக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதேபோல் அரசியல் சாசன நிபுணர்கள், இவர்கள் இடம் பெறுவார்கள் என்றார்கள். இந்தத்தகவல்களை விரிவாக "வைகறை வெளிச்சம்" ஜனவரி - பெப்ரவரி இதழ்களில் இடம்பெறச் செய்திருந்தோம்.

இந்தக்குழு ஜுன்13-2012 இல் அமைக்கப்பட்டது. அதாவது ஜனாதிபதி தேர்தலுக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் ஆனால் ஜுன் 14ம் நாள் நாடாளுமன்றத்திற்கு நடந்த தேர்தல்கள் செல்லாது என தங்கள் எடுபிடிகளான சுப்ரிம் கோர்ட் நீதிபதிகளைக் கொண்டு அறிவித்துவிட்டார்கள்.

இந்த நாடாளுமன்றத்தில் தான் இஹ்வான்கள் அதிகமான இடங்களைப் பெற்றது தங்கள் வேட்பாளரான சாஅத்அல் கத்தானி என்பவரை சபாநாயகராக ஜனவாரி23,2012 இல் தேர்ந்தெடுத்தார்கள்.

இந்த நாடாளுமன்றத்தில் விவாதிக்கப் பட்டுத்தான் புதிய அரசியல் நிர்ணயச்சட்டம் அரங்கேற்றப்பட வேண்டும் ஆனால் இராணுவம் அதாவது அமெரிக்க, யூத எடுபிடிகள் நாடாளுமன்றதத்தையே கலைத்துவிட்டார்கள்.

அத்தோடு நில்லாமல் எழுதப்படும் அரசியல் நிர்ணயச்சட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் குடியரசு தலைவர் என்ற ஜனாதிபதிக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றாக்கி விட்டார்கள்.

அவருடைய அதிகாரம் எல்லாம் ஒரு அமைச்சரவையை அனைத்துக் கருணை மனுக்களில் கருணை காட்டலாம் அல்லது மறுக்கலாம் என்பது மட்டுமே. இதையும் இன்னும் பல சம்சங்களையும் கொண்ட ஓர் அரசியல் நிர்ணயச்சட்டத்தை இராணுவமே அறிவித்துள்ளது.

அந்த அரசியல் நிர்ணயச்சட்டத்தில் நாட்டின் இராணுவத்தின் மீது குடியரசு தலைவருக்கு எந்த அதிகாரமுமில்லை. அதேபோல் எந்த நாட்டோடும் போரிடும் முடிவை ஜனாதிபதி எடுக்கவியலாது. அந்த முடிவை இராணுவமே எடுக்கும்.

இராணுவத்திற்கு ஆட்கள் எடுக்கும் முறைமையில் ஜனாதிபதிக்கோ பாதுகாப்பு அமைச்சருக்கோ எந்த உரிமையும், அதிகாரமுமில்லை. அவை முழுக்க முழுக்க இராணுவத்தின் பிடியிவேயே இருக்கும்.

அடுத்து புதிதாக இயற்றப்படும் அரசியல் நிர்ணயச்சட்டத்தின் எந்தப் பிரிவை வேண்டுமானாலும் இராணுவம் எதிர்க்கும் அப்படி இராணுவம் எதிர்க்கும் போது அதில் அந்தச் சட்டப்பிரிவில் முடிவெடுக்கும் உரிமை நாடாளுமன்றத்திற்குகோ குடியரசு தலைவருக்கோ இல்லை. மாறாக நாட்டின் உச்ச நீதிமன்றத்திற்கு மட்டுமே உண்டு. இந்த உச்சநீதிமன்றம் இராணுவத்தின் பிடியில் உண்மையைச் சொன்னால் அமெரிக்க யூத எடுபிடிகளின் கைகளில் இருக்கின்றது.

இவற்றையெல்லாம் விஞ்சி இராணுவம் இன்னும் இரண்டு அதிகாரங்கள் தன் கையில் இருப்பதாக அறிவித்துள்ளது. அவை "Legislative and Budgeting Powers" அதாவது சட்டமியற்றும் அதிகாரமும், பட்ஜெட் தயாரிக்கும் அதிகாரமும் தான்.

மொத்தத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி "சும்மா இருக்கும்" உரிமையை மட்டுமே பெறுவார்,

அனைத்தையும் விஞ்சி நாட்டில் இயற்றப்படும் எந்தச் சட்டத்தையும் வீட்டோ செய்ய (உடனேயே நிறுத்த) இராணுவத்திற்கு உரிமை உண்டாம்.

இப்படி எல்லா அதிகாரங்களையும் தனக்காக்கிக் கொண்ட இராணுவம், இவை அடங்கிய அறிவிப்பை ஜனாதிபதி தேர்தலுக்கு முன் ஜுன் 14-இலே அறிவித்தது. அதற்கு Annex to the Constitution அரசியல்




நிர்ணயச்சட்டத்திற்கான பிற்சேர்க்கை எனப் பெயரிட்டது. எவ்வளவு மிருதவான பெயர்.

## ஜனாதிபதி தேர்தல் :

இத்தனை ஏற்பாடுகளையும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னால் செய்து விட்டு தேர்தலின் பக்கம் தன் கவனத்தைத்திரும்பியது இராணுவம்.

கெடுபிடிகளின் வழி மக்கள் தேர்தல் மையங்களுக்கு வருவதை தடுத்து தேர்தலில் ஓட்டுப்போடவருபவர்களை வளைத்து, வளைத்து வீடியோ எடுத்தார்கள், இராணுவத்தினர்.

ஹோஸ்னி முபாரக்கின் ஆள் அஹமத் ஷபீக் அதாவது அமொரிக்க யூத சூழ்ச்சியாளர்களின் எடுபிடிக்கு தாராளமாக கள்ளவோட்டுப் போட்டார்கள். இறந்து போனவர்களின் பெயர்களை ஏற்கனவே வாக்காளர் பட்டியலில் இணைத்திருந்தார்கள். அந்த ஓட்டுகளை அஹ்மத் ஷபீக்-க்கு போட்டார்கள். அதனை நமது நாட்டுப்பத்திரிக்கைகள் திஹிந்து, டெக்கன் கிரானிக்கல் ஆகியவை 25,6,12 அன்று குறிப்பிட்டிருந்தன.

இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தவர்களுக்கு வாக்குகள் இல்லாத சில இடங்களில் ஓட்டுப் போடுவதற்கே ஆண்கள் இல்லை, எந்த அளவுக்கு என்றால், பெட்ரோல் பங்குகளில் டீசல் போடுவதற்கு நின்ற கூட்டத்தைவிட ஓட்டுப்போடுவதற்கு நின்ற கூட்டம் குறைவு என்று எழுதி இருந்தது TNIE 18.6.12 இதையே வேறு சொற்களால் சொன்னால் அஹ்மத் ஷபீக்கு ஓட்டுப்போடுவதற்கு ஆள்களே வரவில்லை.

தேர்தலுக்குபின் தேர்தலில் அஹ்மத் ஷபீக்-க்கு வெற்றி வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிந்தவுடன் தேர்தல் முடிவைத் தள்ளிப் போட்டு கொண்டே வந்தார்கள்

இதனிடையே 450 புகார் மனுக்கள் வாக்குப்பதிவு குறித்து வந்திருப்பதாக தேர்தல் உச்ச ஆணையத்தின் தலைவர் பாரூக் சுல்தான் (Supreme Election Commissioner for Presidential Election Commission) அறிவித்தார்.

இவை அனைத்தும் அஹ்மத் ஷபீக் என்ற அமெக்க எடுபிடிக்கு ஆதரவாக வந்தவை

உடனேயே இஹ்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அவற்றுக்கு மறுப்பு மனுக்களையும் தங்களுக்குத் தேர்தலில் நடந்த அநியாயங்களையும் குறிப்பிட்டு புகார்; மனுக்களைக் கொடுத்தார்கள்.

இரு தரப்பாரும் வழக்கறிஞர்களை வைத்து வாதிட வேண்டும் என உச்ச தேர்தல் ஆணையத்தின் தலைவர் பாரூக் சுல்தான் ஆணையிட்டார்

இவையெல்லாம் காலம் தாழ்த்திடும் உத்தி என்பதை அறிந்த மக்கள் இன்னொரு புரட்சியின் மூலந்தான் நீதியைப் பெற்றிட முடியும் என முடிவு கட்டினார்கள். தஹ்ரீர் சதுக்கத்தில் கூடினார்கள்.

சதா சர்வகாலமும் "அல்லாஹு அக்பர்! அஞ்சாதீர்கள் இராணுவம் அகன்றே ஆகவேண்டும்" என்ற கோஷங்கள் கேட்டுக் கொண்டே இருந்தன. "Chant Allahu Akbar: Don't fear! Military Must Go" என்பது கோஷம்.


இதற்கு அஞ்சிய இராணுவம் இறுதியாக முர்ஸி 9 லட்சம் வாக்குகளில் வென்றார் எனக்கூறினார்கள். முர்ஸிக்கு 72 சதவீதம் வாக்குகள் கிடைத்தாலும் 51,7 சதவீதம் வாக்குளே கிடைத்தாக அறிவித்ததார்கள்.

இதனிடையே இராணுவத்தினருடன் இஹ்வானுல் முஸ்லிமுன் இயக்கத்தவர்கள் இரகசிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்கள். ஆனால் இராணும் விட்டுக் கொடுக்கவில்லை.

அதனால் இஹ்வான்கள் தஹ்ரீர் சதுக்கத்தில் கூடிய மக்கள் கலையமாட்டார்கள் எனக் கூறியுள்ளார்கள். இனிதான்புரட்சி தொடங்கும் என அல்ஜெசீரா கூறுகின்றது. இன்ஷா அல்லாஹ் பொறுத்திருந்து பார்ப்போம்.

-MGM

# ஹஜ்ஜின் மானியம்



தினமும் ஐந்து வேளைகள் தொழும் போது கஅபா எனும் ஆதிப்பள்ளி வாசல் இருக்கும் திசை நோக்கித் தொழுது கொண்டிருக்கும் முஸ்லிம்கள் அதனுடன் தினமும் உறவாடிக் கொண்டிருக்கும் முஸ்லிம்கள் அந்தப்பள்ளி வாசலை நேரில் காணும் வாய்ப்பைப் பெற்றிட பெரு முயற்சி செய்கிறார் களென்றால் உணர்வுப் பூர்வமான உந்துதலே இதற்கு முக்கியக் காரணம்.

இஸ்லாத்தின் இறுதிக் கடமையாம் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றிட ஆண்டு தோறும் உலக மெங்கணுமிருந்து ஹாஜிகள் புறப்பட்டுச் செல்கின்றார்கள் புனித மக்கா நகருக்கு

இந்தியாவிலிருந்து ஆண்டு தோறும் சுமார் இரண்டு லட்சம் பேர் ஹஜ் பயணம் மேற்கொள்கின்றனர்.

உலகில் வாழும் ஒவ்வொரு முஸ்லிமும் தம் வாழ்வில் ஒரு முறையாவது புனித ஹஜ்ஜை நிறைவேற்ற வேண்டும் அல்லாஹ்வை வணங்குவதற்காக இந்த பூமியின் மேல்பரப்பில் முதன் முதலாக எழுப்பப்பட்ட ஆதி ஆலயமான கஅபா எனும் இறையில்லத்தை கண் குளிரக்காண வேண்டும் என்ற தணியாத தாகத்துடன் தான் வாழ்ந்து கொண்டிருப்பார்.

நாட்களின் நகர்வும் காலத்தின் ஓட்டமும் இந்த ஆசையின் அளவைக் கூட்டுமேயன்றி குறைப்பதில்லை.

உணர்வுப் பூர்வமாக ஒவ்வொரு முஸ்லிமும் அந்தப் புனித இறையில்லமாம் கஅபாவுடன் ஒன்றிப் போயிருக்கிறார்.

அல்லாஹ் கூறுகிறான் (புனித இல்லத்தைச்) சென்றடையப் பயணம் செய்யும் சக்தியுள்ளவருக்கு அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்வது கடமையாகும். (3 : 7)

அங்கே சென்று திரும்பும் அளவுக்கு பணமும் உடல்பலமும் பயணம் செய்திட வாய்ப்பும் உள்ளவருக்கே ஹஜ் கடமை என்று (3 : 97) வசனத்தில் அல்லாஹ் தெள்ளத் தெளிவாகக் கூறிவிட்டான்.

இருப்பினும் தன் விருப்பத்தையும் எண்ணத்தையும் அல்லாஹ் வெளிப்படுத்து கிறான் இப்றாஹிம் நபி (அலை) அவர்களிடத்தில் இப்படிக் கூறினான்.

ஹஜ்ஜுக்கு வரும்படி மக்களிடத்தில் அறிவிப்பீராக (அப்படி அழைத்தால் அம்மக்கள்) நடந்தே வருவார்கள் தூர தொலைவிலிருந்து வரும் மெலிந்த ஓட்டகங்கள் மீதேறியும் வருவார்கள். (22 : )

அதாவது ஹஜ்ஜுக்கு அழைப்பீராக ஆர்வமுள்ளவர்கள் நடந்தே கூட வந்து விடுவார்கள். வாகனம் கிடைக்கவில்லை என்று இங்கு வருவதைத் தள்ளிப் போட மாட்டார்கள் நாம் தூர தொலைவிலி

ருக்கிறோம் என்று காரணம் கூறியும் இங்கு வராமலிக்கமாட்டார்கள் எவ்வளவு தொலைவிலிருந்தாலும் அதற்கேற்ற வாகனம் கிடைக்கா விட்டால் கூட மெலிந்த ஒட்டகத்திலாவது வந்து விடுவார்கள் என்கிறான் அல்லாஹ்.

மெலிந்த ஒட்டகம் என்பது ஒரு குறியீடு தகுந்த வாகனம் கிடைக்காவிட்டால் தகுதியற்ற வாகனத்தில் கூட வந்து ஹஜ்ஜை நிறைவேற்றிடும் ஆர்வம் கொள்வார்கள் என்பதே பொருள்.

யஅத்தூக்க வருவார்கள் என்ற சொல் முஸ்லிம்களின் எண்ண ஓட்டத்தை உணர்வைப் பிரதிபலிக்கும் சொல் எவ்வளவு தூரத்தில் வாழ்ந்தாலும் குறைந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி ஹஜ்ஜை நிறைவேற்றும் வேட்கை கொண்டாவர்களாகவே முஸ்லிம்கள் இருப்பார்கள் என்பதே அவ்வசனத்தின் பொருள் அல்லாஹ்வின் விருப்பமும் அதுவே (இதுபற்றி விரிவாக அறிந்திட காண்க வைகறை வெளிச்சம் "இளமையில் ஹஜ்" என்ற நபிமொழிவிளக்கம்)

உலகத்திலுள்ள எல்லா நாட்டு முஸ்லிம்களிடமும் இருக்கின்ற இந்த உணர்வு இந்திய முஸ்லிம்களிடமும் சற்றும் குறைவின்றியே இருந்துவந்துள்ளது காலங்காலமாய் இந்த உணர்வுகளில் ஊனத்தை ஏற்படுத்திட முயற்சிகள் நடைபெற்ற போதெல்லாம் அவற்றை வென்றுள்ளார்கள் இந்திய முஸ்லிம்கள்.

கி.பி. 1800களின் முற்பகுதியில் இந்தியாவிலிருந்து ஹஜ் கடமையை மேற்கொள்ளச் சென்றிட கடல் வழி மட்டுமே இருந்தது இந்தக் காலக் கட்டத்தில் கடல் வழிப்பயணம் உயிருக்கும் உடைமைகளுக்கும் சவாலான பயணமாக இருந்த தாகக் காரணம் கூறி ஹஜ் பயணம் ஆபத்து நிறைந்த பயணம் என்றொரு பிரச்சாரம் நடைபெற்றது.

இந்தக் காலத்தில் வாழ்ந்த சில அறிஞர்கள் குர்ஆன் சுன்னாவில் ஆழமான புலமை அற்றவர்களாகவும் இதர அறிவு ஞானங்களில் தேர்ந்தும் விளங்கினர். இவர்கள் கடல்வழிப்பயணத்தில் இருப்பதாக் கூறப்படும் ஆபத்துக்களைக் காரணம் காட்டி புனித இல்லத்தைச் சென்றடையும் சக்தி இந்திய முஸ்லிம்களுக்கு இல்லை என்றனர்.

அதாவது " இந்திய முஸ்லிம்களுக்கு ஹஜ் கடமையில்லை" என்பதை வேறுவார்த்தைகளில் சுற்றி வளைத்துச் சொன்னார்கள்.

இந்தச் சூழலில் இமாம் அஹ்மது பின் இர்ஃபான் (ரஹ்) அப்துல்ஹை புர்ஹானவீ (ரஹ்) இஸ்மாயில் ஷஹீத் திஹ்லவி (ரஹ்) ஆகிய மார்க்க அறிஞர்கள் இதை எதிர்த்தனர்.

உண்மையில் கடல் வழிப்பயணத்தில் அப்படி ஒரு ஆபத்து இருந்தால் அதற்கு எதிராகப் போராட வேண்டும் கடல் கொள்ளையர்களுக்கு எதிராக ஜிஹாத் செய்ய வேண்டும் பாதையில் பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும் அதை விட்டு விட்டு ஹஜ் கடமையில்லை என்று ஃபத்வாக் கொடுப்பது நியாயமற்றது முட்டாள்தனமானது குருட்டுத்தனமானது என்று கண்டித்தனர்.

இதனையடுத்து ஸய்யித் அஹ்மது ஷஹீத் (ரஹ்) அவர்கள் மக்களைத் திரட்டினார். ஹிஜ்ரி 1236ல் சுமார் நானூறு நபர்களுடன் ஹஜ்ஜுக்குப் புறப்பட்டார் செல்லும் வழியிலெல்லாம் மக்களைத் திரட்டினார் இரண்டு வருடங்கள் 10 மாதங்கள் கழித்து கி.பி. 1824ல் சுமார் எழுநூறு நபர்களுடன் ஹஜ்ஜை முடித்து விட்டுத் திரும்பினார்.

ஹஜ் பயணத்தில் இருப்பதாகக் கூறப்பட்ட ஆபத்துக்களுக்கு எதிராகப் போராடும் மன உறுதியுடன் களத்தில் இறங்கிய ஸய்யித் அஹ்மது ஷஹீது அவர்களின் படை வழியில் எந்த ஆபத்துமின்றி ஹஜ்ஜை முடித்து பத்திரமாக தாயகம் திரும்பிற்று (ஆதாரம் : ஈமானின் காற்று வீசினால், பக்கம் 54 அபுல் ஹசன் அலி நத்வி)

இதன் பின்னர் இந்திய முஸ்லிம்கள் கடல் வழியாக புனித ஹஜ்ஜை மன திருப்தியுடன் நிறைவேற்றி வந்தனர்.

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் இந்தியப் பிரதமராக இருந்த போது கப்பல் பயணத்தை ஓரேடியாக நிறுத்துவது என்று இந்திய அரசு முடிவெடுத்து இனி ஹஜ்ஜுக்குச் செல்ல விமானப் பயணம் ஒன்றே வழி என்றானது. கப்பல் பயணத்தை விட விமானப் பயணத்துக்கு செலவு அதிகம் என்பதாலும் கப்பல் வழியாக பயணம்

செய்திட ஹாஜிகள் தயாராக இருந்தும் அரசு அதை அனுமதிக்காததாலும் விமானப்பயணத்துக்கு ஏற்படும் கூடுதல் செலவை மத்திய அரசே ஏற்றுக் கொள்ளும் என்று இந்திரா காந்தி அறிவித்தார் அது இன்று வரை தொடர்கிறது.

இந்தியாவிலுள்ள ஃபாசிஸ்டுகள் கடந்த சில ஆண்டுகளாக இதுபற்றிய சர்ச்சைகளைக் கிளப்பிக் கொண்யேிருந்தனர் மக்கள் மன்றத்தில் வெறுப்பை ஏற்படுத்தினார்கள் ஒரு ஜனநாயக நாட்டில் மதச் சார்பற்ற நாட்டில் முஸ்□ம்களுக்கு மட்டும் புனிதப் பயணம் செல்ல மாணயமா? என்று கேட்டார்கள் ஒரு கட்டத்தில் நீதிமன்றம் வரை சென்றார்கள்.

ஹஜ் பயணத்துக்கு அளிக்கப்படும் மானியம் அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்று அறிவிக்க வேண்டுமெனக் கோரி பாரதிய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பிரஃபுல் கொராடியா என்பவர் உச்ச நீதிமன்றத்தில் 2010ல் வழக்குத் தொகுத்தார்.

ஹஜ்ஜுக்குச் ன்றிட முஸ்லிம்களுக்கு மாணியம் தருவது சமத்துவத்தை வலியுறுத்தும் அரசமைப்புச்சட்டம் பிரிவு 14க்கும் பாரபட்சமற்ற தன்மையை வலியுறுத்தும் பிரிவு 15பிக்கும் ஒரு குறிப்பிட்ட மதத்தின் வளர்ச்சிக்கு பொது வரிப்பணத்தை பயன்படுத்தாமலிருக்க வேண்டும் என்று வலியுறுத்தும் பிரிவு 27க்கும் எதிரானது என்று பிரஃபுல் கொராடியா தன் மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் மார்க்கண்டேய கட்ஜு ஞானசுதா மிஸ்ரா ஆகியோரைக் கொண்ட 28.01.2011 வெள்ளிக்கிழமை அன்று அளித்த தீர்ப்பில் இப்படிக் கூறியிருந்தது.

பொது மக்களிடமிருந்து வசூலிக்கும் வரிகுப் பயன்படுத்துவது அரசமைப்புச்சட்டம் பிரிவு 27க்கு விரோதமான தல்ல ஒரு வேளை வசூலிக்கும் வரியில் 25 சதவிகதம் ஒரு குறிப்பிட்ட மதத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுமானால் அது பிரிவு 27க்கு விரோத மானதுதான்.

இந்த வழக்குத் தொடர்பாக மத்திய அரசும் உத்திரப்பிரதேச அரசும் பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்துள்ளன அதில் கும்ப மேளாவுக்கும் சீனாவிலுள்ளமான சரோவருக்கும் ஹிந்துக்கள் யாத்திரை சென்றிட இது போன்ற செலவுகள் செய்யப்படுகின்றன என்று கூறப்பட்டுள்ளது எனவே மற்ற மதங்களுக்கும் அரசு உதவிகள் செய்யப்படுவதால் ஹஜ் மாணியம் வழங்குவதில் அரசமைப்புச் சட்டம் பிரிவு 14,15பி ஆகியவையும் மீறப்படவில்லை.

இவ்வாறு உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது ஆதாரம் சென்னை, தினமணி 29.01.2011)

ஹஜ் மாணியம் குறித்து இப்போது வழங்கியுள்ள தீர்ப்பிலும் ஹஜ் மாணியம் அரசமைப்புச் சட்டத்துக்கு விரோதமானதல்ல என்று தான் கூறியுள்ளது ஆனாலும் இது ஏற்படையதல்ல பத்து ஆண்டுகளுக்குள் படிப்படியாக இதைக் குறைத்து முழுமையாக நிறுத்திவிட வேண்டும் என்றும் கூறியுள்ளது உச்ச நீதிமன்றம்.

மத்திய அரசின் ஒரு செயல் அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமான தல்ல ஆனால் அது ஏற்புடையதல்ல என்று உச்ச நீதிமன்றம் கூறுவது விந்தையானது.

மக்களின் வரிப்பணத்தை மத்திய அரசு அரசமைப்புச்சட்டத்துக்கு உட்பட்டுச் செலவு செய்யும் பட்சத்தில் அதைத் தடுக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்குக் கண்டிப்பாக இல்லை இவ்விஷயத்தில் உச்ச நீறதிமன்ற நீதிபதிகள் தம் வரம்புகளை மீறிவிட்டனர் அனாவசியமான வாய் வீச்சுக்களை நிகழ்த்தியுள்ளனர் ஒரு அரசியல் கட்சியின் மேடைப் பேச்சாளரைப் போல நீதிபதிகள் பேசுவதை யார் கண்டிப்பது நீதிபதியின் ஆசனத்தில் அமர்ந்து விட்டால் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று நினைப்பது அழகல்ல நீதிபதிகள் சுயக் கட்டுப்பாட்டுன் பேச வேண்டும்.


அரசின் கொள்கை முடிவுகளில் நீதிமன்றங்களில் தலையிடுவது அரசின் நிர்வாகத்தை சீர்குலைக்கும் செயல் நீதிபதிகள் தங்களி வேலைகளை மடுமே பார்க்கட்டும் அரசை நடத்தும் உரிமையை நீதிபதிகளுக்கு யாரும் வழங்கவில்லை.

**- கே.எம். இல்யாஸ் ரியாஜி**

# கர்கரேயைக் கொலை செய்தது யார்?

தொடர்

**(III) அஹமதாபாத் குண்டுவெடிப்புகளும் சூரத்தின் வெடிக்காத குண்டுகளும்**
*(26 July 2008)*




### (E) குஜராத், மஹாராஷ்டிரா மற்றும் டெல்லி காவல்துறையின் கூட்டு முயற்சியால் வழக்கு திசை திருப்புதலும், ஐ.பி. என்ற மத்திய உளவுத் துறையின் பங்கும்

*விசாரணையில் முக்கியமான குறிப்புகள் கிடைத்துள்ளன. எனவே வழக்கை பற்றிய மர்மங்கள் விரைவில் வெளிவரும் என்று பொதுமக்கள் நினைத்துக் கொண்டிருக்கும்போது குஜராத், மஹாராஷ்டிரா மற்றும் டெல்லி காவல்துறை திடீரென ஒரு கதையை அவிழ்த்துவிட்டது. அது,*

*(1) வழக்கில் ஒரு திருப்பமாக 11 சிமி உறுப்பினர்களை 16 ஆகஸ்ட் அன்று கைது செய்து இருக்கிறோம் என்றது குஜராத் காவல்துறை. காவல்துறையின் கூற்றுப்படி உ.பி.யின் ஆசாம்கர் மாவட்டத்தைச் சார்ந்த முப்தி அபுல் பஷர் காசிமி என்பவர்தான் முக்கிய குற்றவாளி. ஜெய்ப்பூர், பெங்களூர், ஹைதராபாத் குண்டுவெடிப்புகளை இவர் நிகழ்த்தியுள்ளார். பின் இந்தூரில் வைத்து மார்ச் 2008-ல் கைது செய்யப்பட்டுள்ளார். ஒருங்கிணைப்பாளர் என்று சொல்லப்பட்ட சஜித் மன்சூரி என்பவர் அஹமதாபாத் காவல்துறையால் பருச்சில் வைத்து கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து நிறைய தகவல்கள் பெறப்பட்டுள்ளன. வாப்பியில் இருந்து அஹமதாபாத்திற்கு கைது செய்யப்பட்டுள்ளனர். யூனுஸ் மன்சூரிதான் குண்டுகளை ஒருங்கிணைத்ததாக கூறப்படுகிறது. மற்றவர்கள் வேவு பார்ப்பது, வாகனங்களைப் பெறுவது, குண்டுகளை வைப்பது மற்றும் மற்ற எடுபுடி வேலைகளை செய்வது போன்றவற்றிற்காக நியமிக்கபட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் சிமியை சார்ந்தவர்கள். ஆனால் இந்தியன் முஜாஹிதீன் என்ற பெயரில் இயங்கி வந்து கொண்டிருந்தனர். சூரத்தில் குண்டுகளை வைத்தவர்களும் இவர்கள்தாம்*

*மேற்சொன்ன தகவலை குஜராத் டி.ஜி.பி. பி.சி. பாண்டே அவர்கள் பத்திரிக்கையாளர் சந்திப்பில் கொடுத்தார். வழக்கை திசை திருப்பியதில் ஐ.பி. என்கிற மத்திய*

உளவுத்துறையின் பங்கு இருந்ததை இவர் ஒத்துக்கொண்டார்.

மும்பையைச் சார்ந்த தெளபீக் பிலால் என்கிற அப்துல் சுபானின் பெயரை, அஹமதாபாத் தீவிரவாத செயலின் மூளையாக செயல்பட்டான் என்று குஜராத் டி.ஜி.பி. குறிப்பிடாத போதும், கூடுதல் ஆய்வாளர், குஜராத் குற்றப்பிரிவு காவல்துறை மற்றும் மும்பை காவல்துறையும் அவன்தான் அச்செயலுக்கு மூளையாக செயல்பட்டான் என்று குறிப்பிட்டதாக மும்பை மற்றும் டெல்லியிலிருந்து வரும் பத்திரிக்கைகள் செய்தியை தந்தன. அவர் ஒரு கம்ப்யூட்டர் பொறியாளர் என்றும் புதிய கம்ப்யூட்டர் தொழில்நுட்பத்தைக் கையாளுவதில் அவர் திறமை வாய்ந்தவர் என்றும் கென் ஹேவுட்டின் கம்ப்யூட்டரில் புகுந்து இ.மெயிலை குண்டு வெடிப்பிற்கு சற்று நேரத்திற்கு முன் அனுப்பியதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் தெளபீக் பிலால் மற்றும் அப்துல் சுபான் என்பது ஒரே நபரா? அல்லது இரு வேறு நபர்களா? என்பதில் அஹமதாபாத் காவல் துறைக்கும் மும்பை குற்றப்பிரிவு காவல்துறைக்கும் இடையே எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை என தி டைம்ஸ் ஆப் இந்தியா, புனே, 18 ஆகஸ்ட் 2008 அறிக்கை தெரிவிக்கிறது.

அப்துல் பஷார் கும்பலை பற்றிய தகவல்கள் எவ்வாறு கிடைக்கப் பெற்றன என்பதை மூன்று கூறுகள் கூறுகின்றன.

(i) தங்களுடைய கவனங்களை வழக்கமில்லாத விவகாரங்களில் செலுத்திக் கொண்டிருக்கும்போதே, சதி செயலுக்கு மூளையாக செயல்பட்டவனையும் அவனது கும்பலையும் காவல்துறை அவர்களுடைய செல்போன் உரையாடல்களை ஒட்டுக் கேட்பதன் மூலம் பின் தொடர்ந்தனர். ஐந்து பிரி-பெய்டு மொபைல் போன்கள் ஒரே நேரத்தில் வாங்கப் பட்டுள்ளன. இவை அனைத்தும் இன்கமிங் அழைப்புக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. குண்டு வெடிப்பு நடந்த (ஜூலை 26) நாளில் திடிரென அனைத்து மொபைல் போன்களும் அணைக்கப்பட்டு விட்டன. இதுதான் காவல் துறைக்கு கிடைத்த மிகப் பெரிய தகவல். தற்செயலாக சிலரால் உஷார்படுத்தப்பட்டாலும், விசாரணை அதிகாரிகள் தங்களுக்குக் கிடைத்த ஆதாரங்களை அலசி ஆராய்ந்து குற்றவாளிகளை அடைவதற்கு மிகுந்த சிரமப்பட்டனர். ஒரு இடத்தைத் தேடும்போது சிம்கார்டை காவல்துறை கைப்பற்றியது என ஒரு செய்தித்தாளில் சொல்லப்பட்டுள்ளது.

(ii) கர்நாடகாவின் தாவன்கிரி மாவட்டத்தில் உள்ள ஹொன்னாலி என்ற இடத்தில் சாலை சோதனையின் போது ரியாஜிதீன் நசீர் என்ற சிமி உறுப்பினர் கைது செய்யப்பட்டார். இதுதான் தீவிரவாதிகளின் நெட்வொர்க் அறிய வழிவகுத்தது.

(iii) ஏழு வருடங்கள் தலைமறைவாக இருந்த சஜித் மன்சூரியை கைது செய்த பிறகு காவல்துறைக்கு தொடர் குண்டு வெடிப்பு குறித்து துப்பு துலங்கியது.(சாகால், புனே, தி டைம்ஸ் ஆப் இந்தியா, புனே மற்றும் புதாரி, புனே, 11 ஆகஸ்ட் 2008-ல் வெளிவந்த அனைத்தும் மற்றும் தி டைம்ஸ் ஆப் இந்தியா, புனே, 18 ஆகஸ்ட் 2008)

owned and Published by M. Gulam Mohamed From 52/1, Mannady Street, Mannady, Chenni - 600 001. Editor : M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street Chennai - 600 002.